கோகுலம்

GOKULAM

நவம்பர் 83 ரூ 2/-





ஜவாஹர்லால் நேரு
பிறந்தநாள்
நவம்பர்-14.



கோகுலம்

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா

1983 நவம்பர் மாத இதழ்
ஆண்டுச் சந்தா ரூ. 24/-
தனிப்பிரதி ரூ. 2/-



மலர்—1 இதழ்—10

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்

- பாரதியார்

அன்புள்ள சிறுவர் சிறுமியர்க்கு,

ஒருவருக்கு வயது 70.

அவரை நாம் எப்படி அழைப்போம்?

'தாத்தா' என்று அழைப்போம். ஆனால், 70 வயதான பிறகும் நேருஜியைக் குழந்தைகள் எப்படி அழைத்தார்கள்?

'தாத்தா' என்றா? இல்லை.

'நேரு மாமா', 'சாச்சா நேரு', 'அங்கிள் நேரு' என்று ஆசையோடு அழைத்தார்கள்.

இதற்கு என்ன காரணம்?

அவர் என்றும் இளமையாகவே இருந்தார்.

இளமையாக இருந்ததற்கு என்ன காரணம்?

ஒன்றல்ல: இரண்டல்ல: பல காரணங்கள் உண்டு.

அவர் குழந்தை உள்ளம் கொண்டிருந்தார். எப்போதும் சுறுசுறுப்பாக இருந்தார். நிமிர்ந்து நடந்தார். தினமும் தேகப்பயிற்சி செய்தார். குழந்தைகளோடு குழந்தையாகக் கொஞ்சிப் பேசி மகிழ்ந்தார். நல்லதையே நினைத்து நல்லதையே செய்து வந்தார்.

குழந்தைகளிடம் அவர் மிகுந்த அன்பு கொண்டிருந்ததால் தான், தமது பிறந்த நாளைக் குழந்தைகள் தினமாகக் கொண்டாட வேண்டும் என்றார்.

சென்ற இதழில் காந்தித் தாத்தா பிறந்தநாளில் பிறந்தவர்களின் படங்களை வெளியிட்டதுபோல், இந்த இதழில் நேரு மாமா பிறந்த நாளில் பிறந்தவர்களின் படங்களை வெளியிட்டிருக்கிறோம்.

இந்த நவம்பர் மாதத்தில் இரண்டு விழாக்களை நீங்கள் குதூகலமாகக் கொண்டாடப் போகிறீர்கள். ஒன்று நேரு மாமா பிறந்த குழந்தைகள் தினம். மற்றொன்று—? டப்... டப்... பட்... பட்... டமால்.... டுமீல் தீபாவளி!

உங்கள் அனைவருக்கும் 'கோகுல'த்தின் குழந்தைகள் தின வாழ்த்துக்கள்: அத்துடன் தீபாவளி வாழ்த்துக்கள்!

- அழ. வள்ளியப்பா

மின்மினிக் கதைகள்



நினைத்தபடி நடந்தது!

காட்டுப் பாதையில் ஒருவன் நடந்து போய்க்கொண்டிருந்தான். வெகுதூரம் நடந்ததால் களைப்பாக இருந்தது. அங்கிருந்த ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான். அதுதான் கற்பக மரம் என்பதும் நினைத்ததையெல்லாம் அது கொடுக்கும் என்பதும் அவனுக்குத் தெரியாது.

''களைப்பாக இருக்கிறது. ஒரு நல்ல படுக்கை இருந்தால்....?'' என்று நினைத்தான்.

உடனே அழகான படுக்கை வந்தது. அதில் படுத்துக் கொண்டான்.

களைப்புத் தீர்ந்ததும் பசி எடுத்தது. ''மிகவும் பசிக்கிறதே. சுவையான உணவு கிடைத்தால்...?'' என்று நினைத்தான்.

உடனே அறுசுவையுடன் கூடியஉணவு எதிரிலே வந்தது! வயிறு நிறையச் சாப்பிட்டான்.

பிறகு, ''இது அடர்ந்த காடாக இருக்கிறதே! திடீரென்று ஒரு புலி வந்து என்னைத் தாக்கினால்...?'' என்று நினைத்தான்.

உடனே புலி வந்தது. அவனைத் தாக்கியது. அவன் இறந்து போனான்.

திருடன் துறவியானான்!


ஒரு பணக்காரர் வீட்டுத் தோட்டத்திலே ஒரு குளம் இருந்தது. அதில் நிறைய மீன்கள் இருந்தன. ஒரு நாள் இரவு, ஒரு திருடன் அக்குளத்துக்குள் இறங்கி மீன் பிடித்துக் கொண்டிருந்தான்.

ஏதோ சத்தம் கேட்கிறதே என்று வீட்டுக்காரர் வேலைக்காரர்களை அனுப்பிப் பார்க்கச் சொன்னார். வேலைக்காரர்கள் வருவதை அறிந்த திருடன், அங்கிருந்த ஒரு மரத்தடியிலே போய் அமர்ந்தான். உடம்பு முழுதும் திருநீறு பூசிக் கொண்டான். தியானம் செய்வது போல் நடித்தான்.

வேலையாட்கள் வீட்டுக்காரரிடம் சென்று, ''நாங்கள் திருடனைக் காணவில்லை. தியானத்தில் இருக்கும் ஒரு துறவியைத்தான் கண்டோம்'' என்றார்கள். மரத்தடியில் ஒரு துறவி அமர்ந்து தியானம் செய்வதை வீட்டுக்காரரும் வந்து பார்த்தார். செய்தி ஊர் முழுவதும் பரவியது.

எல்லோரும் பால், பழம், பட்சணம், பூ ஆகியவற்றுடன் வந்து தரிசித்தார்கள். காணிக்கையும் செலுத்தினார்கள்.

அப்போது அந்தத் திருடன், ''நான் சாமியார் போல் நடிப்பதற்கே இந்தப் பொருள்களையெல்லாம் அடைய முடிகிறதே! நான் உண்மையிலேயே ஒரு சாமியாராகிவிட்டால்....? பரம்பொருளையே அடையலாம் அல்லவா?'' என்று நினைத்தான். அன்றுமுதல் அவன் துறவியானான்!



யாரை அழைப்பேன்?

காட்டிலே இராமர் வாழ்ந்து வந்தபோது, ஒரு நாள் குளிப்பதற்காக ஆற்றுக்குச் சென்றார். நீரில் இறங்குவதற்கு முன், தமது கையிலிருந்த கோதண்டத்தைத் தரையிலே குத்தி வைத்துவிட்டுச் சென்றார். திரும்பி வந்து கோதண்டத்தை எடுத்தபோது, அதன் நுனிப் பக்கத்தில் இரத்தம் படிந்திருந்ததைக் கண்டார்.

காரணம் என்ன என்று குனிந்து பார்த்தபோது, அங்கே சாகும் நிலையில் ஒரு தவளை கிடப்பதைக் கண்டு இராமர் துடி துடித்தார். ''ஐயோ! நீ இங்கே இருந்ததைப் பாராமல் கோதண்டத்தை உன்மீது குத்திவிட்டேனே! பாம்பு உன்னைப் பிடிக்க வரும்போது கூட நீ உரக்கக் கத்துவாயே! என் கோதண்டம் குத்தியும் சிறிதுகூடக் கத்தவில்லையே!'' என்று கண் கலங்கக் கூறினார்.

உடனே அந்தத் தவளை, ''பாம்பு போன்ற எதிரிகள் என்னைத் துரத்தும்போது நான், ''ராமா! ராமா!'' என்றுதான் அழைப்பேன். ஆனால், அந்த ராமனே என் மேல் குத்தும்போது, நான் யாரை அழைப்பது? என்றது.



தீப்பெட்டி தேடியவன்

நடு இரவிலே ஒருவன் பக்கத்து வீட்டுக்குப் போனான். வீட்டுக் கதவைத் தட்டினான். பல தடவைகள் பலமாகத் தட்டிய பிறகு தூங்கிக் கொண்டிருந்தவர்கள் விழித்து எழுந்தார்கள். கதவைத் திறந்து பார்த்தார்கள். பக்கத்து வீட்டுக்காரர் எரிகின்ற மண்ணெண்ணெய் விளக்கு ஒன்றைக் கையில் பிடித்தபடி நின்றுகொண்டிருந்தார்.

''என்ன வேண்டும்?'' என்று கேட்டார்கள்.

''என் சுருட்டைப் பற்ற வைக்கத் தீப்பெட்டி வேண்டும்'' என்றார் அவர்.

''ஏனய்யா, எரிகின்ற விளக்குக் கையிலே வைத்துக் கொண்டு இப்படி இரவு நேரத்திலே எங்களைத் தொந்தரவு செய்கிறீரே?'' என்றார் வீட்டுக்காரர்.

''ஓ! ஆமாம். இந்த விளக்கைக் நான் சுருட்டைப் பற்றவைத்துக் கொள்கிறேன்'' என்று கூறிவிட்டுத் திரும்பினார் அந்த மனிதர்!



ஆட்டுப் புலியும் காட்டுப் புலியும்

ஒரு புலி ஆட்டு மந்தையை விரட்டிச் செல்லும்போது, குட்டி போட்டுவிட்டு அங்கேயே இறந்து போனது. அந்தப் புலிக் குட்டி ஆடுகளுடனேயே வளர்ந்ததால் தன்னையும் ஓர் ஆடாகவே நினைத்துக் கொண்டது. ஆட்டைப் போலவே கத்தியது; புல் தின்றது.

ஒரு நாள் ஆட்டு மந்தையைத் தாக்க வந்த காட்டுப் புலி, இந்த ஆட்டுப் புலியைப் பார்த்தது. உடனே இதன் மேல் பாய்ந்து பிடித்து இழுத்துச் சென்றது. சிறிது தூரம் சென்றதும், ''நீ என்னைப் போல ஒரு புலி. நீ ஆட்டு மந்தையுடன் இருக்கலாமா?'' என்று கேட்டது.



ஆட்டுப் புலி கதறி அழுதது. ''என்னை விட்டு விடுங்கள். என்னால் என் இனத்தை விட்டுப் பிரிந்திருக்க முடியாது'' என்று கெஞ்சியது.

உடனே காட்டுப் புலி, ஆட்டுப் புலியை ஒரு குட்டைக்கு அழைத்துச் சென்று, ''இந்த நீரிலே உன் உருவத்தைப் பார். என் உருவத்தையும் பார். நீ ஒரு புலியா அல்லது ஆடா என்பது தெரியும்.'' என்றது.

நீரிலே இரண்டு உருவங்களையும் பார்த்த பிறகுதான் ஆட்டுப் புலிக்கு நம்பிக்கை வந்தது. அப்போது, காட்டுப் புலி, அதன் வாயில் ஒரு சிறிய இறைச்சித் துண்டைத் திணித்தது. அது மிகவும் சுவையாக இருந்தது.

அப்புறம்....?

அப்புறம் என்ன? 'புலியாகிய நான் இனிமேல் புலியுடன்தான் இருப்பேன். ஆட்டு மந்தையில் இருக்க மாட்டேன்'' என்று கூறி அந்தப் புலியைப் பின்தொடர்ந்து காட்டுக்குள் கம்பீரமாகச் சென்றது.

பாம்புக்கு உபதேசம்

ஒரு கொடிய நாகப் பாம்பு பலரைக் கடித்துக் கொன்று விட்டதாக ஒரு சாது கேள்விப்பட்டார். உடனே அந்தப் பாம்பைக் கண்டு அதற்கு ஒரு மந்திரத்தைச் சொல்லிக் கொடுத்தார். ''இனிமேல் நீ யாரையும் தீண்டக் கூடாது'' என்றும் உபதேசித்தார்.


பாம்பு அன்றுமுதல் யாரையும் தீண்டுவதில்லை. பேசாமல் படுத்திருக்கும். அதைக் கண்ட சிறுவர்கள் அதன் மேல் கல்லை எறிந்தார்கள்; காயப்படுத்தினார்கள்; மிகுந்த தொல்லை கொடுத்தார்கள்.

ஒரு நாள் அதன் வாலைப் பிடித்துச் சுழற்றித் தரையிலே அடித்தார்கள். அது இரத்தம் கக்கி மயக்கமாகக் கிடந்தது. அது செத்துப் போனதாக நினைத்து எல்லோரும் போய்விட்டார்கள். ஆனால் அது சிறிது நேரத்தில் மயக்கம் தெளிந்து அருகில் இருந்த வளைக்குள் புகுந்து மறைந்து கொண்டது.

ஓராண்டு சென்று சாது அவ்வழியாக வந்தார். அவரிடம் பாம்பு செத்துப் போய்விட்டதாக அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். சாது அதை நம்பாமல், பாம்பு இருக்கும் இடத்தைத் தேடிக் கண்டுபிடித்து விட்டார்.

பாம்பு துரும்பாக இளைத்து இருந்தது. நடந்ததையெல்லாம் பாம்பு சொன்னது. அதைக் கேட்ட சாது, ''நீ ஒரு மடையன். உலகில் வாழத் தெரியாதவன். 'யாரையுமே நீ தீண்டக் கூடாது' என்றுதானே நான் சொன்னேன்? 'சீறக் கூடாது' என்று சொன்னேனா? அருகில் வருவோரைப் பார்த்து நீ சீறியிருந்தால், அவர்கள் பயந்து ஓடியிருப்பார்கள்! உனக்கு இந்தக் கதி வந்திருக்காதே!'' என்றார்.

கதைக் கருத்து: **இராமகிருஷ்ண பரமஹம்சர்**



எங்கள் நேருஜி

உலகமெலாம் போற்றிவரும்
எங்கள் நேருஜி
உண்மைக்காந்தி பரம்பரையாம்
எங்கள் நேருஜி
நலங்களெல்லாம் தேடித்தந்த
எங்கள் நேருஜி
நாட்டுக்காகப் பாடுபட்ட
எங்கள் நேருஜி.

மழலைப் பேச்சுக் கேட்டதுமே
எங்கள் நேருஜி,
மனத்தையெல்லாம் பறிகொடுப்பார்
எங்கள் நேருஜி
குழந்தையோடு குழந்தையாக
எங்கள் நேருஜி
கூடிஆடிக் குதித்திடுவார்
எங்கள் நேருஜி.

எத்திசையும் புகழ்பரவ
எங்கள் நேருஜி
இந்தியாவை நடத்திச்சென்ற
எங்கள் நேருஜி
உத்தமரில் உத்தமராம்
எங்கள் நேருஜி
உறுதிகொண்ட நெஞ்சினராம்
எங்கள் நேருஜி.

தக்கவழி காட்டிவந்த
எங்கள் நேருஜி
தடைகளெல்லாம் தகர்த்துவந்த
எங்கள் நேருஜி
மக்களுக்குள் மாணிக்கமாம்
எங்கள் நேருஜி
வாழ்க!வாழ்க! எங்கள்நெஞ்சில்
என்றும் நேருஜி!



அட்டைப்பட வண்ணப்படம்: 'இயாகா'

இந்த இதழ் எழுத்தாளர்கள்



டி. ஜெயந்தி



எஸ். விஜயா சீனிவாசன்



சிந்திக்கனல்



'செம்பூர் சந்துரு'



கோ. மா. கோதண்டம்



'பட்டுக்கோட்டை ராஜா'

நேருஜி பிறந்த நாளில்

எஸ். பெரியண்ணன்,
மணப்பாறை



பி. வேலவன்,
பெங்களூர்



ஆர். கோபால சுப்பிரமணியம்,
சேலம்-6



கிருஷ்ண பிரசாத்,
சென்னை-1



ஜி. சத்திய நாராயணன்,
சென்னை-62



அ. அரபிந்தோ கணேஷ்,
சென்னை-49



ஜெ. குமாரராஜா,
பள்ளிபாளையம்



எம். சிவராம கிருஷ்ணன்,
வீரகொமணி



கே. பால சுப்பிரமணியன்,
பழனி



எம். எச். சாதிக்பாட்சா,
நெய்வாசல்



கே. சதீஷ்குமார்,
மதுரை-16



பி. ராகவ்,
திருப்பத்தூர் (வ. ஆ.)



ஆர். பாஸ்கர்,
மதுரை-16



அ. வெங்கட சுப்பிரமணியன்,
இஞ்சவை
கிராமம்



எஸ். நாராயணமூர்த்தி,
LONOVLA,
MAHARASHTIRA



மு. ஜவகர் குமார்,
கோவில்பட்டி



சி. பிரசாந்த் குமார்,
கொள்ளிடம்



ரா. சிவராம்,
குடியாத்தம்



க. ஜவஹர் கண்ணன்,
ஸ்ரீவில்லிபுத்தூர்



மறைந்தவர்கள்

ஜா. ராமகிருஷ்ணன், சென்னை-33



சாலிக் கல்யாணி, நெகமம்



சுரேஷ்குமார், கொட்டகமாங்குடி



எஸ். கண்மணி, ஷிமோகா



தா. அனு, இலந்தவிளை



ஜி. அனுராதா, குளத்துப்புழா



சி. ஜெயப்ரியா, சென்னை-93



த. மகாதனலட்சுமி கே. என். புரம்



கே. விஜயராணி, கோடங்கால்



வி. வனிதா தேவி, கொன்னிடம்



பரணி கோமதி, சென்னை-15



டி. எஸ். ஸ்வர்ணலதா கோவை



ஜெ. மோகனலதா, சேலம்-1



எல். சத்யா, சோமனூர்.



சி. முத்துக்குமாரி, கோவை-22



இ. ப்ரியா, செங்குட்டை



எஸ். ஷாலி சாமுவேல், சென்னை-12



பி. ராஜலட்சுமி, சென்னை-63



ச. திரலட்சுமி, மதுரை





ஜப்பான் தேசத்து குட்டிக் கதைகள்

தேவி

பத்தாயிரம் வைரங்கள்



ஒரு ஜப்பானியப் போர் வீரன். ஒருமுறை கடற் கரை ஓரமாக நடந்து சென்றான். அப்போது பூதம் போன்ற ஒரு விலங்கைக் கண்டான்.

வீரன் கத்தியை அந்த மிருகத்தை நோக்கி வீசப் போனான். அப்போது அந்த அபூர்வ மிருகம் அவனைப் பரிதாபமாகப் பார்த்தது. வீரன் அம்மிருகத்திடம், ''நீ யார்?'' என்று கேட்டான். அதற்கு அந்த மிருகம், ''என் பெயர் செம்பிட்டோ. நான் கடல் ராஜனின் கோபத்திற்கு ஆளானதால் என்னைக் கடலை விட்டு வெளியேற்றி விட்டது. நான் நிலத்தில் இருப்பதால் நீ கொலை செய்யாவிட்டாலும், விரைவிலேயே இறந்து விடுவேன்'' என்றது.

வீரன் அந்த மிருகத்தின் மீது இரக்கம் கொண்டான். அதைத் தன் வீட்டிற்குக் கொண்டு சென்றான். அதற்காக ஒரு பெரிய குளத்தை ஏற்படுத்தி அந்த நீருக்குள் அதை வாழச் செய்தான். தினமும் நிறைய மீன்கள் பிடித்து வந்து அதற்குச் சாப்பிடக் கொடுத்தான்.

இவ்வாறு நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. அந்த வீரன் ஓர் அழகான பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள நினைத்தான். ஆனால், அந்தப் பெண் ''பத்தாயிரம் வைரங்கள் கொடுத்தால்தான் திருமணம் செய்துகொள்வேன்'' என்று கூறி விட்டாள். வீரனால் அவற்றைக் கொடுக்க முடியாது. அந்தக் கவலையில் வீரன் சாப்பிடவில்லை. தண்ணீர்கூடக் குடிக்கவில்லை. இப்படி இருந்ததால், அவன் உயிருக்கே ஆபத்து என்ற நிலை வந்து விட்டது!

வீரனின் வீட்டில் வளர்ந்து வந்த செம்பிட்டோ, 'நம் எஜமானனுக்கு என்ன ஆயிற்று? ஏன் இப்படிக் கவலையாக இருக்கிறார்?' என்று நினைத்தது. அது குளத்தை விட்டு வெளியில் வந்து எஜமானரிடம் அவர் கவலைக்குக் காரணம் என்ன என்று கேட்டது.

வீரனோ சுவரைப் பார்த்தபடி, ''செம்பிட்டோ, நாம் பிரியப் போகிறோம். நான் சாகும் நிலையில் இருக்கிறேன்'' என்றான். இதைக் கேட்ட மிருகம் துக்கத்தால் கண்ணீர் வடித்தது. கண்ணீர்த் துளி ஒவ்வொன்றும் ஒரு வைரமாகத் தரையில் விழுந்தது. அதைக் கண்ட வீரன் மகிழ்ச்சியினால் துள்ளி எழுந்தான். வைரங்களைப் பொறுக்கியபடியே, ''செம்பிட்டோ, என்னை நீ காப்பாற்றிவிட்டாய்!'' என்றான். அவன் கூறிய உடனேயே அந்த மிருகம் அழுவதை நிறுத்தி விட்டது. வைரமும் விழவில்லை. வீரன் அந்த மிருகத்தை ''மீண்டும் அழு'' என்று கூறினான். ஆனால், அந்த மிருகம், ''எனக்குக் கவலை ஏற்படும்போது மட்டும் தான் அழுகை வரும். உன் மகிழ்ச்சியைக் கண்டதும் என் கவலை பறந்து விட்டது!'' என்று கூறியது.

வீரன் தன் திருமணத்துக்குத் தேவையான பத்தாயிரம் வைரங்களில் பாதி கிடைத்து விட்டது; மீதி எப்படிக் கிடைக்கும் என்று கவலைப் பட்டான். அந்த மிருகமும் அவனுக்காக இரக்கப் பட்டது. சிறிது நேரம் அவனுக்கு எப்படி உதவலாம் என யோசித்தது. அதற்கு ஒரு வழி தோன்றியது. அது வீரனிடம் ''என்னைக் கடற்கரைக்கு அழைத்துச் செல். அந்த இடத்தைக் கண்டதும் எனக்குப் பழைய நினைவுகள் வரும். அந்த இடத்தில் வாழ முடியவில்லையே என்று கவலைப்படுவேன். உடனே அழுகை வரும். உனக்கு வைரம் கிடைக்கும்'' என்றது.

வீரனும் அந்த மிருகம் கூறியபடியே கடற் கரைக்கு அதை அழைத்துச் சென்ருன். மிருகம் அழுதது. வீரனுக்கு மீதம் தேவையான வைரங்களும் கிடைத்தன. அப்போது கடலுக்குள் இருந்து ஒரு குரல் வந்தது. 'செம்பிட்டோ, உன்னை மன்னித்து விட்டோம். நீ கடலுக்குள் வரலாம்'' என்று கேட்டது. அது கடல் ராஜனின் குரல் தான்!

செம்பிட்டோ மகிழ்ச்சியுடன் வீரனிடம் விடை பெற்றுக் கடலுக்குள் சென்றது. வீரனும் அதை அனுப்பி விட்டுத் தன் திருமண ஏற்பாட்டைக் கவனிக்க மகிழ்ச்சியுடன் திரும்பினுன்.

இறந்த பின்னும் எஜமானனுக்கு உதவி

வளர்ப்பதற்கு யாரும் இல்லாததால், தெருவில் அலைந்து கொண்டிருந்த ஒரு நாயை வயதான ஒரு பெண்மணி எடுத்து வளர்த்து வந்தாள். நாள் செல்லச் செல்ல அப் பெண்மணியும் அவள் கணவனும் அந்த நாயைப் பாசமாக ஒரு குழந்தையைப் போல் வளர்த்து வந்தனர்.

ஆனல், அவர்கள் வீட்டுக்குப் பக்கத்தில் இருந்தவர்கள் வேண்டுமென்றே அந்த நாயைத் திட்டி அடித்துத் துன்புறுத்தினர்கள்.

ஒரு நாள் வயதான தம்பதியர் அவர்கள் வீட்டுத் தோட்டத்தில் உட்கார்ந்திருக்கும்போது அந்த நாய் ஓர் இடத்தை மிகவும் ஆவலுடன் தோண்டிக் கொண்டிருந்தது. அதைக் கண்ட முதியவர் அங்கு ஏதேனும் இருக்க வேண்டும் என்று எண்ணி மண் வெட்டியைக் கொண்டு வந்து மேலும் தோண்டினர். அங்கு தங்கக் கட்டிகள் இருந்தன. வயதான தம்பதிகள் மிகவும் மகிழ்ந்தனர். அன்று இரவு அவர்களும் அந்த நாயும் நல்ல விருந்து சாப்பிட்டுவிட்டுத் தூங்கினர். மறுநாள் அவர்கள் தங்களுக்குக் கிடைத்த தங்கக் கட்டிகளைத் தங்களைச் சுற்றியிருந்த ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்தனர்.

இதை அறிந்த பக்கத்து வீட்டுக்காரர்கள் அந்த நாயைத் தங்களிடம் ஒரு நாள் தந்து வைக்கும்படி கேட்டார்கள். அவ்வாறே நாய் அங்கு சென்றது. அன்றிரவு அந்த நாய் ஒரு குழி தோண்டியது. அதைக் கண்டவுடன் அந்த வீட்டுக்காரர் மண் வெட்டி கொண்டுவந்து அந்த இடத்தைத் தோண்டிப் பார்த்தார்.



அங்கு உடைந்த சாமான்களும், எலும்புகளும் மட்டுமே இருந்தன. அவருக்குக் கோபம் வந்தது. உடனே அந்த மண்வெட்டியினலேயே அந்த நாயை வெட்டிக் கொன்று புதைத்து விட்டார்.

முதிய தம்பதியினர் நாயைக் காணவில்லை என மிகவும் கவலைப்பட்டனர். அன்றிரவு முதியவர் கனவில் வந்தது அந்த நாய். அது முதியவரிடம், ''என்னைப் புதைத்த இடத்திற்கு அருகில் உள்ள மரத்தை வெட்டி, அதைக் கொண்டு ஒரு உரல் செய்து வைத்துக் கொள்ளுங்கள். அதைப் பயன்படுத்தும்போது, என்னை நினைத்துக் கொள்ளுங்கள்'' என்றது. முதியவரும் அவ்வாறே செய்வதாகச் சொன்னர். ஒருநாள் அவர் மனைவி அந்த உரலில் இடிப்பதற்காக அரிசியைப் போட்டாள். அது தங்கமாக மாறியது.

அவர்கள் அந்த உரலை யாரையும் பயன்படுத்த விடுவதில்லை. ஆனல், ஒரு நாள் அந்தப் பக்கத்து வீட்டுக்காரர்கள் அந்த உரலில் அரிசியைப் போட்டனர். அது ஒருவித நாற்றத்துடன் மண்ணுக மாறியது. அதனல் கோபம் கொண்ட அவர், அந்த உரலை எரித்து விட்டார்.

முதியவர் கனவில் அன்று இரவு நாய் தோன்றி, ''என்னை எரித்த இடத்தில் உள்ள சாம்பலை எடுத்து உங்கள் தோட்டத்தில் உள்ள பட்டுப்போன செர்ரிச் செடியின் மீது தூவுங்கள். அது துளிர் விட்டுப் பிழைத்துக்கொள்ளும்'' என்று கூறியது. அதன்படியே முதியவரும் செய்தார். செடி தழைத்தது. அருகில் உள்ள ஏழைகளின் வீட்டில் உள்ள பட்டுப்போன செடிகளின் மேலும் தூவினர். அவை தழைத்தன.

இதைக் கேள்விப்பட்ட அரசன் அவரை அழைத்து அரண்மனைத் தோட்

டத்திலும் அவ்வாறே செய்யச் சொன்னார். அவையும் தழைத்தன. அரசர் மகிழ்ந்து பல பரிசுகள் வழங்கினார்.

பக்கத்து வீட்டிலிருந்த கொடுமைக்காரத் தம்பதிகள் உரலை எரித்த இடத்திலிருந்த சாம்பலை எடுத்துக்கொண்டு அரசரிடம் சென்றனர். அரசரிடம், ''நாங்களும் பட்டுப் போன செடிகளைப் பிழைக்க வைப்போம்'' என்று கூறிச் சாம்பலைத் தூவினர். செடிகள் அப்படி அப்படியே இருந்தன. அரசர் அவர்களைச் சரியானபடி தண்டித்து அனுப்பினார்.



பூதம் ஒழிந்தது


ஜப்பானில் ஒரு வேட்டைக்காரன், மான் வேட்டைக்காகத் தன் வீட்டை விட்டு வந்து வெகு தூரத்தில் தங்கி இருந்தான்.

ஒரு நாள் மாலை வேளையில் அந்த வேட்டைக்காரன் அருகில் இருந்த மலையில் ஏறி அங்கே தெரிந்த கோவிலுக்குச் சென்றான். அங்கு ஒரு மூலையில் படுத்துத் தூங்கினான்.

ஒரு பெரிய சப்தம் கேட்டது. வேட்டைக்காரன் விழித்துக் கொண்டான். கோவிலின் உடைந்த மேல் தளத்தின் வழியாகச் சிறிது வெளிச்சம் வந்தது. அந்த வெளிச்சத்தில் பன்னிரண்டு பூனைகள் பாட்டுப் பாடி, ஆடிக் கொண்டிருந்தது தெரிந்தது. ஆச்சரியமான விஷயம் என்னவென்றால் அவை அனைத்தும் மனிதர் போலப் பேசின. வேட்டைக்காரன் அவற்றின் பேச்சிலிருந்து அவை மகிழ்ச்சியாகப் பெரிய விருந்துக்குக் காத்திருக்கின்றன என்று புரிந்து கொண்டான். மேலும் அந்தப் பூனைகள் இது ''ஷிப்பிட்ரோவுக்குத் தெரிந்துவிடக் கூடாது'' என்று பேசியதையும் கேட்டான்.

மறுநாள் காலையில் கிளம்பி அவன் அருகில் உள்ள கிராமத்திற்குச் சென்றான். அங்கு வழியில் ஒரு சிறுவன் அழுவதைக் கண்டான். அதற்குக் காரணம் என்ன என்று கேட்டான். அதற்குச் சிறுவன், ''நேற்று இரவு என்னுடைய அக்காவைப் பூதத்துக்குப் பலி கொடுத்து விட்டோம்'' என்று கூறி அழுதான்.

''அது என்ன பூதம்? எதற்காகப் பலி கொடுப்பது?'' என்று கேட்டான் வேட்டைக்காரன்.



பாரதமாதா என்றால் என்ன?

நேருஜி ஒரு கூட்டத்தில் பேசும்போது கூறினார்:

''நீங்களெல்லாம் 'பாரத மாதாவுக்கு—ஜே!'- அதாவது 'பாரத மாதா—வாழ்க!' என்று முழங்குகிறீர்களே, 'பாரத மாதா' என்றால் என்ன? நீங்கள், நான், நம்மைப் போன்ற கோடிக்கணக்கான மக்கள் ஒன்று சேர்ந்தது தான் பாரத மாதா. நாம் ஒவ்வொருவரும் இந்த பாரத மாதாவின் ஓர் உறுப்பு. எல்லா உறுப்புகளும் நன்றாக இருந்தால்தானே பாரத மாதா சுகமாக வாழ முடியும்? ஏதேனும் ஓர் உறுப்புக்குத் துன்பம் என்றாலும், பாரத மாதா நிம்மதியாக இருக்க முடியுமா?

இதை நன்குணர்ந்து நாம் அனைவரும் ஒருவருக்கு ஒருவர் உதவுவோம். ஒன்றுபட்டு வாழ்வோம். ஓயாமல் உழைப்போம்.''

சிறுவன், ''அந்தப் பூதம் அருகில் உள்ள குன்றில் இருக்கிறது. இங்குள்ள ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒரு நாளைக்கு ஒரு பெண் வீதம் பலி கொடுக்க வேண்டும். இல்லையெனில் அது அம்புகளைக்கிராமத்திற்குள் எறிந்து எல்லாரையும் கொன்றுவிடும். இந்த முறை எங்கள் குடும்பத்தி லிருந்து பெண் கொடுக்க வேண்டும். எனவே தான் என் சகோதரியைப் பெட்டியில் வைத்து அந்தப் பாழடைந்த கோவிலில் கொண்டு போய் வைத்தோம்'' என்று கூறினான்.

சற்று நேரம் யோசித்த வேட்டைக் காரன் ''ஷிப்பிட்ரோ என்பது யார்?'' என்று கேட்டான்.

''இளவரசனிடம் உள்ள பெரிய நாயின் பெயர் ஷிப்பிட்ரோ'' என்று கூறினான் சிறுவன்.

வேட்டைக்காரன் இளவரசனிடம் சென்று பூதத்தை ஒழிக்கத் தான் ஒரு திட்டம் போட்டிருப்பதாகவும், அதற்கு ஷிப்பிட்ரோவின் உதவி தேவை என் றும் கூறி அந்த நாயை அழைத்துச் சென்றான்.

அன்றிரவு நாய் ஷிப்பிட்ரோவை ஒரு பெட்டியில் வைத்துப் பாழடைந்த கோவிலுக்குக் கொண்டு போய் வைத் தனர். வேட்டைக்காரன் தூணுக்குப் பின்புறம் நின்று கொண்டான். பூனைகள் பல பின் தொடர, ஒரு பெரிய பூதம் அங்கே வந்தது. பெட்டியின் பூட்டை உடைத்தது. மறு விநாடி பெட்டிக்குள் இருந்த நாய் குபீ ரென்று பாய்ந்து, பூதத்தின் தொண் டையைப் பிடித்துக் கொண்டது. வேட் டைக்காரன் ஓடிவந்து அதன் கழுத் தைச் சீவிவிட்டான். வேட்டைக்கார னும் நாயும் சேர்ந்து பூனைகளைக் கொன்று தீர்த்தார்கள்.

பிறகு எந்தப் பூதமும் அந்தக் கிரா மத்து மக்களைத் துன்புறுத்துவதில்லை. அந்த வட்டாரத்தில் ஷிப்பிட்ரோவை யும், வேட்டைக்காரனையும் அனைவரும் மதித்துப் போற்றினர்.

முதல் கடமை, இரண்டாவது கடமை, மூன்றாவது கடமை

ஒருசமயம் குழந்தைகளிடம் நேரு மாமா கூறினார்:—

''நீங்கள் மாணவர்களாயிருக்கும் போது நேரத்தை வீணாக்கவே கூடாது. நான் மாஸ்கோ போயிருந்த போது, சுவரில் தீட்டப்பட்டிருந்த ஓர் ஓவியத்தைக் கண்டேன். அதில் லெனினும் சில மாணவர்களும் இருந்தார்கள். மாணவர் களைப் பார்த்து லெனின் சொன்ன புத்திமதி அதில் எழுதப்பட்டிருந்தது. லெனின் சொன் னது என்ன தெரியுமா?

'மாணவர்களாகிய நீங்கள் செய்ய வேண்டிய முதல் காரியம், நன்றாகப் படிக்க வேண்டும்: இரண்டாவது காரியம் நன்றாகப் படிக்க வேண்டும். மூன்றாவது காரியமும் நன்றாகப் படிக்க வேண்டும்.''



இதிலிருந்து மாணவர்கள் செய்ய வேண்டியது என்ன என்பது தெரிகிறதல்லவா?'' என்று நேருஜி கேட்டார்.

கேள்வி நேரம்



கேள்வி கேட்பவர்: தேனி முருகேசன்
பங்கு கொள்வோர்: எம். கார்த்திகேயன்
டி. சசிகலா
எல். லிங்கராஜ்

தேனி முருகேசன்: 'என் அரசியல் வாரிசு' என்று மகாத்மா காந்தி ஒருவரைப் பற்றிச் சொன்னார். அந்த ஒருவர் யார்?

சசிகலா: நேரு மாமாதான்.

தேனி: பேஷ்! என் முதல் கேள்விக்கே சரியான விடை கிடைத்து விட்டது! சரி, இராமேஸ்வரத்திலுள்ள சுவாமி பெயர் இராமலிங்கம். இராமநாத சுவாமி என்றும் சொல்கிறார்கள். அம்மன் பெயர் தெரியுமா?

கார்த்திகேயன்: பர்வதவர்த்தினி.

தேனி: சரியாகச் சொன்னாய். 'கலிவரின் பயணங்கள்' (Gulliver's Travels) என்ற கதையை எழுதியவர் யார்?.

லிங்கராஜ்: எச். கிருஷ்ணமூர்த்தி.

கார்த்தி: ஐயையோ! அந்தக் கிருஷ்ணமூர்த்தி நம் கோகுலத்தில் உலகப் புகழ் பெற்ற சிறுவர் கதைகளைத் தமிழிலே சுருக்கித் தருபவரல்லவா? ஆனால், ஆங்கிலக் கதையை எழுதியவர்... கோகுலத்தில் கூடப் படித்தேனே!... ம்...ம்.... ஸ்விப்ட் என்பவர்தான்.

தேனி: அவரது முழுப் பெயர் தெரியாதா?

கார்த்தி: இதோ சொல்கிறேன். சோமநாதன்... இல்லை, இல்லை. ஜொனாதன் ஸ்விப்ட். சரிதானே அண்ணா?

தேனி: ரொம்ப கரெக்ட்.
Jonathan Swift என்பவர்தான் கலிவரின் பயணங்களை எழுதினவர்... இலங்கைக்கு ஸ்ரீலங்கா என்று புதிய பெயர் சூட்டியது எப்போது என்று கூற முடியுமா?

லிங்க: அது குடியரசு நாடானபோது.

தேனி: சரியான விடை. 1972-ஆம் ஆண்டில் அது குடியரசானது. அப்போது ஸ்ரீலங்கா என்று பெயர் சூட்டினார்கள்... நம்முடைய ராஜாஜி, பெரியார் இருவரும் 94 ஆண்டுகள் வாழ்ந்தனர். இவர்களைப் போலவே

94 ஆண்டுகள் வாழ்ந்தார் ஓர் ஆங்கில நாடக ஆசிரியர். அவர் பெயர் தெரியுமா?

சசி: ஷேக்ஸ்பியர்.

தேனி: இல்லே. அவர் 52ஆம் வயதிலேயே காலமாகி விட்டார்.

கார்த்தி: பெர்னார்ட் ஷா.

தேனி: ஆம். 50க்கு மேற்பட்ட ஆங்கில நாடகங்களை எழுதிப் புகழ் பெற்ற ஜார்ஜ் பெர்னார்ட் ஷாதான் 94 ஆண்டுகள் வாழ்ந்தவர். சரி, அவர் எந்த ஊரில் பிறந்தார்?

கார்த்தி: லண்டனில்.

தேனி: தவறு.

லிங்க: அயர்லாந்தில்.

தேனி: அவர் பிறந்தது அயர்லாந்து நாட்டில்தான். ஆனால், நான் கேட்டது எந்த ஊரில் என்றல்லவா?

எல்லாரும்: (மௌனம்)

தேனி: சரி, நானே சொல்லி விடுகிறேன். அவர் பிறந்தது அயர்லாந்தின் தலைநகரான டப்ளினில்... ஒரிசா மாநிலத்தின் இப்போதைய தலைநகரம் புவனேஸ்வரம். முன்பு எது தலைநகரமாக இருந்தது?

லிங்க: கட்...

தேனி: என்ன, பாதியிலே கட் பண்ணி விட்டாயே! முழுப் பெயர் நினைவுக்கு வரவில்லையோ?

லிங்க: இதோ வந்து விட்டது. கட்டாக்.

தேனி: சரியான விடை... 'இந்தியாவின் வாயில்' (Gate way of India) என்று எந்த நகரத்தைச் சொல்கிறார்கள்

கார்த்தி: டில்லி.

லிங்க: இல்லே. கல்கத்தா.

தேனி: இரண்டுமே தவறு

சசி: பம்பாய்.

தேனி: பம்பாய் என்பது சரிதான். ஆனால், ஒவ்வொரு நகரமாகச் சொல்லிக்கொண்டே வருவது அவ்வளவு சரியில்லேயே! வெளி நாட்டு வர்த்தகத்திற்கு பம்பாய் மையமாக விளங்குவதால், அதை 'இந்தியாவின் வாயில்' என்று கூறினர்கள். பொருத்தம்தானே!... நேப்பாளத்தின் தேசியச் சின்னம் எது?

லிங்க: எருமை.

தேனி: இல்லே.

கார்த்தி: மாடு.

தேனி: இல்லே, சசி, உனக்குத் தெரியுமா ... சரி, நானே சொல்கிறேன். சிவபெருமானின் உருவம் பொறித்த முத்திரைதான் நேப்பாளத்தின் தேசியச் சின்னம்... திரு வி. க. இரண்டு கல்வி நிலேயங்களில் ஆசிரியராக இருந்தார். இரண்டாவதாக இருந்தது சென்னே வெஸ்லி கல்லூரியில். முதலில் எந்தப் பள்ளியில் வேலே பார்த்தார், தெரியுமா?

எல்லாரும்: (மௌனம்)

தேனி: யாருக்குமே தெரியாதா? அவர் சென்னே ஆயிரம் விளக்குப் பகுதியில் இருந்த ஓர் ஆதித்திராவிடர் பள்ளியில்தான் முதல் முதலாக ஆசிரியர் வேலே பார்த்தார்.



இதோ இந்தப்படத்தைப் பாருங்கள். இது என்ன என்று தெரிகிறதா?

சசி: உடுக்கு.

தேனி: இல்லே. நன்றாகப் பாருங்கள்.

கார்த்தி: மணற் கடிகாரம்.

தேனி: அடே, கார்த்திக் சரியாகச் சொல்லி விட்டானே! முற்காலத்தில் எல்லாம் நிழற் கடிகாரம், நீர்க் கடிகாரம், மெழுகுவர்த்திக் கடிகாரம் என்று பல வகைக் கடிகாரங்கள் இருந்தன. அவற்றிலே ஒன்றுதான் இது. இந்தக் கண்ணாடிப் பாத்திரம் உடுக்கைப் போல் இருக்கிறது. மேலே ஒரு கூம்பு, கீழே ஒரு கூம்பு. இரண்டையும் இணைக்கும் இடம் மிகவும் குறுகலாக இருக்கிறது. மேல் கூம்பிலே உலர்ந்த மணலேக் கொட்டி வைப்பார்கள். அது ஒரே சீராகக் கீழே உள்ள கூம்பில் விழும். விழுகின்ற மணலின் அளவைக் கொண்டு காலத்தைக் கணக்கிட்டார்கள்.... இப்போது காண்டா மிருகத்தைப் பற்றி ஒரு கேள்வி. அது இவ்வளவு பருமனாக இருக்

றதே, அது எந்த மிருகத்தை விரும்பிச் சாப்பிடும்?

சசி: ஐயையோ, அது மாமிசத்தையே தொடாதே! புல், பூண்டு, தழைகளைத்தான் தின்னும்.

தேனி: சசிகலா சரியாகச் சொன்னாள். சென்னையில் 'கன்னிமாரா நூல் நிலையம்' என்று ஒரு பெரிய நூல் நிலையம் இருக்கிறதே. இதற்கு இப் பெயர் எப்படி வந்தது?

கார்த்தி: வெள்ளைக்காரர்கள் 'கன்னி மேரி நூல் நிலையம்' என்று பெயர் வைத்திருப்பார்கள். அதுதான் 'கன்னி மாரா' என்று மாறிவிட்டது.

தேனி: விடை தவறு. ஆனால் நல்ல கற்பனை! சசி, லிங்கராஜ், உங்களுக்குத் தெரியுமா?

இருவரும்: தெரியாது.

தேனி: கன்னிமாரா என்ற ஆங்கிலேயர் சென்னையில் கவர்னர். அவர் பெயரால் 1896ல் தொடங்கப்பட்டது தான் 'கன்னிமாரா நூல் நிலையம்' ...இப்போது சில அரசியல் தலைவர்கள் நெடுந் தூரம் பாத யாத்திரை போகிறார்கள். இமய முதல் குமரி வரை நடந்தே சென்று, தம் குருநாதரின் உபதேசங்களைப் பரப்பினார் ஒருவர். அவர் யார்?

லிங்க: சுவாமி விவேகானந்தர்.

தேனி: சரியான விடை. சுவாமி விவேகானந்தர், தம் குருவாகிய இராமகிருஷ்ண பரமஹம்சரின் உபதேசங்களை அப்படித்தான் பரப்பினார்... ரஷ்யர்கள் 'ஸ்புட்னிக்-2' என்ற செயற்கைக் கிரகத்தில் ஒரு நாயை வைத்து அனுப்பினார்களே, அதன் பெயர் தெரியுமா?

எல்லாரும்: (மௌனம்)

தேனி: என்ன, ஒருவருக்குமே தெரியாதா! அதன் பெயர் 'லைக்கா'. அது பத்திரமாகப் பூமிக்குத் திரும்பி வந்ததால், பிறகு ஒரு மனிதரையே விண்வெளியில் அனுப்பினார்கள். அந்த மனிதர் பெயராவது தெரியுமா?

கார்த்தி: ககாரின்.

தேனி: ரொம்பச் சரி. யூரி ககாரின் என்ற ரஷ்யர்தான் விண்வெளிக் கலத்தில் முதல் முதலாகச் சென்று பத்திரமாகத் திரும்பி வந்தவர். வாஸ்கோடகாமாவைப் பற்றி, வரலாறு படிக்கும்போது நன்கு தெரிந்து கொண்டிருப்பீர்கள்? அவர் எங்கே இறந்தார் என்று தெரியுமா?

லிங்க: கொச்சி நகரில்.

தேனி: அடேடே, அதையும் வரலாற்று நூலிலே படித்து நினைவில் வைத்திருக்கிறாய் போலிருக்கிறது! ரொம்ப நல்லது... நம் தேசத் தலைவர்களில் ஒருவர் வழக்கறிஞராக இருந்தார். அவருடைய தந்தையும் வழக்கறிஞராயிருந்தார். இருவரும் ஒரு சமயம் எதிர் எதிராக நின்று வழக்காடினார்கள். அதில் மகன் வெற்றி பெற்றார். அந்தத் தலைவர் பெயர் என்ன? அவர் தந்தை பெயர் என்ன?

சசி: ஜவாஹர்லால் நேருவும் அவரது தந்தை மோதிலால் நேருவும்.

தேனி: இல்லை.

கார்த்தி: கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளை. அவர் தந்தை பெயர் தெரியவில்லை.

தேனி: மகன் பெயரைச் சரியாகச் சொல்லி விட்டாய். தந்தையார் பெயர் உலகநாத பிள்ளை. சதுரங்க ஆட்டத்திற்கான பலகையில் மொத்தம் எத்தனை கட்டங்கள் இருக்கின்றன?

கார்த்தி: 32.

தேனி: தவறு.

லிங்க: 64.

தேனி: கரெக்ட். இந்த ஆட்டத்தை இருவர் ஆடுவார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். ஒவ்வொரு ஆட்டக்காரருக்கும் தனித் தனியாக எத்தனை காய்கள் இருக்கும்?


கார்த்தி: 16.

தேனி: ரொம்ப கரெக்ட். அரசர்-1, அரசி அல்லது அமைச்சர்-1, யானை 2, தேர்-2, குதிரை-2, காலாட்கள் 8 ஆக 16 காய்கள்...நாம் நம் சுதந்திர தினத்தை ஆகஸ்ட் 15-ல் கொண்டாடுகிறோம். இதே போல் இன்னொரு நாடும் அதே தேதியில் சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறது. அந்த நாடு எது?

லிங்க: தென் கொரியா.

தேனி: சரியான விடை.

பேசாத படம்!





ஒலிம்பிக் விளையாட்டு பயிற்சி அளிக்கும் ஜிம் ஓ' டோஹர்த்தி கூறுகிறார்:

"காம்ப்ளான்® ஒண்ணுதான் வலுவையும் தெம்பையும் உருவாக்குகிறது."

ஒலிம்பிக் வீரர் ஜிம்ஓ'டோஹர்த்தி, இந்தியா உள்பட உலகம் முழுவதிலுமுள்ள இளம் விளையாட்டு வீரர்களுக்கு கடினமான போட்டிகளுக்காக பயிற்சி அளித்துள்ளார். 'பிறக்கும்போதே சாம்பியன்களாக பிறப்பதில்லை அவர்கள் உருவாக்கப்படுகிறார்கள்', என்பதை அவர் நம்புகிறார். ஒருவரை வெற்றியாளராக்குவது கட்டுப்பாடான சக்தி—மற்றும் உடல் சக்தி.

"நீச்சல் வீரர்கள், ஓட்டம் மற்றும் களவிளையாட்டு வீரர்கள், குறிப்பாக வளரும் குழந்தைகளுக்கு இதை சிபாரிசு செய்கிறேன்" என்கிறார் ஜிம் ஓ,டோஹர்த்தி. ஒரு பரிபூரண உணவாகும் காம்பளான்—எளிதில் ஜீரணிக்கவல்லது, தெம்பு அபிவிருத்தி செய்யும் ஆரோக்கிய வளர்ச்சிக்கான 23 மூலதார ஊட்டச்சத்துக்களுடன் கூடியது."

ஜிம் ஓ' டோஹர்த்தி கூறுவதை எடுத்துக் கொள்ளுங்கள். ஆரோக்கியமான முழுமையான வளர்ச்சிக்கு உங்கள் குழந்தைக்கு அன்றாடம் வழங்குங்கள் காம்ப்ளான். குழந்தைகள் விரும்பிடும் இனிய சுவைகளில் கிடைக்கிறது காம்ப்ளான்.



காம்ப்ளான்®

-திட்டமிட்ட பரிபூரண உணவு

GLC.9-2012 TAM



காந்திஜி பிறந்த நாளில் பிறந்த என் மகன் மணிராஜ், தன் புகைப்படத்தை நண்பர்களிடமும் உறவினர்களிடமும் காண்பித்து மிகவும் குதூகலமடைந்தான். நன்றி.
மதுரை—1. எஸ். சுகந்தி

'மின்மினிக் கதைகள்' படுஜோர். கேள்வி நேரம் எங்களுக்கு நல்லநேரம். சுகிசிவம் அவர்களின் 'வெற்றிவேல்! வீரவேல்!' எனக்கு சந்தோஷத்தை அளித்தது
கோவை, எஸ். எஸ். கண்ணன் (1419)

'அரக்கனின் தோட்டம்' நாடகத்தில் அரக்கன் மனம் மாறுவதும், அவனுக்கு இறைவன் அருள் கிட்டுவதும் வெகு அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. மூன்று புனிதத் தலைவர்களின் படங்களைப் பிரசுரித்து எங்களை வியப்பில் ஆழ்த்தியதற்கு நன்றி! நன்றி!!
டோம்பிவிலி, விஜயா ரங்கநாதன்

எனக்கு உறுப்பினர் அட்டை வந்த அன்று மகிழ்ச்சி தாளவில்லை. 'குதுப் மினாரின் உச்சியிலே குண்டு' மிகவும் வேடிக்கையாக இருந்தது.
நெய்வேலி, ந. ரவிச்சந்திரன் (4187)

'நம் தமிழ்நாட்டில் காந்திஜி', 'காந்திஜி பெற்ற பதக்கங்கள்' போன்ற அருமையான செய்திகளைப் படங்களுடன் வெளியிட்டிருப்பது கண்டு மகிழ்ச்சி அடைந்தேன்.
ஆவடி. பி. குணசீலன்.

இங்கிலீஷ் மீடியம் ஸ்கூலில் படிக்கும் சில நண்பர்கள், உலகப் புகழ் பெற்ற சில கதைகள் தங்களுக்குத் தெரியும் என்று ஜம்பம் அடித்துக் கொள்வார்கள். தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்ட என் போன்றவர்களும், அப்படிப்பட்ட கதைகளை அறிந்து கொள்ளச் செய்யும் 'கோகுலம்' வாழ்க!
வேலூர். ஆர். தன்யகுமார்

'பிசாசுமலை' சித்திரக்கதையில், ராஜாஜி பேய்க்கு அஞ்சாமல் இருந்ததைக் கூறிய மணிவண்ணன், மலையில் பேய் இருப்பதாகக் கதைகட்டி விட்ட திருடர் கூட்டத்தைக் கண்டு பிடித்துக் கொடுக்கிறானே, அது அருமையிலும் அருமை!
திருப்பத்தூர். வி. சிவக்கொழுந்து

'இளமையில் இவர்கள்' பகுதியில் பல சுவையான நிகழ்ச்சிகளை வெளியிடுகிறீர்கள். அவசியம் அறிந்து கொள்ள வேண்டிய அந்த நிகழ்ச்சிகள் எங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். இதில் ஐயமே இல்லை.
திருவனந்தபுரம். கே. சௌதாமினி

நாட்டுக்கு உழைத்த நல்ல தலைவர்கள் படங்களை எங்கே தேடிப் பிடிப்பது என்று ஏங்கியிருந்தோம். 'கோகுலம்' அக்குறையைத் தீர்த்து வைக்க முன்வந்திருக்கிறது. நல்ல தொண்டு!
பாண்டி. கே. பி. கீர்த்திவாசன்

பள்ளிப் பாடப் புத்தகங்களை மட்டுமல்ல: 'கோகுல'த்தையும் சிறுவர் சிறுமியர் கட்டாயம் படிக்கவேண்டும்.
புதுவை—10. ஞா. ஜெயசீலன்.

வில் ஏந்தும் ராமனையும் புல்லாங்குழல் ஊதும் கண்ணனையும் அட்டையில் பார்த்துப் பரவசமடைந்தேன். சாமியே கும்பிடாத எனக்குக் கூட சாமி கும்பிட ஆசை வந்துவிட்டது.
ஈரோடு—3 நவீனு நந்தகோபால் (1657)

முழுநீளக் கதையான 'பேசிய பொம்மைகள்' அபாரம்: சுவையான விருந்து. 'ஆகாயத்தில் பறந்தவன்' போல எனக்கு ஓர் அனுபவம் ஏற்படாதா? (கனவில்தான்)
சென்னை—1. இரா. லோகநாதன்



புலியால் ஏற்பட்ட கிலி

எம். ஆர். ராஜன்

தென்னம்பட்டு கிராமமே பீதியால் பீடித்திருந்தது. அது கொஞ்சம் கொஞ்சமாகப் பரவி அடுத்துள்ள கிராமங்களிலும் ஓர் அசாதாரண நிலையை ஏற்படுத்தி விட்டது. ஒன்றுமில்லை— ''ஒரு புலி வயல் வரப்பு ஓரமாய், மலையடிவாரத்தில் திரிந்து கொண்டிருக்கிறது. நான் வயலில் அதிகாலையில் உழுது கொண்டு இருந்தபோது அது உறுமிய சத்தம் கேட்டது'' என்று பொன்னன் சொன்ன சேதிதான் பீதிக்குக் காரணம்.

எத்தனை பேர்கள் உண்மையில் பார்த்தார்களோ தெரியாது. ஆனால், கிராமங்களில் இதே பேச்சு. ''காலையிலே நான் ஏரிக்கரை ஓரமாய்ப் போனபோது பயங்கர சப்தம் கேட்டுச்சு'' என்றான் ஒருவன்.

''அட என்னப்பா, நான் நல்ல வெளிச்சத்திலே, பட்டப் பகலிலே வயக்காட்டுப் பக்கம் இம்புட்டுத் தூரத்திலே பார்த்தேங்கிறேன். என் பேச்சை நம்ப மாட்டேங்கிறீங்களே!'' இது நாடகக்கார நாராயணசாமி.

''நல்லா மூணிலிருந்து நாலடி இருக்கும். நல்ல வளர்ந்த புலிதான்... நான் சாயங்காலம் ஏரியோரம் கால் கழுவி வரும்போது என் கண்ணாலே பார்த்தேன்.'' — இது பஜனைப் பாட்டுப் பாடும் ஓதுவார் சொன்னது. ஆக மொத்தம் ஏதோ ஓர் அன்னிய மிருகம் ஊரின் எல்லையில் திரிவது நிச்சயம் என்பது தெரிந்தது.

சிறுவர்கள் பள்ளிக்கூடம் போகப் பயந்தார்கள். பெண்கள் வயலில் வேலையில் இறங்க அஞ்சினார்கள். ''எப்படியும் நம்ம கண்ணிலே படாமலா போகும்? ரெண்டு நாள் பொறுத்துப் பார்ப்போம். இதுவரையிலே ஆட்சேதம், உயிர்ச் சேதம் எதுவும் இல்லே. அப்படித் திசை மாறி வந்த புலி, சிறுத்தைன்னு எப்படியும் இங்கேதான் திரிஞ்சுக்கிட்டு இருக்கும். எதுக்கும் நாம ஒரு ஏழெட்டுப் பேரு இன்னிக்கு ராத்திரி ரோந்து போய் வருவோம். எல்லாம் தயாரா வாங்க.''

—நாட்டாண்மை அய்யா மற்றும் கட்டுமஸ்தான ஒருஏழெட்டு ஆசாமிகள் கையில் தடி, திவட்டி, அரிவாள், தாரை தம்பட்டம் சகிதம் கிளம்பினார்கள்.

மூலை முடுக்குகளெல்லாம் ரோந்து சுற்றினார்கள். மலையடிவாரத்தில் ஒரு குகை போலிருந்தது. சற்றுத் தூரத்திலேயே ஏதோ ஒரு ஈனக் குரலில் ஒரு மிருகம் கத்துவது கேட்டது. உற்றுக் கேட்டார்கள். ஏதோ ஒரு

மிருகத்தைப் புலி அடித்துக் கொல்கிறது என்ற தீர்மானத்துக்கு வந்தார்கள். புலி வெளியே வருவதாய்க் காணோம். கீழ் வானம் வெளுக்க ஆரம்பித்தது. கிராமவாசிகள் திரும்பி விட்டார்கள். குகையில் என்ன மிருகம் இருந்தது என்று அருகில் போய்ப் பார்க்க யாருக்கும் தைரியம் இல்லே. வீராப்புடன் எல்லாரும் சேர்ந்து போய்க் கடைசியில் எதையும் கண்டு பிடிக்காமல் திரும்பி வந்தது ஊரில் கேலிக்குரிய விஷயமாகி விட்டது.

''நாட்டாண்மைகூட இப்படிப் பயந்து வந்துட்டாங்களே! புலி உண்மையிலே ஊருக்குப் பக்கத்திலே வந்துதா? யாராவது உண்மையிலேயே பார்த்தாங்களா? அப்படின்னு புலியை ஏன் கொல்லாம வந்தாங்க? விவரமாச் சொல்ல வேணுமா? ஊருக்குள்ளே திடுமுன்னு பீதியைக் கிளப்பி விட்டுட்டு, இப்படிச் சும்மா இருந்திங்கன்னு, எப்படி பொம்பளேங்க வெளியே போவாங்க? குழந்தைங்க எப்படி ஸ்கோலுக்குப் போவாங்க?'' — ஊரிலேயே மூத்தவர் பெரியசாமி பஞ்சாயத்திலே பொரிந்து தள்ளினர்.

பஞ்சாயத்துக்காரர்கள் செய்வதறியாது விழித்தனர். ''போலீசிலே சொல்லிப் போடுங்க... '' என்றார் வீராசாமி.

சின்னுன் ஓரமாக நின்று கொண்டிருந்தான்.

''என்ன சின்னுன், நீ எதுனச்சும் ஒரு வழி சொல்லு. இல்லே, நீயே போய்ப் புலி ஊருப் பக்கம் திரியுதான்னு கண்டு பிடிச்சுக்கிட்டு வர்றியா'' — நாட்டாண்மை கேட்டார்.

''சரிங்க. ரெண்டு நாள் போதும். புலி இருக்குதான்னு கண்டு பிடிச்சு, அப்படி இருந்துச்சுன்னு உயிரோட கொண்டாந்திடுறேன்'' என்றுன் சின்னுன்.

''ஆனுன நாட்டாண்மை, மாஜி சிப்பாய் எல்லாம் போய் பயந்துக்கினு ஓடியாந்துட்டாங்க... இவரு கிழிக்கப்போறாராம்! புலியைப் புடிச்சாரப் போறாராம்! — அதுவும் உயிரோட புடிச்சாரப் போறாராம்!' என்று கிராமத்து இளவட்டங்கள் கேலி பேசினர்கள்.

''அய்யா, நம்ம வேலுவை மட்டும் என்கூட அனுப்பி வையுங்க போதும்'' என்றுன் சின்னுன்.

வேலு சின்னுன் மாதிரி ஒரு சிறுவன் தான். அவன் ஊரில் மாரியம்மன் திருவிழாவில் கோயிலில் நாடகம் போடுவான். வேஷம் கட்டுவான். நாய், பூனே, ஆடு மாதிரி கத்தி, வேடிக்கை காட்டுவான். அவனுக்குக் கொஞ்சம் பயம்தான். இருந்தாலும் சின்னுனின் சாமர்த்தியம் அவனுக்குத் தெரியும். அந்த நம்பிக்கையில் அவனுடன் போகச் சம்மதித்தான்.

மறு நாள் விடிகாலே. ஒரு பெரிய தாம்புக் கயிறு, ஒரு பெரிய தூரடு, இரண்டையும் எடுத்துக் கொண்டு, சின்னுனும் வேலுவும் கிளம்பினர்கள். நாட்டாண்மைக்காரர் சொன்ன மலேயடிவாரத்துக்குப்போனுர்கள், கொஞ்சம் தூரத்திலேயே புலி உறுமும் சத்தம் கேட்டது. புலி அங்கேதான் உலவு





கிறது என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார்கள். இருவரும் ஒரு மரத்தின் மீது ஏறி, கிளைகளால் தங்களை மூடிக் கொண்டார்கள். சின்னான் வேலுவிடம் ''நீ ஆட்டுக் குட்டி கத்துவது போலக் கத்து'' என்றான். அதற்குள் கீழே நிறையத் தழைகளை வெட்டிப் போட்டு வைத்தான்.

வேலு நிஜ ஆட்டுக் குட்டியைப் போலக் கத்தினான். புலி மெதுவாகத் தலையை நீட்டி நீட்டிப் பதுங்கி நடை போட்டு வர ஆரம்பித்தது. கையில் தயாராய்ச் சுருக்கு முடி போட்டு வைத்திருந்த தாம்புக் கயிற்றை, கீழே வெட்டிப் போட்டு வைத்திருந்த தழைக்குக் கீழே வெகு சமீபத்தில் தொங்க விட்டான். காற்றில் அசையாதபடி முடிக்குக் கீழே சின்னக் கல்லையும் கட்டி வைத்தான். புலி தழையைத் தள்ளித் தள்ளிப் பார்த்தது. வேலு மீண்டும் மீண்டும் ஆட்டுக் குட்டி போலக் கத்தினான். சுற்றிச் சுற்றிப் பார்த்த புலி அங்கேயே தழை மேலேயே படுத்துக் கொண்டது. சமயம் பார்த்து, சுருக்கு முடி போட்ட கயிற்றை மரத்தின் மீதிருந்த சின்னான் புலியின் கழுத்தில் லபக்கென்று மாட்டினான். புலி திமிறிப் பார்த்தது. முடியவில்லை. வசமாய் மாட்டிக் கொண்டது! அந்தக் கயிற்றின் மறுமுனையை மரத்தில் அவன் உட்கார்ந்திருந்த கிளையிலேயே நன்றாகக் கட்டி விட்டான். புலியால் துளிக்கூட நகர முடியவில்லை. கயிறு பக்கவாட்டில் கட்டப்படாமல் நேராக மேல் பக்கக் கிளையில் தொய்வு இல்லாமல் கட்டப்பட்டிருந்ததால் புலியால் பக்கவாட்டில் நகர முடியவில்லை.

உடனே வேலுவை ஊருக்கு அனுப்பி ஊர்க்காரர்களைக் கூட்டி வரச் சொன்னான் சின்னான். அதற்குள் மடமடவென்று இறங்கி வந்து புலியின் எதிரில் நின்றான். புலி உறுமி உறுமிப் பார்த்தது. முடி இறுகவே மயங்கி அப்படியே கிடந்தது. அது மயங்கியது தான் சமயம் என்று சின்னான் கையிலிருந்த கயிறுகளைக் கொண்டு வாயையும் முன் கால்களையும் பின் கால்களையும் சேர்த்துக் கட்டினான். பிறகு கழுத்து முடியை அவிழ்த்து விட்டான். புலி கொஞ்ச நேரம் கழிந்து மயக்கம் தெளிந்து விழித்துப் பார்த்தபோது, சின்னானின் தோளில் இருந்தது. ஆட்டுக் குட்டியைத் தூக்குவது போல் புலியைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு சின்னான் வந்து கொண்டிருக்

கையில், எதிரில் வந்த ஊர் மக்கள் அப்படியே அசந்து போய் நின்றார்கள்.

''அது செத்திருக்கும்பா'' என்றான் ஒரு வாலிபன். ''அது புலியாயிருக்காது. பூனையா யிருக்கும்டா'' என்று கேலி பேசினான் இன்னொருவன்.

புலியின் வாய்க் கட்டைக் கொஞ்சம் தளர்த்தினான் சின்னான். 'உர்ர்ர்ர்ர்' ரென்று உறுமியது புலி.

''அடே, நிஜப் புலிதாண்டா'' என்றார்கள் அந்த ''சூரப்புலிகள்'' — நிஜமாகவே நம்ம சின்னான் சூரன்தாண்டா என்று பேசிக் கொண்டார்கள். புலியைப் பார்க்கச் சுற்று வட்டாரக் கிராமமே திரண்டு வந்தது. உயிரோடு புலியைப் பார்த்து ரொம்பவும் ஆச்சரியப்பட்டது.

மறுநாள் செய்தித் தாளில் புலியுடன் சின்னானின் புகைப்படமும் அவனது வீரச் செயல் பற்றிய செய்தியும் படு அமர்க்களமாய் வெளி வந்திருந்தன. சின்னானுக்கு அரசாங்கம் வீர விருது கொடுத்தது.

சின்னான் தொலைக் காட்சியில் பேட்டி கொடுத்தான். ''மனோ தைரியமும் சாமர்த்தியமும் இருந்தால் எந்தக் காரியத்தையும் சாதிச்சுடலாம் — பயப்பட்டால் நமக்கு என்ன செய்யறதுன்னே தோணாது — அதனால பயம்தான் நமது முதல் எதிரி.''

நீங்களும் சின்னானைப் போல் தைரியமாக இருங்கள். வெற்றி தானாகத் தேடி வரும்!

(சென்ற அக்டோபர் இதழில் வெளி வந்த 'சீமான் வீட்டுச் சொத்து' கதையை எழுதியவரும் இதே கதாசிரியர் எம். ஆர். ராஜன்தான்.)



மகளுக்குக் கடிதம்

நேருஜி நம் தேச விடுதலைக்காகப் பாடு பட்ட போது பல முறை சிறையில் வைக்கப் பட்டார். மொத்தம் 3262 நாட்கள் (சுமார் ஒன்பது ஆண்டுகள்) சிறையில் இருந்திருக்கிறார்! நைனி, டேராடூன், அல்மோரா என்று ஒன்பது இடங்களில் சிறைவாசம் செய்திருக்கிறார்.

அவர் சிறையில் இருந்த போது தான் தம்முடைய வாழ்க்கை வரலாற்றை எழுதினார். இனிய மகள் இந்திராவுக்குச் சிறையிலிருந்து கொண்டே பல கடிதங்களையும் எழுதினார்.

அவர் வீட்டில் இருக்கும் போது இந்திரா அவரை அடிக்கடி கேள்வி கேட்பார். நேரு அன்போடு பதில் சொல்வார். ஆனால், சிறையில் இருக்கும் போது, இந்திராவால் கேள்வி கேட்கவும் முடியாது: நேருவால் பதில் சொல்லவும் முடியாதல்லவா? ஆகையால், நேரு சிறையில் இருந்து கொண்டே இந்திராவுக்குப் பல கடிதங்களை எழுதினார். உலக வரலாறு பற்றியும் அந்தக் கடிதங்களில் அழகாக, விளக்கமாக, எளிமையாக எழுதினார்.

நேரு எழுதிய கடிதங்களைத் தொகுத்துப் புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். அப்புத்தகம் பல மொழிகளிலும் வெளிவந்திருக்கிறது. தமிழில் கூட வெளிவந்திருக்கிறது. நீங்கள் அவசியம் அதைப் படிக்க வேண்டும்.

அந்தக் கடிதங்களை நேரு எழுதிய போது, இந்திராவுக்கு என்ன வயது தெரியுமா?

பத்து வயதுதான்!

தமிழ் நாட்டில் நேரு மாமா



'வருக! வருக! நேரு மாமா!' என்று
மலர் கொடுத்து வரவேற்கிறாள் ஒரு சிறுமி.



இருபுறமும் மாணவியர் அணிவகுத்து நின்று
வணக்கம் செலுத்தி வரவேற்பு அளிக்கின்றனர்



நேரு ஸ்டேடியத்தில், குழந்தைகள் தந்த
குடைபோன்ற பூச்செண்டுடன் குதூகலம் அடைகிறார்



கிண்டி குழந்தைகள் பூங்கா துவக்க விழாவில் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கிறார்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் குழந்தைகளுடன் கொஞ்சிப் பேசுகிறார்.



கிண்டி சிறுவர் நகரத் துவக்க விழாவில் சிறுவரைப் பாராட்டுகிறார்.



கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி
உறுப்பினர் எண், பெயர், முகவரி

861. வெ. ஆனந்த், பிளாட் எண் 24, ராம்நகர், 2வது தெரு, நங்கநல்லூர், சென்னை-61
862. ஆர். சாந்தி, 25, கன்னியார் தெரு, குயவர் பாளையம், பாண்டிச்சேரி
863. ஜெ. சீனிவாசன், 8, கோ-ஆப் காலனி முதல் தெரு, மேட்டுப்பாளையம்-641 301
864. ப. மாலினி, சைட் நெ. 18, சக்தி ரோடு, கே. ஆர். ஜி. நகர்: கோவை-6
865. எஸ். கிரிபாஸ்கர், S/o கே. சிவசாமி, பெரியபோது, பொள்ளாச்சி-642.149
866. சௌ. திருமலைக்கண்ணன் S/o சௌமிய மாதவன் தலைமை ஆசிரியர் திருக்கோளக்குடி-622.405
867. தமிழ்ச்செல்வி ஆறுமுகம் C/o. போஸ்ட் மாஸ்டர், மேலக்காவேரி, கும்பகோணம்
868. இ. பாரதி 28, பழைய பண்டிதர் குடியிருப்பு, அண்ணாமலைநகர்-608.002
869. ந. பிரபா, செந்தில் வாட்டரி சென்டர், மெயின் ரோடு, நரியனூர்-638.107
870. எஸ். நடராஜன், 42, தெற்கு வீதி, சிதம்பரம்-608.001
871. எம். எத்திராஜன், 303, லேபர் காலனி, கிண்டி, சென்னை-32
872. எஸ். திருவாசகன், 48, தெற்கு ஜெகந்நாத நகர், வில்லிவாக்கம், சென்னை-49
873. என். செல்வி, பிளாட் எண் 3, ராமகிருஷ்ணாநகர், லக்ஷ்மிநகர் 4வது ஸ்டேஜ், நங்கநல்லூர், சென்னை-61
874. எம். ஸ்ரீராம், 5, லோகநாதன் காலனி, சென்னை-4
875. ஆர். சண்முகம், S/o ராமலிங்கம், மஞ்சம்பட்டி சத்திரப்பட்டி, 625.014
876. சி. டி. பிரபா, ப்ளாட் 1, பத்தாவது கிராஸ், மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18.
877. த. பிரியா பெனியேல் 51 ஜவஹர் தெரு, ஆலங்குளம்-627.851
878. கே. கே. நாகராஜன் 5-ஏ லெட்சுமண நாயக்கன் அக்கிரஹாரம், வெண்ணாற்றங்கரை, தஞ்சை-3
879. ப்ரியா ராமகிருஷ்ணன் 57-எல் அசோக்நகர் முதல் அவென்யூ, அசோக்நகர், சென்னை-83
880. டி. பி. சுரேஷ் 10 காட்டன் பிரஸ் நியூ தெரு, பீமநகர், திருச்சி-1
881. பி. எம். வெங்கடேசன் 29, ஆதியப்ப நாயக்கன் தெரு, சென்னை-1
882. ஆர். பாஸ்கரன், S/o ஜி. ராமமூர்த்தி, பெருமகளூர்-614612
883. சௌ. கருணாகரன், 17-பி. டி. பி. வி. லேன் (மாடி) பஜார், சேலம்-636.001
884. ர. ஜெய்கிருஷ்ண 23 சுந்தரபுரம் தெரு, மானாமதுரை
885. என். செந்தில்குமார் 4/211, மெயின் ரோடு, காரத்தொழுவு-638.209
886. க. ராஜ்குமார் வாரணவாசிபாளையம் மேற்குப் பகுதி (அஞ்சல்) கோவை மாவட்டம்
887. கே. மகாலட்சுமி 12/13 திருநாவுக்கரசு வீதி, பாப்பநாயக்கன் புதூர், கோவை-41
888. ஆர். முருகானந்தம் S/o பி. ஆர். ரெங்கசாமி, கீழத்தெரு, பிலா விடுதி-622.302
889. பி. உமாமகேஸ்வரி 32 மெடிகல் காலேஜ் ரோடு தஞ்சாவூர்
890. ராம. கமலா, 52, குமரகோவில் தெரு, திருவாரூர், தஞ்சை மாவட்டம்
891. ஆ. முருக அரசு சி/4 விருதுநகர் இந்து நாடார் காலனி, தேனி
892. எஸ். மோகன்ராஜ், ஈ-30, பழைய காலனி, சங்கர் நகர், திருநெல்வேலி மாவட்டம்
893. இரா. கிருஷ்ணகுமார், S/o ச. ராமசாமி, அமிர்தபாளையம், சாத்தூர்-626.203
894. வே. சஞ்சய், 5, ஆதிநாராயண தெரு, அண்ணாமலைநகர், 608.002
895. எம். ஏ. ஆதவன், 51, தாலையப்பன் தெரு, விருதுநகர்
896. ஜி. வெங்கடேசன், S/o எஸ். கணபதி, போஸ்ட் மாஸ்டர், திருவாடானை-623.407
897. ஏ. கணேசன், 908, ஹரிபண்டிதர் குளம், வெ. பெ. கோவில் தெரு, தஞ்சாவூர்
898. எஸ். ஸ்ரீநிவாசன், கப்பையன் தோட்டம், அஞ்சூர், 638.151
899. டி. காஞ்சனா 4 மேதகாரப் படித்துறைத் தெரு, வடகரை, பெரியகுளம், மதுரை மாவட்டம்
900. சந்தீப் மோகன்ராம் 37—க்யூ, எம்.ஐ.ஜி. ஃப்ளாட், காமராஜ்நகர், திருவான்மியூர், சென்னை-41
901. எஸ். விவேகானந்தன், C/o கே. ஜி. சிவசுப்பிரமணியம், அட்வகேட், கோட்டூர், பொள்ளாச்சி தாலுகா
902. டி. எஸ். வெங்கடேஷ், எண் 5, சி டைப், பேட்டைவைத்தலை - 639.112
903. பி. சம்பத், 15, தெற்குத் தெரு கரூர்-639.001
904. எஸ். வேணுகோபால் 25, ரங்கர் சன்னதித் தெரு, நாமக்கல், சேலம் மாவட்டம்
905. நா. மோகன்குமார், 6/120, கிருஷ்ணர் கோவில் வீதி, ராமநாதபுரம், கோவை-641.045
906. ரா. பாஸ்கர், 15, ஹார்வி நகர், மதுரை-16
907. டி. ஆர். உமாராணி, 57, மௌனசாமி மடத் தெரு, அம்பத்தூர், சென்னை-53
908. எம். ராமலிங்கம், ஏ-24, அண்ணாநகர், தென்னூர், திருச்சி-17
909. பி. விக்டர் மதன், குமாரசாமி நிவாஸ் காம்பவுண்டு, சகோதரர் தெரு, நாகர்கோவில்
910. ஜி. குருசங்கர், S/o பி. குருமூர்த்தி, ஆசிரியர், சைனிக் பள்ளி, அமராவதி நகர்-642102
911. எம். ரமேஷ், 7-ஏ, ஜி. எஸ். டி. ரோடு செங்கற்பட்டு
912. கே. ஜெயந்தி 19, முனுசாமி ஆச்சாரி தெரு, செம்பியம் பெரம்பூர், சென்னை-11


913. எல். ஆர். சாமி சுப்பிரமணியன் S/o எல். வி. ராமச்சந்திரமூர்த்தி, பழனிபுரம், 4வது வீதி, கச்சேரி போஸ்ட் ஆபீஸ்638301
914. ஜி. திருஞான சம்பந்தன், சோமாசிபாடி, கடம்பை கிராமம், திருவண்ணாமலை வட்டம்
915. த. செட்டிபாபு, 16. அன்வார்ஷா நகர், மூன்றாவது தெரு, பண்ருட்டி-607,106
916. கே. ஜி. குருபிரசாத், தபோவனம், திருக்கோவிலூர்-605756
917. எல். எஸ். செந்தில்குமார் 20 காதர் காலனி, கருவம்பாளையம், திருப்பூர்
918. காலித் இப்ராஹிம், 53, நடுத் தெரு, கீழக்கரை, இராமநாதபுரம் மாவட்டம்
919. ந. ஸ்ரீ. கணேஷ், பிளாட் எண் 20, பி அண்ட் டி. காலனி (மேற்கு) அழகாபுரம் சேலம்-4
920. கே. ஜெயஸ்ரீ, வடக்குத் தெரு, சந்திரசேகரபுரம் (வழி), வலங்கைமான்-612,805
921. வை. நீலகண்டன், S/o வைரவ சுந்தரம், தேரடிப் பக்கம், நீலகண்டபுரம், பேராவூரணி
922. கோ. மீனாட்சி, 1560, லோக விலாஸ் காலனி, மாட்டு மேஸ்திரி சந்து, தஞ்சாவூர்
923. எஸ். தெய்வானை, 68, கனகசபை, நகர், சிதம்பரம்
924. சி. பாலசுப்பிரமணியன், 19, வட காசியம்மன் முதல் தெரு, சங்கரன்கோவில்627756
925. அநுபமா மோகன்ராம், 37-க்யூ, எம்.ஐ.ஜி. ஃப்ளாட், காமராஜ்நகர், திருவான்மியூர், சென்னை-41
926. எஸ். விஜயலட்சுமி, 10, டபீர் கீழத் தெரு, கும்பகோணம்.
927. ஆர். கீதா, D/o ராமமூர்த்தி, ஆசிரியர், பாண்டிக் கண்மாய், பரமக்குடி-623,707
928. எஸ். காயத்ரி, ஆர்.-7, E W.S. Flats, T.N.H.B. South Boag Rd. சென்னை-17
929. தெ. குப்பம்மாள், 266, பாரதியார் தெரு, திருநெல்வேலி டவுன்
930. வி.ஆர். அருண்குமார், 21,லட்சுமி இல்லம்,புளியவிளை தெரு, வடசேரி, நாகர்கோயில்
931. எம். செல்வராணி, 33, 1வது குறுக்குச் சாலை, பக்தவத்சலம் நகர், நங்கநல்லூர், சென்னை-61
932. வி. ராஜகணபதி, 13, அம்மாப்பேட்டை மெயின் ரோடு, சேலம்-1
933. எஸ். ஆர். செண்பகலெக்ஷ்மி 15, சன்னதி தெரு, மதுராந்தகம், செங்கை மாவட்டம்
934. அ. த. முத்துக்குமார், எட்டாம் வகுப்பு 'அ', அ. மே. நி. பள்ளி, ஜலகண்டபுரம்-636,501
935. வி. சத்யன், 14, அக்ரகாரம், மெயின் ரோடு, மேட்டுப்பாளையம்
936. அ. நாகராசன், கொங்கல்நகரம் - 638,205
937. ஜி. ஏகலைவன், சிறுபனையூர், உதயமார்த்தாண்டபுரம் - 614,706
938. வி. குமாரவேல், 19, ஊர்க்காவலன் கோவில் தெரு, கமுதி, 623,603
939. எஸ். சீனுவாசன், 11, மிஷின் ஸ்கூல் தெரு, உத்தரமேரூர்-603406
940. வே. மாதவன், 24, ஜெயராம் நாயுடு தெரு, நங்கநல்லூர், சென்னை-61
941. பா. சுமித்திரா, 5, சந்திரசேகரன் தெரு, மந்தைவெளி, சென்னை-28
942. ஜெ. பரணிதரன், 30/எச், தைக்கா தெரு, செட்டியார் காலனி, விழுப்புரம்
943. கே. நித்யலட்சுமி, 62, சரசமாரா தெரு, வேலூர்-632,004
944. இ. கதிரவன், S/o கிருஷ்ணமூர்த்தி, இந்தியன் ஓவர்சீஸ் பாங்க், வேளாங்கண்ணி 611,111
945. ஆர். உமா, விக்கிரபாண்டியம்
946. S. Annapoorani, T. C. 23/713, Valia Chalai St., Trivandrum-23
947. வெ. சுபாஷினி, 2, சந்திரசேகரன் தெரு, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை-28
948. சொ. மெய்ஞானம்,S/o சுப்பையாத் தேவர், நீலகண்டபுரம், பேராவூரணி
949. எஸ். மதுசூதனன், 3, சீனுவாச ஆச்சாரி தெரு, பெரம்பூர், சென்னை-11
950. க. சந்திரசேகர், 210, தங்கசாலைத் தெரு, சென்னை-3
951. வி. கே. சாரதா 9 கேசவப் பெருமாள் மேலண்டைத் தெரு, சென்னை-4
952. ரா. ராஜ்பாஸ்கர் 13, சுந்தர்ராஜ் நகர், சுப்பிரமணியபுரம், திருச்சி-20
953. டி. ஜி. நெல்லை நாயகம், 269, கன்னிமாரர் தெரு, தென்காசி, 627,811
954. வி. ஞானசௌந்தரி, 8/31, குப்புசாமிபுரம் 5வது வீதி, திருப்பூர்
955. மு. முரளி ராவ், 105, நேரு தெரு, தென்கனிக்கோட்டை, தருமபுரி மாவட்டம்
956. எம். கிங்ஸ்லி பால், 12, பெருமாள் கோயில் தெரு, தல்லாகுளம், மதுரை-2
957. ஜோதிராதா, 7-ஏ, அரசாணி குளம், வடகரை, கீழ்வேளூர், 611,104
958. ஆ. சிவசங்கரி, 5-33-ஜி, மெயின் ரோடு, கன்னியாகுமரி
959. கே. சிவப்பிரகாசம், 100/1, அருந்ததம், பூண்டி பெரிய தெரு, பஜனைக்கோவில், தோட்டபாளையம், வேலூர்632004
960. கே. வெங்கடேஸ்வரன், 54, சிவானந்தா தெரு, பத்தமடை-627,453
961. டி. ஈஸ்வர பாபு, எஃப்4, ஹவுஸிங் யூனிட், கவுண்டம்பாளையம், கோவை-30
962. தா. முருகவேள், S/o எஸ். கலைசுரு, ஆசிரியை, டபிள்யூ. 10/49, வையாபுரி வாச நிலையம், மேச்சேரி-636453
963. எஸ். கண்ணன், 30, வ. உ. சி. வீதி, கொல்லம்பாளையம், ஈரோடு-2
964. கா. பாலாஜி, 5-1-23, கோவில் தெரு, வத்தலக்குண்டு-624,202
965. சி. குமார், 3, மேல உள் மாட வீதி, நான்குநேரி
966. ப. தளபதி, 34/8, காந்திநகர், மேட்டூர்-636,456
967. கே. ஏ. சங்கர், 19, தபால் ஆபீஸ் தெரு, உத்திரமேரூர், செங்கை மாவட்டம்

(இன்னும் வரும்)

PHILIPS

This 60W lamp gives you as much light as a 100W bulb





Cuts electric bill by Rs. 24

PHILIPS ARGENTA SUPERLUX

The Argenta Superlux has a special frosted window to direct more light where you need it. This concentrated beam makes a 60W Argenta Superlux give as much light as an ordinary 100W bulb.

The Argenta Superlux cuts your electric bill by Rs.24 a year, and lasts longer. The lamp is ideal for studying, painting, sketching, knitting...

Available in 40W and 60W versions.

Philips Argenta Superlux — the 60W lamp with the light of a 100W bulb.

Philips — the trusted Indian household name for over fifty years

உலகப் புகழ் பெற்ற சிறுவர் கதை-8

புதையல் தீவு



மூலம்: ராபர்ட் லூயிஸ் ஸ்டீவென்சன்

தமிழ்ச் சுருக்கம்: எச். கிருஷ்ணமூர்த்தி

கேப்டன் பிளின்ட் ஒரு பயங்கரக் கடல் கொள்ளைக்காரன். கப்பல்களைச் சூறையாடி அவன் ஏராளமான தங்கத்தைத் திரட்டியிருந்தான். அவற்றையெல்லாம் கண்காணாத ஒரு தீவில் புதைத்து வைத்தான். ஆனால், புதையலின் இடத்தைத் தன் தோழர்களுக்குக் கூட அவன் சொல்லவில்லை. அந்தத் தீவின் விவரங்களை ஒரு படத்தில் வரைந்து அதை ஒரு பெட்டியில் பூட்டி ரகசியமாகக் காத்து வந்தான். பிளின்ட் சாகும் போது அந்தப் பெட்டியைத் தன் தோழனை கேப்டன் பில் என்ற கொடிய கொள்ளைக்காரனுக்குக் கொடுத்தான். புதையல் தீவின் ரகசியப் படம் கைமாறிய செய்தி மற்ற கொள்ளைக்காரர்களுக்குத் தெரிந்தது. அவர்கள் கேப்டன் பில்லைத் துரத்திக்கொண்டு அலைந்தனர்.

அவர்களிடமிருந்து தப்புவதற்காக, கேப்டன் பில் அமைதியான ஒரு சின்ன ஊருக்குப் போய் ஒரு விடுதியில் தங்கினான். அந்தப் பெட்டியை மட்டும் பத்திரமாகக் கண்காணித்து வந்தான். விடுதியின் உரிமையாளனுக்கு ஒரே பிள்ளை. பெயர் ஜிம்.. அவன் பில்லின் தேவைகளைக் கவனித்து வந்தான்.

ஒற்றைக்கால் உள்ள மாலுமியைப் பற்றி ஜிம்மிடம் கேப்டன் பில் அடிக்கடி விசாரிப்பான். அந்த மாலுமியைக் கண்டால் உடனே தனக்குத் தகவல் தரும்படியும் சொல்லியிருந்தான். ஜிம்முக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் ஜிம் கற்பனை செய்த அந்த ஒற்றைக்கால் மாலுமி ஜிம்மின் கனவுகளில் வந்து பயமுறுத்தினான். கேப்டன் பில்லும், அவனுடைய பெட்டியும் ஜிம்முக்கு ஒரே மர்மமாகத் தோன்றின.

பில்லைத் துரத்தும் கொள்ளைக்காரர்களும் அதே ஊருக்கு வந்தனர். அவர்கள் தங்கள் குழுவிலிருந்து ஒருவனைப் பில்லிடம் தூது அனுப்பினர். பில் அவனைத் திட்டி அனுப்பினான். பில்லுக்குத் திடீரென மாரடைப்பு வந்தது. தன் குடும்ப நண்பரும், டாக்டருமான லிவ்சே என்பவரை ஜிம் அழைத்து வந்தான். மருத்துவம் செய்வித்தான். கேப்டன் பில் உயிர் பிழைத்தான். ஜிம்முக்கு நன்றி தெரிவித்துத் தன்னுடைய கதையைச் சொன்னான். கொள்ளைக்காரர்கள் தன்னைத் துரத்துகின்றனரென்றும், அந்தப் பெட்டியைக்

காப்பாற்ற வேண்டுமென்றும் ஜிம் மிடம் கேட்டுக் கொண்டான்.

துரத்துகிற கொள்ளைக்காரர்களுக்கு ஒரு தலைவன். பெயர் ப்யூ. அவன் விழிகளை இழந்தவன். ப்யூ ஒரு பிச்சைக்காரனைப் போல வேடமணிந்து பில் இருந்த விடுதிக்கு வந்தான். கேப்டன் பில்லின் கையில் ஒரு கறுப்புச் சீட்டை வைத்துவிட்டுப் போனான்.

கொள்ளைக்காரர்கள் தங்கள் கூட்டாளி ஒருவனைக் கொல்ல விரும்பினால், அவனுடைய கையில் ஒரு கறுப்புச் சீட்டைக் கொடுப்பது வழக்கம். அது வட்டமான சிறிய காகிதம். ஒரு பக்கம் கறுப்பு நிறம். மறுபக்கம் செய்தி. எந்த நேரத்தில் எவன் கொல்லப்படுவான் என்ற செய்தி இருக்கும்.

கேப்டன் பில் கையிலிருந்த சீட்டைப் பார்த்தான். கொள்ளைக்காரர்கள் அங்கு வருவதற்கு இன்னும் ஆறு மணி நேரம் இருந்தது. அதற்குள் பெட்டியை எடுத்துக்கொண்டு ஓடிவிடலாம் என்று நினைத்தான். பில் சரேலென எழுந்தான். தொண்டையை ஏதோ அடைத்துக் கொண்டது. நிலைதடுமாறிக் கீழே விழுந்தான். இறந்தான்.


ஜிம்மும், அவனுடைய அம்மாவும் ஊராரை உதவிக்கு அழைத்தனர். கொள்ளைக்காரனின் பெயரைக் கேட்டதுமே அவர்கள் பயந்து ஒதுங்கினர். யாரும் முன் வரவில்லை. வேறு வழியின்றி ஜிம்மும் அம்மாவும் பில்லின் பெட்டியைத் திறந்தனர். அதிலிருந்த புதையல் தீவின் படத்தையும், கொஞ்சம் பணத்தையும் எடுத்துக் கொண்டு விடுதியை விட்டு மறைந்தனர்.

பார்வையிழந்த ப்யூவும், அவனது குழுவும் குறித்த நேரத்தில் விடுதிக்கு வந்தனர். கேப்டன் இறந்து கிடந்தான்! பெட்டி திறந்து கிடந்தது! படம் மாயமாய் மறைந்திருந்தது! ஜிம்மையும், அம்மாவையும் அவர்கள் நாலாபுறமும் தேடினர். செய்தி அறிந்த அரசாங்க அதிகாரிகள் குதிரையேறி விடுதிக்கு விரைந்தனர். கொள்ளைக்காரர்கள் நொடிப் பொழுதில் ஓடிச் சென்றனர். ப்யூ மட்டும் தனியாக விடப்பட்டுத் திசை தெரியாமல் தடுமாறினான். எதிரே வந்த குதிரைகள் அவனைக் கீழே தள்ளி மிதித்துக் கொண்டு ஓடின. அவன் சாலையிலேயே மாண்டான்.

புதையல் தீவின் படத்தை எடுத்துக் கொண்டு ஜிம் டாக்டர் லிவ்சேயிடம் போனான். டாக்டரின் நண்பரான டிரலானி பிரபுவும் அங்கு இருந்தார். அவர்களிடம் ஜிம் தன் கதையைச் சொன்னான். அவர்கள் படத்தை வாங்கிப் பார்த்தனர். புதையல் தீவைப் பற்றி ஏராளமான விவரங்கள் அதில் இருந்தன. சில இடங்களில் விசேஷக் குறிகளும், "புதையல் இருக்கும் இடம்" என்ற சொற்களும் காணப்பட்டன.

டாக்டரும் பிரபுவும் சந்தோஷமடைந்தனர். புதையல் தீவுக்குப் போவதெனத் தீர்மானித்தனர். கடல் பயணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனே செய்வதாகப் பிரபு சொன்னார். தங்கள் பயணத்தை ரகசியமாக வைத்திருக்கும்படியும், கொள்ளைக்காரர்களுக்குத் தெரிந்தால், ஆபத்து விளையுமென்றும் டாக்டர் எச்சரித்தார்.

பிரபு பிரிஸ்டலுக்குப் போனார். 'ஸ்பானி யோலா' என்ற ஒரு நல்ல பாய்மரக் கப்பலை விலைக்கு வாங்கினார். ஸ்மாலட் என்பவரைக் கேப்டனாக நியமித்தார். பிரபு, டாக்டர், ஜிம், மற்றும் பிரபுவின் நம்பிக்கையான சில பணியாட்கள் ஆகியோர் பயணத்திற்குத் தயாராயினர்.



மிகப் பெரிய குரு!

ஒருமுறை தமது இளமைப் பருவத்தைப் பற்றி நேரு, சில குழந்தைகளிடம் பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது, "எனக்குக் குருவாக இருந்தவர்கள் எல்லாருமே மிகப் பெரிய மனிதர்கள். ஆனாலும், அந்த எல்லாரையும் விடப் பெரியவர்...." என்று இழுத்தார்.

உடனே, "காந்திஜி! காந்திஜி!" என்று பல குரல்கள் ஒரே சமயத்தில் ஒலித்தன!



பிரிஸ்டலில் ஒரு பிரபல உணவு விடுதி இருந்தது. அதை லாங் ஜான் சில்வர் என்ற ஒற்றைக் கால் உடைய மாலுமி திறமையாக நிர்வகித்து வந்தான். பிரபுவுக்கு அவனைப் பிடித்திருந்தது. உடனே அவனைக் கப்பலின் சமையல்காரனாக அமர்த்தினார். ஒற்றைக் கால் சில்வர் பயங்கரமானவன். பிளின்டின் கூட்டத்தைச் சேர்ந்தவன் என்பதோ, அவனை நினைத்துத்தான் கேப்டன் பிலி கூடப் பயந்தான் என்பதோ பிரபுவுக்குத் தெரியாது. ஆனால் பிரபுவின் கப்பல் எதற்காகப் போகிறது என்ற காரணத்தை சில்வர் வெகு எளிதில் புரிந்து கொண்டான். பிரபுவிடம் சிபாரிசு செய்து, அவன் தன் தோழர்கள் பலருக்கும் அந்தக் கப்பலில் வேலை வாங்கிக் கொடுத்தான்.

'ஸ்பானியோலா' பிரிஸ்டலை விட்டுப் புறப்பட்டது. பேராசை பிடித்த பயங்கரக் கொள்ளைக்காரர்கள் பலர் அதில் பணி செய்தனர். பயணத்தின் நோக்கத்தைப் பற்றிக் கேப்டன் ஸ்மாலட்டை விட மற்றப் பணியாட்கள் நிறைய அறிந்திருந்தனர். அவர்களுடைய பேச்சுக்களும், நடவடிக்கைகளும் கேப்டனுக்குச் சந்தேகத்தை ஊட்டின. முன்னெச்சரிக்கையாக அவர் ஆயுதங்களைத் தம்முடைய அறையில் சேமித்து வைத்தார்.

பருவநிலை உதவியது. பயணம் தொடர்ந்தது. அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்த தீவை அணுகும் நேரம் வந்தது. கப்பல் தளத்தில் ஒரு பீப்பாய் நிறைய ஆப்பிள் வைத்திருந்தனர். யார் வேண்டுமானாலும் எடுத்துச் சாப்பிடலாம். ஜிம்முக்குப் பசித்தது. அவன் பீப்பாய்க்குள் எட்டிப் பார்த்தான். முக்கால்வாசி காலியாயிருந்தது. பழம் எட்டவில்லை. ஆகவே பீப்பாயின் உள்ளே இறங்கி ஜிம் இரண்டு பழம் சாப்பிட்டான். அப்படியே உறங்கி விட்டான். பீப்பாயின் வெளியே உரசிக் கொண்டு யாரோ சிலர் உட்கார்ந்தனர். ஜிம் கண் விழித்தான். சில்வரும், அவனுடைய ஆட்களும் உரையாடுவது காதில் விழுந்தது. அதைக் கேட்டு ஜிம் திடுக்கிட்டான். கப்பலில் இருந்த நல்லவர்களின் உயிருக்கு ஆபத்து வரப்போகிறதென்பதை உணர்ந்தான்.

தீவில் இறங்கியதும் முதல் காரியமாகப் புதையலை வெளியே எடுப்பது, டாக்டரையும் அவருடைய நண்பர்களையும் கொல்வது, பிறகு புதையலைத் தங்களுக்குள் பங்கு பிரிப்பது —என வரிசையாக அவர்கள் திட்டங்கள் தீட்டினர். ஜிம் பீப்பாயின் உள்ளே இருந்ததை அவர்கள் கவனிக்கவில்லை.

இருட்டுக்குப் பிறகு ஜிம் பீப்பாயி

லிருந்து வெளியேறி டாக்டரின் அறைக்கு விரைந்தான். பிரபுவும், கேப்டன் ஸ்மாலட்டும் அங்கு இருந்தனர். தான் அறிந்த பயங்கரச் சதியை ஜிம் அவர்களுக்கு எடுத்துச் சொன்னான். அவர்கள் ஆலோசனை செய்தனர்.

''வெறுங்கையோடு ஊருக்குத் திரும்ப வேண்டாம். புதையலை நோக்கி முன்னேறுவோம். கொள்ளைக்காரர்களுக்குச் சந்தேகம் ஊட்டாமல் எச்சரிக்கையாக இருப்போம். எல்லாவற்றிற்கும் மேலாக நல்லவர்களைக் கடவுள் காப்பாற்றுவார் என்று நம்புவோம்'' — என கேப்டன் கூறினார். பிரபுவும், டாக்டரும் இசைந்தனர்.

ஜிம் சிறுவன். எல்லோரிடமும் இயல்பாகப் பழகி வந்தான். ஆகவே, நம்பிக்கையான ஆட்களைக் கண்டுபிடிக்கும் வேலை அவனுக்குத் நேரப்பட்டது. பிரபுவின் ஆட்களில் சிலர் லஞ்சம் வாங்கிக் கொண்டு சில்வரின் பக்கம் சேர்ந்திருந்தனர். பழைய பணியாட்களில் மூன்றே பேர்கள்தான் உண்மையாகத் தோன்றினர். ஜிம் கணக்குப் போட்டான். பிரபுவின் கட்சியில் ஏழு பேரும், சில்வரின் கட்சியில் பத்தொன்பது பேரும் இருப்பதாகத் தோன்றியது. ஏழு நல்லவர்கள் பத்தொன்பது தீயவர்களை எப்படிச் சமாளிப்பது என்ற கவலை ஜிம்மைத் துளைத்தது. இரவெல்லாம் அவன் தூங்கவேயில்லை.



விடிந்தது. கடற்கரை பளிச்செனத் தெரிந்தது. மாலுமிகள் ஆவலோடு நோக்கினர். ஒரு பெரிய தீவு, அருகில் சின்னத் தீவு, இடையில் குறுகிய கடல் — எல்லாம் நன்றாகத் தெரிந்தன. அந்தக் குறுகிய இடத்தில் கப்பலை நங்கூரம் போட்டு நிறுத்தினர்.

ஜிம் பெரிய தீவை நோக்கினான். கரையின் அருகே இரண்டு சிறிய குன்றுகள், பின்னால் ஒரு மலைச்சிகரம். தீவு முழுவதும் காடு. ஆங்காங்கு பாறைகள். சிறகடிக்கும் பறவைகள். எங்கும் அசாதாரண அமைதி. இந்தக் காட்சி ஜிம்மின் மனத்தில் ஒருவித அச்சத்தை உண்டாக்கியது.

கப்பல் பணியாட்கள் பொறுமையிழந்து காணப்பட்டனர். ஆகவே, அவர்கள் விரும்பினால், தீவில் இறங்கி இளைப்பாறலாம் என்று கேப்டன் அனுமதி கொடுத்தார். கப்பலிலிருந்து இரண்டு படகுகள் புறப்பட்டன. அவற்றில் சில்வரும் அவனுடைய தோழர்கள் பன்னிரண்டு பேர்களும் இருந்தனர். தன் நண்பர்களிடம் சொல்லாமல் ஜிம்மும் ஒரு படகில் ஏறிக்கொண்டான். படகுகள் கரையை அடைந்தன. ஜிம் நிற்காமல் வெகு தூரம் காட்டுக்குள் ஓடினான். களைப்பு மேலிட ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான்.

ஒரு கறுப்பு உருவம் ஜிம்மை நோக்கி வந்தது. மிருகம் போலத் தோற்றமளித்தது. அருகில் வந்த பிறகுதான் அது ஒரு மனிதன் என்று தெரிந்தது. அவன் கந்தல் ஆடைகளையும், ஆட்டுத் தோலையும் உடுத்தியிருந்தான். தலைமுடியும், தாடி மீசையும் நீளமாக இருந்தன. இடுப்பில்



சிறு கத்தி. அவன் இரண்டு கைகளையும் விரித்து, முழந்தாளிட்டு, ஜிம்முக்கு முன்னால் பணிந்தான்.

''யார் நீ?'' ஜிம் கேட்டான்.

''என் பெயர் பென்கன். நான் கேப்டன் பிளின்டின் கூட்டத்தைச் சேர்ந்தவன். அவருடைய வால்ரஸ் என்ற கப்பலின் பணியாளன். கொள்ளையிட்ட தங்கத்தை பிளின்ட் புதைக்கப் போகும் போதெல்லாம் நானும் போவேன். என்னுடைய தவறுகளுக்குத் தண்டனையாக என்னைத் தனிமையில் அவர்கள் விட்டுச் சென்றனர். மூன்று ஆண்டுகளாக இங்கு வாடுகிறேன். தாயகம் திரும்பத் துடித்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் என்னை இங்கிலாந்துக்கு அழைத்துப் போவதாக வாக்களித்தால், பிளின்டின் புதையலை உங்களுக்குக் காட்டுகிறேன். எனக்கு ஆயிரம் பவுன் மட்டும் தந்தால் போதும்'' என்றான் பென்கன் பணிவாக.

ஜிம் அவனுடைய கோரிக்கைக்கு இணங்கினான். பென்கனிடம் ஒரு சிறு படகு இருந்தது. இருட்டிய பிறகு இருவரும் அதில் ஏறிக் கப்பலை அடையத் தீர்மானித்தனர்.

ஜிம் கப்பலை விட்டுப் போன செய்தி பிரபுவுக்குத் தெரிந்தது. அவனுக்கு சில்வரின் ஆட்களால் ஆபத்து வருமோ எனப் பயந்தார். டாக்டர், தீவின் படத்தை ஆராய்ந்தார். கிழக்குப் பகுதியில் 'தற்காப்பு இல்லம்' என்று எழுதப்பட்டிருந்தது. உடனே அவர் அந்தப் பகுதிக்குச் சென்று இல்லத்தைப் பார்வையிட்டார். மத்தியில் ஓர் இல்லம். அதைச் சுற்றிலும் நீண்ட மரக் கம்புகளை வரிசையாக நட்டு வேலிபோலக் கட்டியிருந்தனர். அருகில் தெளிந்த நீரூற்று இருந்தது. அந்த இடம் அவருக்கு மிகவும் பிடித்தது.

டாக்டர் கப்பலுக்குத் திரும்பி நண்பர்களோடு இல்லத்தைப் பற்றிப் பேசினார். கப்பலில் சிலரைக் காவல் வைத்தனர். ஆயுதங்களையும், உணவுப் பொருள்களையும் படகுகளில் ஏற்றித் தற்காப்பு இல்லத்திற்கு மாற்றினர். நான்கு முறை அவ்வாறு செய்தனர். ஐந்தாம் முறை தீவுக்குள் போகும் போது கப்பலில் இருந்த சில்வரின் ஆட்கள் அவர்களை நோக்கிச் சுட்டனர். பிரபுவும் நண்பர்களும் தீவுக்குள் விரைந்தனர். ஆனால் தீவில் இருந்த சில்வரின் ஆட்கள் திடீரெனத் தோன்றி அவர்களைத் தாக்கினர். இரண்டு பக்கங்களிலிருந்தும் தாக்குதல் நடந்தது. ஒரு பணியாள் வீழ்ந்தான். மற்றவர்கள் இல்லத்திற்குள் விரைந்து சென்று தப்பித்தனர். இல்லத்தின் மீது 'யூனியன் ஜாக்' கொடியை டாக்டர் பறக்கவிட்டார். ஜிம்மைப் பற்றி அவர்கள் கவலைப்பட்டனர். சிறிது நேரத்தில் ஜிம்மும் வேலியைத் தாண்டிக் குதித்து இல்லத்திற்குள் வந்து அவர்களுடன் கலந்து கொண்டான்.


பென்கனின் கதையை ஜிம் தன் நண்பர்களுக்குச் சொன்னான். மறுநாள் இல்லத்தின் வாசலில் சில்வர் நின்றான். சமாதானக் கொடி கையில் பறந்தது. புதையலின் படத்தைக் கொடுத்து விட்டால், அவர்களை உயிரோடு விட்டு விடுவதாகச் சொன்னான். கேப்டன் ஸ்மாலட் அவனை வாயில் வந்தபடி வைது அனுப்பினான்.

சில்வர் கோபத்தோடு போனான். சிறிது நேரத்தில் கொள்ளைக்காரர்கள் இல்லத்தைச் சூழ்ந்து கொண்டு துப்பாக்கியால் சுட்டனர். தாக்குதல் ஓய்ந்தது. இரு தரப்பிலும் ஆட்கள் சேதம். கேப்டன் ஸ்மாலட்டுக்கும் காயம் ஏற்பட்டது. அவருக்குக் காவலாக ஜிம்மை அமர்த்திவிட்டு, நண்பர்களையும் எச்சரித்து விட்டு டாக்டர் பென்சனைத் தேடிப் போனார்.

''ஏன் இந்தப் பொண்ணு விக்கி விக்கி அழுகிறா?

''இவளுடைய அக்கா புதிசா வாங்கி வந்திருக்கிற விக்கியை ஓட்டிப் பார்க்கணுமாம்''


-மஞ்சுதேவன்



ஜிம் தனக்கு இடப்பட்ட பணியை மறந்தான். மறுபடியும் யாரிடமும் சொல்லாமல் அவன் இல்லத்தைவிட்டு வெளியேறினான். பென்கன் கொடுத்த சிறிய படகைச் செலுத்திக் கொண்டு ஸ்பானி யோலாவை அணுகினான். கப்பலின் உச்சியில் கொள்ளைக்காரர்களின் கறுப்புக் கொடி பறந்தது. இருவர் கப்பலுக்குக் காவலாக இருந்தனர். அவர்கள் நன்றாகக் குடித்துவிட்டுச் சண்டையிடும் இரைச்சல் கேட்டது.

ஜிம் நங்கூரத்தை அறுத்துவிட்டுக் கப்பலை விடுவித்தான். அது காற்றடிக்கும் திசையில் நகர ஆரம்பித்தது. தன்னுடைய சிறு படகிலேயே ஜிம் இரவு உறங்கினான். பொழுது புலர்ந்ததும் அவனுடைய படகு கப்பலுக்குச் சமீபத்திலேயே இருந்தது. ஜிம் ஒரு கயிற்றைப் பிடித்துக் கொண்டு கப்பல் மீது ஏறினான். தளத்தில் இருந்த இருவரில் ஒருவன் இறந்திருந்தான். மற்றவனுக்கு நல்ல காயம். அவனுக்கு முதலுதவி செய்து உணவும், நீரும் அளித்தான். பிறகு அவனை மிரட்டிப் பணிய வைத்துக் கப்பலைக் கைப்பற்றினான். அவனுடைய உதவியுடன் கப்பலைத் தீவின் மறு பகுதிக்கு ஓட்டிச் சென்றான். அங்கு சென்றதும் பணிவாக இருந்த கொள்ளைக்காரன் ஜிம்மைத் தாக்கினான். இருவருக்கும் கைகலப்பு நடந்தது. கொள்ளைக்காரன் மாண்டான். கப்பலின் மீதிருந்த கறுப்புக்கொடியை ஜிம் அகற்றினான்.

இரவு நேரம்... நல்ல இருட்டு... ஒரு வீரச் செயலை வெற்றியுடன் முடித்த பெருமை பொங்க ஜிம் தற்காப்பு இல்லத்திற்குள் நுழைந்தான். உள்ளேயிருந்து ''பணம்!டணம்! பணம்!'' என்று ஒரு மெல்லிய குரல் ஒலித்தது. அது ஒரு கிளியின் குரல். ஜிம்முக்குச் சரேலென ஞாபகம் வந்தது. சில்வர் எப்போதும் தன்னுடன் எடுத்துச் செல்லும் கிளியின் குரல்தான் அது. ஜிம் தப்பித்துச் செல்ல நினைப்பதற்குள் கிளியின் மொழி அங்கு உறங்கியவர்களை எழுப்பிவிட்டது. பலர் ஓடிவந்தனர். ஜிம், தன் நண்பர்களை அங்கே காணவில்லை. அதற்கு மாறாகச் சில்வரும், அவனுடைய தோழர்களும் தன்னைச் சூழ்ந்திருப்பதை ஜிம் கண்டான். டாக்டரும், நண்பர்களும் அந்த இல்லத்தை சில்வரின் ஆட்களுக்கு அளித்து விட்டுப் போய் விட்டனராம். எங்கே போனார்கள் என்று தெரியவில்லை. கொள்ளைக்



காரர்களின் வசம் இருந்த ஸ்பானியோலாவைத் திடீரெனக் காணவில்லை. ஆகவே, உணவும், ஆயுதங்களும் நிறைந்த தற்காப்பு இல்லத்தையாவது கைப்பற்றலாம் என்ற எண்ணத்தோடு தான், டாக்டரையும் மற்ற ஆட்களையும் சமாதானமாக வெளியே போக அனுமதித்தோம் என்றான் சில்வர். மேலும் அவன் ஜிம்மைத் தன் பக்கம் சேரச் சொன்னான். அவ்வாறு செய்தால் ஜிம்மைப் பாதுகாப்பதாக உறுதியளித்தான்.


சில்வரின் ஏற்பாடுகள் அவனுடைய தோழர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் சில்வரைப் பதவியிலிருந்து நீக்க விரும்பினர். ஆனால் சில்வர் பிறவியிலேயே ஒரு தலைவன். அவர்களை எப்படிச் சமாளிப்பது என்பதை அவன் நன்கு அறிந்திருந்தான். எனவே டாக்டரிடமிருந்து ஏற்கெனவே பெற்ற புதையல் தீவின் படத்தைத் திடீரென்று அவர்கள் முன்பு வைத்தான். படத்தைக் கண்டதும் அவர்கள் புதையலையே கண்டது போல ஆனந்தப்பட்டனர். சில்வர் மீண்டும் தலைவன் ஆனான். ஜிம்மை அவர்கள் சிறைப் பிடித்தனர்.

ஏற்கெனவே செய்து கொண்ட ஒப்பந்தப்படி டாக்டர் லிவ்சே அடுத்த நாள் தற்காப்பு இல்லத்திற்கு வந்தார். சில்வர் அவரை வரவேற்று 'உங்களுக்கு ஆச்சரியம் தரும் செய்தி' ஒன்று சொல்லப் போகிறேன். நேற்றிரவு ஒரு புதிய விருந்தாளி இங்கு வந்திருக்கிறான்'', என்றான்.

''ஜிம் அல்லவே?'' என்று கேட்டார் டாக்டர்.

''ஜிம்மேதான்!''

''என்னங்க! தூளியிலே குழந்தையைக் காணோம்!'' -குமார்



''சரி. முதலில் கடமை. பிறகு மற்ற விஷயங்கள். எங்கே நோயாளிகளைக் காட்டு, பார்க்கலாம்!'' என்றார் டாக்டர்.

நோயுற்றிருந்த அந்தப் பயங்கரக் கொள்ளைக்காரர்கள் பள்ளிக்கூடச் சிறுவர்களைப் போல அவர் கொடுத்த மருந்துகளை வாங்கிச் சாப்பிட்டனர். ''என்னுடைய வேலை முடிந்தது. அந்தச் சிறுவனுடன் சிறிது பேசலாமா?'' என்று டாக்டர் ஜிம்மைக் குறிப்பிட்டுக் கேட்டார். கொள்ளைக்காரர்கள், ''அனுமதிக்க முடியாது'' என்றனர்.

''டாக்டர், உங்களை நம்புகிறோம். ஜிம்மும் தப்பிச் செல்ல மாட்டேன் என்று பிரமாணம் செய்தால் நீங்கள் அவனோடு பேசலாம்!'' என்று சில்வர் சொன்னான். ஜிம் உறுதியளித்ததும், டாக்டருக்கு அருகில் கொண்டு வரப்பட்டான்.

''ஜிம்! நீயே உனக்குக் கஷ்டத்தை வரவழைத்துக் கொண்டாய். ஸ்மாலெட்டின் அருகிலேயே இருந்திருந்தால் உனக்கு இவ்வளவு கஷ்டமும் வந்திருக்குமா?'' என்று கேட்டார்.

''டாக்டர்! என்னை மன்னித்து விடுங்கள். என் செயலுக்காக நான் நிறைய அனுபவித்து விட்டேன். நான் முன்பே இறந்திருக்கவேண்டும். ஆனால் சில்வர்தான் தலையிட்டு என்னைக் காப்பாற்றினான். நான் சாவதற்கு அஞ்சவில்லை. அவர்கள் என்னைச் சித்ரவதை செய்யாமல் விட்டால் சரி'' என்று சொல்லி ஜிம் அழுதான்.

டாக்டருக்கு மனம் இரங்கியது. ஜிம்மைத் தன்னுடன் ஓடி வரும்படி கேட்டார்.

''சில்வர் என்னை நம்புகிறான். நான் அவனுக்கு வாக்குக் கொடுத்து விட்டேன். ஆகவே நான் இங்கேயே தான் இருப்பேன். ஆனால், ஒரு விஷயம். தீவின் வடக்குப் பகுதியில் கப்பல் பத்திரமாக இருக்கிறது. நான் தான் அங்கு அதைச் செலுத்தியிருக்கிறேன். ஆகவே சில்வரின் ஆட்கள் அதைப் பிடிக்கும் முன் நீங்கள் கப்பலைக் கைப்பற்றுங்கள்'' என்றான் ஜிம்.

''ஜிம்! நீ எங்களைப் பல ஆபத்துக்களிலிருந்தும் காப்பாற்றியிருக்கிறாய். ஆகவே உன்னைக் காப்பது எங்கள் கடமையாகிறது'' என்று டாக்டர் கூறி சில்வரைக் கூப்பிட்டார்.

''இங்கிலாந்துக்கு நாம் உயிரோடு திரும்பினால் உனக்குத் தண்டனை வரா

மல் காப்பாற்றுகிறேன். ஆனால் அது வரை நீ ஜிம்மைப் பாதுகாக்க வேண்டும்'' என்று சில்வரிடம் கூறி விடை பெற்றார்.

* * *

சில்வரும் தோழர்களும் புதையலின் படத்தை எடுத்துக் கொண்டு உற்சாக மாகப் புறப்பட்டார்கள். ஜிம் ஓடிப் போகாமல் இருப்பதற்காக அவனு டைய இடுப்பில் கயிற்றின் ஒரு முனை யைக் கட்டி மறு முனையை சில்வர் பிடித்துக் கொண்டான். காட்டின் உள்ளே புகுந்து நடந்தனர்.

சாலை ஓரத்தில் ஒரு எலும்புக் கூடு கிடந்தது. அதன் மேல் மாலுமிகள் அணியும் நீலச் சட்டை இருந்தது. அதைக் கண்டு கொள்ளைக்காரர்கள் திடுக் கிட்டனர். இறந்துபோன கேப்டன் பிளின்டின் ஆவி அங்கு உலவுவதாக அவர்கள் உணர்ந்தனர். திடீரென்று,

''மாண்ட மனிதனின் பெட்டியைத் தேடி மனிதர் போகின்றார்... ஓ ஓ ஓ....'' என்ற பழைய பாட்டு அசரீரியாக ஒலித்தது.

''இது பிளின்டின் குரல்தான்! அவ னுடைய ஆவி பாடுகிறது!'' என்றான் ஒருவன். மற்றவர்கள் பயந்து நடுங் கினர். அவர்களுக்கு மூச்சுத் திணறி யது. பேச்சு வரவில்லை. சில்வர் அவர் களைச் சமாதானப்படுத்தினான்.

படத்தில் ''புதையல்'' என்று குறிப் பிட்டிருந்த இடத்தை அடைந்ததும் திடுக்கிட்டு, 'ஓ'வென எல்லோரும் அலறினர். அந்த இடத்தில் ஒரு நீண்ட பெரிய குழி இருந்தது. குழியின் அடி யில் புற்கள் முளைத்திருந்தன. குழிக்கு மேலே 'வால்ரஸ்' என்று பெயர் பொறித்த ஒரு உடைந்த பெட்டியும், ஒரு கோடரியும் கிடந்தன. ஆனால் அவர்கள் ஆவலோடு தேடி வந்த லட்சக் கணக்கான பவுன்களைக் காண வில்லை! புதையல் மாயமாய் மறைந் திருந்தது!

அவர்கள் அப்படியே இடிந்து போய் விட்டனர். சில்வர் சமாளித்துக்கொண் டான். ஜிம்மிடம் ஒரு துப்பாக்கியைக் கொடுத்தான். சில்வரும், ஜிம்மும் குழிக்கு மறு பக்கம் விரைந்து போய் நின்று கொண்டனர். அவர்களுக்கு எதிரில் ஐந்து கொள்ளைக்காரர்கள் செய் வதறியாது நின்றிருந்தனர். இடுப்பில் கட்டியிருந்த கயிற்றை அறுத்துவிட்டு சில்வரும் ஜிம்மும் துப்பாக்கியோடு தயாராக இருந்தனர்.

''நம்மை முட்டாள்களாக்கிய சனி யன் பிடித்த சில்வரையும், இந்தச் சிறுவனையும் தொலைத்து விடுவோம்'' என்று கோபத்தோடு சொல்லிக் கொண்டே மெர்ரி என்ற கொள்ளைக் காரன் துப்பாக்கியை உயர்த்தினான். உடனே ''டுமீல்! டுமீல்! டுமீல்!'' என மூன்று குண்டுகள் எங்கிருந்தோ



பாய்ந்து வந்தன. மெர்ரியின் தலை தொங்கியது. புதையல் குழியில் அவன் விழுந்தான். அவனுக்கு அடுத்தவனும் அதே போலக் கீழே சாய்ந்தான். பாக்கி யிருந்த மூன்று கொள்ளைக் காரர்களும் கலவரமடைந்து அந்த இடத்தை விட்டுத் தலை தெறிக்க ஓடினர். டாக்டர், பென்கன், ஒரு பணியாளன் மூவரும் புகையும் துப்பாக்கிகளோடு ஜிம்மின் எதிரே தோன்றினர்.

கொள்ளைக்காரர்கள் விட்டுச்சென்ற கோடரியையும், மற்ற ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு டாக்டரும், நண்பர்களும் குறுக்கு வழியாகக் கடற்கரைக்கு விரைந்தனர். டாக்டர் தன் கதையைச் சொல்லிக் கொண்டு வந்தார். இரண்டு மாதங்களுக்கு முன்பே பென்கன் புதையல் முழுவதையும் தான் வசித்து வந்த குகைக்கு எடுத்துச் சென்றிருந்தான் என்றும், சில்வரின் கவனத்தை வேறு பக்கம் திருப்பவே, புதையலின் படத்தை அவனிடம் கொடுத்ததாகவும், தற்காப்பு இல்லத்திலிருந்து அவர்கள் பென்கனின் குகைக்குச் சென்றதாகவும் டாக்டர் கூறினார்.

பேசிக் கொண்டே டாக்டரும் நண்பர்களும் கடற் கரையை அடைந்தனர். முதலில் வந்த இரண்டு படகுகளும் அங்கே தயாராக இருந்தன. ஒன்றை உடைத்து எறிந்தனர். மற்றதில் ஏறிக் கொண்டு பென்கனின் குகைக்குச் சென்றனர். அங்கு கேப்டன் ஸ்மாலட்டும், பிரபுவும் இருந்தனர். குகையின் ஒரு மூலையில் காப்டன் பிளின்டின் ஏழு லட்சம் பவுன் காசுகளும் கண்ணைப் பறிக்கும் விதத்தில் மின்னிக் கொண்டிருந்தன.

தங்கத்தைக் கொஞ்சம்கொஞ்சமாய்க் கொண்டு போய் ஸ்பானி யோலாவில் பத்திரமாகச் சேர்த்தனர். நிறைய உணவுப் பொருள்களையும், ஆயுதங்களையும் தீவில் ஓடிச் சென்ற மூன்று கொள்ளைக் காரர்களுக்காக விட்டு வைத்தனர். பிரபு, டாக்டர், ஜிம், கேப்டன் ஸ்மாலட், ஒரு பணியாளன், பென்கன், சில்வர் ஆகிய எழுவரும் கப்பலில் ஏறிக் கொண்டனர்.

புதையலைச் சுமந்து கொண்டு ஸ்பானியோலா புறப்பட்டது. இங்கிலாந்து நோக்கிப் பயணம் தொடர்ந்தது. சில்வர் ஒரு சிறு பணப் பையுடன் வழியிலேயே இறங்கிக் கொண்டான். ஜிம்மும், மற்றவர்களும் நலமாக பிரிஸ்டல் துறைமுகத்தை அடைந்தனர். புதையலை அவர்கள் எல்லோரும் சந்தோஷமாகப் பங்கு வைத்துக் கொண்டனர்.

(R. L. STEVENSON ஆங்கிலத்தில் எழுதிய TREASURE ISLAND என்ற கதையின் சுருக்கமே இது)'




கார்ட்டூன் திரைப்படங்களைத் தயாரிப்பதில் உலகப் புகழ் பெற்றவர் வால்ட் டிஸ்னி என்பதை அறிவீர்கள். உலகின் பல பாகங்களைச் சேர்ந்த அரசர்கள், ஜனாதிபதிகள், முக்கிய பிரமுகர்கள் ஆகியோரிடமிருந்து ஆயிரக்கணக்கான அன்புப் பரிசுகளும் 31 ஆஸ்கார் பரிசுகளும் பெற்ற அவர் தமது 8--வது வயதில் செய்த தொழில் என்ன தெரியுமா?

பிரேத வண்டிகளைச் சுத்தம் செய்து கொடுப்பதுதான்! சாதாரண உயர்நிலைப் பள்ளிப் படிப்பைக்கூட முடிக்காதவர் வால்ட் டிஸ்னி!

அப்படிப்பட்ட வால்ட் டிஸ்னிக்குக் கிடைத்த டாக்டர் பட்டங்கள் ஐந்து!

—''விந்தை மனிதர் வால்ட் டிஸ்னி'' என்ற புத்தகத்திலிருந்து.

—வி. உஷா



அழ. வள்ளியப்பா

அப்புசாமி:

குப்பு சாமி, குப்பு சாமி
　கொள்ளைக் கூட்டத்தைத்
துப்புத் துலக்கிப் பிடிக்க என்ன
　தொடர்ந்து செய்கிறாய்?

குப்புசாமி:

'உப்பு விற்கும் குப்பம் மாளின்
　ஓலைக் குடிசையில்
முப்பத் தைந்து பவுன் இருக்கு!
　முயன்று பாருங்கள்'

என்று நானும் கொள்ளைக் கூட்டத்
　தலைவர் பெயருக்கே
இன்றே எழுதிப் போட்டு விட்டு,
　இரவு வேளையில்,

சென்றே அந்தக் குடிசைப் பக்கம்
　பதுங்கிக் கொள்ளு வேன்.
திருடர் வரவே சீட்டி அடிப்பேன்:
　மாட்டிக் கொள்ளுவார்!

குப்பம்மாளின் குடிசைக் குள்ளே
　கொள்ளைக் கூட்டத்தைக்
'கப்' பென் றுடனே பிடித்து விடுவேன்,
　கையும் களவுமாய்!

சுப்பு வீட்டில் திருட்டுப் போன
　சொத்து முழுவதும்
அப்போதே நாம் திரும்பப் பெறலாம்
　ஆஹா பெருமையே!

பெருமையோடு அரசுப் பரிசும்
　பெறலாம் அல்லவா?
பேரும் படமும் செய்தித் தாளில்
　வருமே அல்லவா?

அப்புசாமி:

எல்லாம் சரிதான்; கொள்ளைக் கூட்டத்
　தலைவன் முகவரி
எழுத வேண்டும் உறையின் மீது
　எங்கே உள்ளதோ?

குப்புசாமி:

அடடே! கடித உறையில் எழுத
　அட்ரஸ் வேணுமே!
அதனைப் பெறவே என்ன வழியோ
　அப்பு சாமி சார்?

நாடோடிப் பாடல்கள்



கோபாலக் கண்ணன்

பாலைக் குடிக்கிறாண்டி
கோபாலக் கண்ணன்
பானையை உடைக்கிறாண்டி
கோபாலக் கண்ணன்

மோரைக் குடிக்கிறாண்டி
கோபாலக் கண்ணன்
மொந்தையை உடைக்கிறாண்டி
கோபாலக் கண்ணன்

புன்னைமரம் ஏறுறாண்டி
கோபாலக் கண்ணன்
புல்லாங்குழல் ஊதுறாண்டி
கோபாலக் கண்ணன்

உன்னைஎன்னை மட்டுமாடி
கோபாலக் கண்ணன்—இந்த
உலகத்தையே மயக்குறாண்டி
கோபாலக் கண்ணன்!



விருந்து

ஆத்து மணலிலே சோறாக்கி
ஆவாரம்பூவைக் கறிசமைச்சு
மின்மினிப்பூச்சி விளக்கெரிய
விருந்து படைக்கிறாள், பாருங்களேன்!

குழந்தை—ஒரு தாமரைப்பூ

ஏழுகடல் நீந்தி – நாங்கள்
எடுத்துவந்த தாமரைப்பூ

பத்துக்கடல் தாண்டி – நாங்கள்
பறித்துவந்த தாமரைப்பூ

அணைத்து மனம்மகிழ – நாங்கள்
அள்ளிவந்த தாமரைப்பூ

கொஞ்சி மனம்மகிழ – நாங்கள்
கொண்டுவந்த தாமரைப்பூ.

நல்ல மழை

நல்ல மழை பெய்ததனால்
நாடு செழித்ததுவே,
பூமி குளிர்ந்ததுவே,
பொய்கை நிரம்பியதே,
ஏரியெல்லாம் நிரம்பி
எட்டுத் திசை பாய,
மடுவெல்லாம் நிரம்பி
வழிகிறதே வெள்ளமெல்லாம்.
தடாகமெல்லாம் நிரம்பித்
தாமரைகள் பூத்தனவே,
வயலெல்லாம் நிரம்பி
வாய்க்காலும் தானோடி
உலர்ந்த மரங்களெல்லாம்
உயிருண்டாய்த் தளிர்த்தனவே

மைந்தன் பெறுவதற்கு....

மைந்தன் பெறவேண்டுமென்று
வருந்தியே பாண்டியர்கள்

சாலைகள் போட்டுவைப்பார்;
சத்திரங்கள் கட்டிவைப்பார்;

தவித்து வருவோர்க்குத்
தண்ணீர்ப்பந்தல் இட்டுவைப்பார்;

பசித்து வருவோர்க்குப்
பாலமுதம் செய்துவைப்பார்;

ஆலயங்கள் தோறும்
அணிமதில்கள் கட்டிவைப்பார்;

கோயில்கள் தோறும்
கோபுரங்கள் கட்டிவைப்பார்;

காணாத கோயிலுக்கும்
காணிக்கை அனுப்பிவைப்பார்!





மழை பெய்யுது!

மழை பெய்யுது: மழை பெய்யுது
நெல்லை வாருங்க!

மூணுபடி நெல்லெடுத்து
முறுக்குச் சுத்துங்கோ!

ஏர்ஓட்டுற மாமனுக்கு
எண்ணி வையுங்க!

சும்மா இருக்கிற மாமனுக்கும்
சுட்டு வையுங்க!

முன்னு மூலையிலே

முன்னு மூலையிலே மூணுகுளம் வெட்டினேன்,
ரெண்டுகுளம் பாழு: ஒண்ணு தண்ணியே இல்லே!

தண்ணியில்லாக் குளத்துக்கு மண்வெட்ட மூணுபேர்
ரெண்டுபேரு மொண்டி: ஒருத்தனுக்குக் கையே இல்லே!

கையில்லாத குயவன், செய்தபானை மூணு.
ரெண்டு பானை பச்சை: ஒண்ணு வேகவே இல்லே!

வேகாத பானைக்குப் போட்டரிசி மூணரிசி.
ரெண்டரிசி நறுக்கு: ஒண்ணு வேகவே இல்லே!

வேகாத சோத்துக்கு விருந்தாளி மூணுபேர்.
ரெண்டுபேர் பட்னி: ஒருத்தன் உண்ணவே இல்லே!

உண்ணாத கொத்தன் கட்டினது மூணுகோயில்.
ரெண்டு கோயில் பாழு: ஒண்ணு சாமியே இல்லே!


சாமியில்லாக் கோயிலுக்குச் சதிராட மூணுபேர்.
ரெண்டுபேர் மொட்டை; ஒருத்திக்கு மயிரே இல்லே!

மயிரில்லாப் பொண்ணுக்கு வந்த மாப்பிள்ளை மூணுபேர்:
ரெண்டுபேர் பொக்கை; ஒருத்தனுக்குப் பல்லே இல்லே!




திருக்குறள் புதிர்

புதிர் - 9



புதிர் - 10



மேலே இரண்டு படங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு படமும் ஒரு திருக்குறளை நினைவூட்டுகின்றதல்லவா? இரு திருக்குறள்களையும் சரியாகக் கண்டுபிடித்து ஒரு தாளில் எழுதிக் கொள்ளுங்கள். அடுத்த பக்கம் உள்ள விடையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்..



திரு. வி.க. சொன்ன செய்தி

பெங்களூரில் ஒரு சாமியார் இருந்தார். அவர் வங்காளத்தைச் சேர்ந்தவர். பெயர் யோகானந்தீஸ்வரர். அவர் எனக்கு மிகவும் நெருங்கிய நண்பர். அவர் ஒருமுறை சென்னைக்கு வந்திருந்தார். அப்போது என்னைப் பார்த்தார். ''நான் நாளைக்குக் கல்கத்தாவுக்குப் போகிறேன். அங்கு எனக்குத் தெரிந்த ஒரு டாக்டர் இருக்கிறார். அவரிடம் சென்று ஒரு பெரிய 'ஆபரேஷன்' செய்துகொள்ள வேண்டும்'' என்றார்.

உடனே நான், ''இதற்காகவா கல்கத்தா போகிறீர்கள்? இங்கேயே பல கைதேர்ந்த டாக்டர்கள் இருக்கிறார்களே! அவர்களிடம் நீங்கள் 'ஆபரேஷன்' செய்துகொள்ளலாமே! டாக்டர் ரங்காச்சாரியாரைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்குமே! அவர் பெரிய நிபுணர்! எனக்கு மிகவும் வேண்டியவர். அவரிடம் நான் உங்களை அழைத்துச் செல்கிறேன்'' என்றேன்.

ஆனால், அந்த வங்காளச் சாமியார் இசையவில்லை. கல்கத்தாவுக்கே போக வேண்டும் என்று கூறினார். நான் பல முறை வற்புறுத்தியும் பயனில்லை.

கடைசியில் நான், ''உங்களுக்கு டாக்டர் ரங்காச்சாரி மீது நம்பிக்கை இல்லையா? அல்லது என் பேச்சிலே நம்பிக்கைஇல்லையா?'' என்றுகேட்டேன்.

அதற்கு அந்தச் சாமியார், ''அப்படி ஒன்றுமில்லை. என் தாய்மொழி வேறு. உங்கள் டாக்டர்களின் தாய்மொழி வேறு. எனக்கு வங்காளியும் ஆங்கிலமும்தான் தெரியும். அவர்களுடன் வங்காளத்தில் பேசினால், அவர்களுக்குப் புரியாது. ஆங்கிலத்தில்தான் பேச வேண்டும். நான் இப்போது நன்றாகத்தான் ஆங்கிலத்தில் பேசுகிறேன். ஆனால் 'ஆபரேஷன்' செய்து கொள்ளும் சமயம், ஒருவேளை நான் நினைவு இழந்துவிடக் கூடும். அப்போது எனக்கு அந்நிய மொழியாகிய ஆங்கிலம் பேச வருமோ வராதோ! அப்போது நான் என் சொந்த மொழியாகிய வங்காளியில்தான் பேசுவேன். நான் பேசுவது என்ன என்பதை வங்காளி தெரிந்த டாக்டராயிருந்தால் எளிதில் புரிந்து கொள்ளுவார். இங்குள்ள டாக்டர்களால் புரிந்து கொள்ள முடியுமா? அதனால்தான் நான் கல்கத்தா போகிறேன்'' என்றார்.

பார்த்தீர்களா, தாய் மொழியின் பெருமையை! ஆபத்துக்கு உதவுவது அந்நிய மொழியன்று; தாய்மொழிதான்.

—திரு. வி. க.

திருக்குறள் புதிர் விடை

சலத்தால் பொருள்செய்து ஏமார்த்தல் பசுமண்
கலத்துள்நீர் பெய்துஇரீஇ யற்று (660)


புதிர்-9

தீய வழியில் பொருள் சேர்த்து, அதைக் காப்பாற்ற எண்ணுகிறான் ஒருவன். அது எப்படி இருக்கிறதாம்? பச்சைக் களிமண்ணால் செய்யப்பெற்ற மண் பாண்டத்திற்குள் நீரை ஊற்றி, அதைக் காப்பாற்ற முயலுவது போல இருக்கிறதாம்!

புதிர்-10

வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு (595)

தண்ணீர் எந்த அளவுக்கு நிற்கிறதோ, அந்த அளவுதான் நீரில் மலர்கின்ற பூக்களின் தாளின் நீளமும் இருக்கும். அதே போல், மக்களின் உயர்வு அவர்களின் நெஞ்சத்து அளவே ஆகும்.



விசுவும் கொசுவும்!

காளிதாசன்—

விசு: காதோரம் வந்து ஏதேதோ பாடும்
காரணம் என்ன கூறு?— கொசுவே,
காரணம் என்ன கூறு.?

கொசு: தோதாகப் பாடித் துயில்கொள்ள வைத்து
ஜோராக ரத்தம் குடிப்பேன் — பையனே,
ஜோராக ரத்தம் குடிப்பேன்...

விசு: ஊராரின் ரத்தத்தை உறிஞ்சிக் குடிப்பது
நீதான செயல் அல்லவோ — கொசுவே,
நீதான செயல் அல்லவோ?

கொசு: நன்மையும் தீமையும் நானெண்ணிப் பார்த்தால்,
உண்மையில் உயிர்வாழ மாட்டேன் — பையனே,
உலகினில் நான்வாழ மாட்டேன்,

விசு: பகலிலே வந்துநீ பாடிக் குடிக்கிற
பழக்கம் இல்லையே ஏன்? — கொசுவே,
பழக்கம் இல்லையே ஏன்?

கொசு: இரவிலே வந்தும் இத்தனை கேட்கிறாய்!
பகலிலே தொட்டால் விடுவாயோ — பையனே,
பகலிலே தொட்டால் விடுவாயோ?

விசு: உன்னாலே எமக்கு உபத்திரவம் அதிகம்
சொன்னாலும் புரியவில்லையே!— கொசுவே,
சொன்னாலும் புரியவில்லையே!



கொசு: உன்வீட்டைச் சுற்றி உள்ளஇடம் சுத்தமாய்
உண்டாக்கி வைத்தாய் ஆனால் — பையனே,
ஓடோடிப் போவேன் நானுமே!

விசு: இன்றேநான் உன்னை இடம்விட்டு ஓட்டுவேன்
நன்றாகச் சுத்தம் செய்வேன் — வீட்டில்,
நலம்வாழத் தூய்மை காப்பேன்.

சாக்கடையும் தண்ணீரும் சகதியும் அசுத்தங்களும்
தேங்குவதைத் தடுப்பேன். ஓடு — கொசுவே,
திரும்பியும் பார்க்காமல் ஓடு.

கொசு: நன்றுநான் செல்கிறேன்! நாளைநான் எங்கோ!
இனி என்ன இங்கு வேலை — பையனே,
ஏகுவேன் விடுவாய் ஆளை!



சின்னஞ் சிறு கிளியே!

திருமதி விஸ்வநாதன்

சோம்பல் மிகக்கெடுதி பாப்பா—தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே
பாப்பா...
—பாரதியார்.

அந்த அடர்ந்த காட்டில் பெரிய ஆலமரம் ஒன்று இருந்தது. அதன் அடர்ந்த கிளைகளுக்கிடையே இரண்டு அழகான பச்சைக்கிளிகள் வாழ்ந்து வந்தன. கழுத்தில் வட்டமான சிகப்புக் கோடும், பவளம் போலச் சிவந்த அலகுமாக ஆண் கிளி அங்கும் இங்கும் பறந்து திரிந்தது. பெண் கிளியும் பச்சைப் பசேலென்று மிக அழகாய்ப் பறந்தது.

சில நாட்களில் அந்தப் பெரிய ஆலமரத்தின் பொந்து ஒன்றில் அந்தக் கிளிகள் கூட்டைக் கட்டின. முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தன. மூன்று குஞ்சுகளும் அந்தக் கூட்டில் சுகமாய் வளர்ந்தன. தினந்தோறும் அம்மா கிளியும் அப்பாக் கிளியும் வெகுதூரம் பறந்து சென்று இரை தேடி வந்து குழந்தைகளுக்கு ஊட்டி வளர்த்தன. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகக் குஞ்சுகள் பெற்றோரின் அரவணைப்பில் வளர்ந்தன. நாளடைவில் அவற்றின் சின்னச் சிறகுகள் நீண்டு வளர்ந்தன.

ஒருநாள் அம்மாக் கிளி தன் குஞ்சுகளைக் குறித்து அப்பாக் கிளியிடம் சொன்னது:

''நம் குஞ்சுகள் நன்றாக வளர்ந்து விட்டன. நாளையில் இருந்து நாம் அவைகளுக்குப் பறக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும். பிறகு இரையெடுத்து உண்ணக் கற்றுத் தர வேண்டும்.'' என்றது. அப்பாக் கிளியும் இதை ஆமோதித்தது.

''குழந்தைகளே, உங்கள் மூவருக்கும் சிறகுகள் நன்றாக வளர்ந்து விட்டன. இனிமேல் கூட்டிலேயே அடைந்து கிடக்காமல் எங்களுடன் வெளியே வாருங்கள். உங்களுக்கு நன்றாகப் பறக்கவும், இரை தேடி உண்ணவும் கற்றுத் தருகிறேன்'' என்றது அம்மாக் கிளி.

''ஓ... இப்போதே வருகிறோம் அம்மா'' என்று முதல் இரண்டு கிளிகளும் குதித்துக் கொண்டு கிளம்பின. கடைசிக் குஞ்சு மட்டும் மௌனமாக இருந்தது.

''சின்னக்கிளி, நீயேன் பேசாமல் இருக்கிறாய்? நீ வரவில்லையா?'' என்று கேட்டது அம்மாக் கிளி.

''இல்லை அம்மா. வெளியே வர எனக்கு ரொம்ப பயமாக இருக்கிறது. என் சிறகுகள் இன்னும் வளரவில்லை. பறக்கத் தெரியாமல் கீழே விழுந்து விடுவேன். காகம் என்னைக் கொத்தி விடும்'' என்றது சின்னக் கிளி.

உண்மையில் அதற்கு 'யார் வெளியே போய்ச் சுற்றுவது...? ம்ஹூம். சிறகெல்லாம் வலிக்கும். கூட்டில் நன்றாகப் படுத்துத் தூங்குவதை விட்டு, யார் ஊரைச் சுற்றுவது?' என்று மனத்திற்குள் எண்ணம்.

''என்னிடம் பொய் சொல்லாதே, சின்னக் கிளி. உன் சிறகுகள் வளர்ந்து விட்டனவா இல்லையா என்று எனக்குத் தெரியாதா? இப்படி இருந்தாயானால், இந்த உலகில் உன்னால் பிழைக்கவே முடியாது. எழுந்து சுறுசுறுப்பாய் எங்களுடன் வா'' என்றது அம்மாக் கிளி. ஆனால், சின்னக் கிளி அம்மாவின் சொல்லைக் கேட்கவில்லை. கூட்டில் பதுங்கி உட்கார்ந்து கொண்டு, ''இல்லையம்மா. நான் இன்னொரு நாள் வருகிறேன்'' என்றது.

''சரி... சரி... குழந்தையைத் திட்டாதே. மற்ற இருவருக்கும் முதலில் பறக்கக் கற்றுக் கொடுப்போம். சின்னக் கிளியை இன்னொரு நாள் அழைத்துச் செல்லலாம்'' என்றது அப்பாக் கிளி.

''சின்னக் கிளி, நீ பத்திரமாய்க் கூட்டில் இரு. நாங்கள் வெளியே போய் விட்டுச் சீக்கிரம் திரும்பி வருகிறோம்'' என்று சொல்லிவிட்டு, அம்மாக்கிளியும், அப்பாக்கிளியும் மற்ற குஞ்சுகளுடன் வெளியே 'விர்ர்'ரெனப் பறந்தன.

சின்னக்கிளி நன்றாகத் தூங்கி எழுந்து சோம்பல் முறித்தது. ''ஆ.... என்ன சுகம்! ஆமாம்... வயிறு பசிக்கிறதே!... இன்னும் இந்த அம்மாவையும், அப்பாவையும் காணோமே!'' என்று நினைத்தபடி எட்டிப் பார்த்தது!

அவ்வளவுதான்! அங்கே ஒருவேடன் ஆலம் விழுதைப் பிடித்துக் கொண்டு ஏறி வருவதைப் பார்த்ததும் பயந்து போய், 'கீக்கீ...' என்று கத்தியது. சிறகுகளைப் படபடவென அடித்துக் கொண்டது. ஆனால் பறக்கவே முடியவில்லை. விர்ரென்று பறந்து தப்பிக்க வேண்டும். எப்படிப் பறப்பது?... 'ஐயோ! அம்மா, நீ சொன்னதைக் கேட்காமல் போனேனே...!' படபடவென்று சிறகுகளை அடித்துக்கொண்டு கத்தியது சின்னக்கிளி. சில நிமிடங்களில் வேடன் சின்னக்கிளியைப் பிடித்துக் கொண்டு போய்விட்டான்.

சிறிது நேரம் கழித்து, வெளியே சென்ற நான்கு கிளிகளும் திரும்பி வந்தன. கூட்டில் சின்னக் கிளியைக் காணாமல் அம்மாக்கிளியும், அப்பாக்கிளியும் தவித்தன. ஆளுக்கொரு பக்கமாகப் போய்த் தேடிப் பார்த்தன. அம்மாக் கிளி சாமர்த்தியமாய் ஒவ்வொரு வேடன் வீடாகத் தேடிப் பார்த்தது. கடைசியில் சின்னக் கிளியின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து விட்டது! அது கூண்டில் அடைபட்டுக் கிடந்தது. கூண்டின் அருகில் போய் அம்மாக் கிளி உட்கார்ந்தது. சின்னக் கிளி அம்மாவைப் பார்த்ததும் பரிதாபமாய்க் கத்தியது. சின்னக் கிளி கூண்டில் அடைபட்டுக் கிடப்பது ரொம்பப் பாவமாய் இருந்தது.

''அழாதே சின்னக் கிளி. சொன்ன பேச்சைக் கேட்காதவனுக்கு இதெல்லாம் பெரிய தண்டனைதான். சத்தம் போடாதே! அந்த வேடன் திரும்பி வந்து விடப் போகிறான்!

''நீ சமர்த்தாய் இங்கேயே இரு. உன்னைத் தப்ப வைக்க ஏதாவது வழி இருக்கிறதா என்று பார்த்து வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு, ஜன்னல் வழியாகப் பறந்தது அம்மாக்கிளி.

தன் கூட்டை அடைந்து அப்பாக் கிளியிடம் விஷயத்தைச் சொன்னது.



''அடடா... இப்போது என்ன செய்வது?'' என்று அவை கவலைப் பட்டன.

அப்போது அந்த வழியாக நகரத்திற்குப் போகும் பழவியாபாரி வந்து கொண்டிருந்தான். அவன் தினமும் அந்த வழியாக நகரத்திற்குச் செல்வான். கூடை நிறையப் பழங்களை வாங்கிக் கொண்டு கிராமத்திற்கு வந்து, அவற்றை விற்றுப் பணம் சம்பாதித்து வாழ்ந்து வந்தான். தினமும் அவன் அந்த வழியாகப் போகும் போது, ''கிளிகளா, சௌக்கியமா?'' என்று கேட்டுவிட்டுச் செல்வான். அன்றும் அவன் அப்படிக் கேட்டபோது,

''இல்லை ஐயா, நாங்கள் சௌக்கியமில்லை. எங்கள் சின்னக் கிளியை வேடன் பிடித்துப் போய் விட்டான். எப்படி மீட்பதென்பது தன் கவலை. நீங்கள் உதவி செய்தால் மீட்கலாம்'' என்றது அப்பாக் கிளி.

''அடடா... சின்னக் கிளி வேடனிடம் சிக்கிவிட்டதா..? ஐயோ பாவமே... என் உதவி இருந்தால் மீட்கலாமா? எப்படி? சொல்லுங்கள். என்னால் ஆன உதவியைச் செய்கிறேன்'' என்றான் பழ வியாபாரி.

''அந்த வேடன் கிளிகளைப் பிடித்துப் போய் விலைக்கு விற்பவன். நீங்கள் கிளி வாங்குபவரைப் போல் சென்று எங்கள் கிளியை விலை கொடுத்து வாங்கி வந்து எங்களிடம் கொடுத்து விடுங்கள் அதற்குப் பதிலாக இந்தக் காட்டில் உள்ள கொய்யாப்பழங்களைப் பறித்து உங்கள் கூடையை நிரப்பி அனுப்புகிறோம். நீங்கள் அதை விற்றுப் பணம் பெற்றுக் கொள்ளலாம்'' என்றது அப்பாக்கிளி. வியாபாரி சரியென்று கூடையை வைத்துவிட்டு, அம்மாக்கிளியுடன் கிளம்பினான். வேடன் சின்னக்கிளியுடன் சேர்த்து நான்கு கிளிகளைப் பிடித்து வைத்திருக்கிறான். சின்னக்கிளிக்குப் பதிலாக வேறு கிளியை வாங்கி வந்து விடாதீர்கள்! அந்த நாலு கிளிகளையும் நடனமாடச் சொல்லுங்கள். எது நடனமாடுகிறதோ அதுதான் எங்களுடைய சின்னக்கிளி என்று அடையாளம் தெரிந்து கொள்ளுங்கள்.'' என்றது அம்மாக் கிளி.

''அப்படியே செய்கிறேன்'' என்றான் வியாபாரி.

வேடன் வீட்டை வியாபாரிக்குக் காட்டி விட்டு அம்மாக் கிளி ஜன்னல் வழியாகப் பறந்து சின்னக் கிளியின் கூண்டின் மேல் உட்கார்ந்தது.

முன்பே தெரியுமா?

★ 17 தசைநார்களை உபயோகித்தால் போதும். அழகாய்ச் சிரிக்கலாம். ஆனால், முகத்தைச் சுளிக்க 43 தசைநார்களை உபயோகிக்க வேண்டும்.

★ திரைப்படத் துறையில் அதிகமான அகாடமி விருதுகளை (ஆஸ்கார் விருதுகள் பெற்றவர்)வால்ட் டிஸ்னி.

★ ஒரு தேக்கரண்டி தண்ணீரில் நூற்று இருபது நீர்த்துளிகள் இருக்கின்றன — சந்தேகமிருந்தால் எண்ணிப் பாருங்கள்.

★ கிராமபோன் இசைத்தட்டில் பதிவான முதல் பாடல் இதுதான் ''Mary had a little lamb''

★ ஒரு மனிதன் உடலில் இருக்கும் கார்பனை எடுத்தால் 9000 பென்சில்கள் தயாரிக்கலாம்.

★ குடல் பூச்சிகளில் ஒன்றான கொக்கிப் புழு ஒருநாளைக்கு சுமார் 7 சொட்டு இரத்தத்தைச் சாப்பிடுகிறது.

★ இந்தியாவில் முதன் முதலாகப் பெண்களை டாக்டர் படிப்பிற்கு அனுமதித்த மருத்துவக் கல்லூரி சென்னை மருத்துவக் கல்லூரி தான்! வருடம் 1875.

★ இட்லர் வைத்திருந்த மீசைக்கு அவர் நாட்டில் வைத்த பெயர் ''டூத் பிரஷ் மீசை''!

★ உலகில் அடிக்கடி பாடப்படும் ஆங்கிலப் பாடல் ''Happy birth day to you'' என்ற பாடல்தான்.

★ மகாத்மா காந்திக்கு 'மகாத்மா' என்ற பட்டத்தை 1915—ஆம் ஆண்டு ரவீந்திரநாத் தாகூர் வழங்கினார்.

★ கலப்படமில்லாமல் இயற்கையாகவே கிடைக்கும் பாலில் 85 சதவீதம் தண்ணீர் உள்ளது. ஆனால் நாம் வாங்கும் பாலில் உள்ள தண்ணீரின் அளவு?

—லட்சுமி சிவம்

நேரு மாமாவிடம் லட்சுமி கேட்டது?



1956—ஆம் ஆண்டு. நேருஜி பிறந்த நாளில் நேருஜியைப் பல குழந்தைகள் பேட்டி கண்டார்கள். அகில இந்திய வானொலி நிலையத்தினர் இந்த நிகழ்ச்சியை அவரது மாளிகையிலே ஏற்பாடு செய்திருந்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு சிறுமியும் இருந்தாள். அவள் பெயர் கி. லட்சுமி. அவள் நேருஜியைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டாள்:—

''மாமா, நீங்கள் அயல்நாட்டுக்குத் தூதர்களை அனுப்புகிறீர்கள். அந்த நாட்டுக் குழந்தைகளுக்காக யானைகளை அனுப்புகிறீர்கள். குழந்தைகளாகிய எங்களையும் ஏன் அனுப்பக்கூடாது? நாங்கள் அந்த நாட்டுக் குழந்தைகளைச் சந்தித்து, அவர்களிடம் நம்மைப் பற்றிக் கூறலாம்: அவர்களைப் பற்றியும் நாங்கள் தெரிந்து கொள்ளலாம் அல்லவா?''

லட்சுமியின் கேள்வி நேருவுக்கு மிகவும் பிடித்திருந்தது. ''நல்ல யோசனை. நிச்சயம் கவனிக்கிறேன்'' என்றார்.



''ஏய் சின்னக்கிளி, பழவியாபாரி உன்னை விலைக்கு வாங்க வருவார். அவர் நடனமாடும் கிளி வேண்டும் என்று கேட்பார். நீ சிறிது நேரம், காலை இப்படியும் அப்படியும் வைத்து உடம்பை விரித்து... இதோ...இதைப் போல நடனமாடு'' என்று அம்மாக் கிளி நடனமாடிக் காண்பித்தது. சின்னக் கிளி உடனே ஆடிக் காட்டியது.

''ஆமாம், அப்படித்தான். பிறகு உன்னை வாங்கி வந்து எங்களிடம் விட்டு விடுவார்'', என்றது அம்மாக்கிளி.

வெளித் திண்ணையில் வியாபாரி வேடனைச் சந்தித்தார்.

''ஐயா, நடனமாடும் கிளி வேண்டும். உங்களிடம் இருக்கிறதா? பதினைந்து ரூபாய் தருகிறேன்'' என்றார்.

''என்னிடம் நான்கு கிளிகள் இருக்கின்றன. அவற்றிற்குப் பறக்கக் கூடத் தெரியாதே! அவற்றில் எதைப் பிடிக்கிறதோ அதை எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றான் வேடன்.

''அதனாலென்ன, பார்க்கலாமே!'' என்றார் பழவியாபாரி.

வேடன் ஒவ்வொரு கிளியாகத் திறந்துவிட, சின்னக்கிளி மட்டும் சோம்பிக் கிடக்காமல், அம்மா சொன்னது போல நடனமாடியது. அதைக் கண்டு மகிழ்ந்த பழவியாபாரி பதினைந்து ரூபாயைக் கொடுத்து விட்டுச் சின்னக் கிளியை வாங்கிச் சென்றார்.

காட்டில் சின்னக்கிளியை அம்மாக் கிளியிடம் சேர்ப்பித்தார். அம்மாவின் சிறகினுள் ஒளிந்து கொண்டது சின்னக் கிளி.

கிளிகள் நன்றி மறக்காமல் கூடை நிறையப் பெரிய பெரிய கொய்யாப் பழங்களைப் பறித்துப் போட்டு கூடையை நிரப்பின. வியாபாரி மகிழ்ச்சியுடன் சுமக்க முடியாமல் சுமந்து சென்றார்.


அன்றிலிருந்து சின்னக்கிளி சோம்பிக் கிடக்காமல் அம்மாவுடன் பறந்து சென்றது.

அக்டோபர் இதழில் 'வெற்றிவேல், வீரவேல்' சித்திரத் தொடரில், முருகன் வீரபாகு உரையாடலில் (65-ஆம் பக்கம்) 'வேறு எதுவும் வேண்டும் என்ற எண்ணமே தோன்றாமல் இருக்க நின் அருள்வேண்டும்' என்பது தான் சரியான வசனம். 'வேறு எதுவும் வேண்டாம்' என்று அச்சாகி இருக்கிறது. தயவு செய்து திருத்திக்கொள்ளுங்கள்.

- ஆசிரியர்

வீரபாகுவை வென்று சிங்கமுகன் வெறிபிடித்தவன் போல் பூதர்களையும், தேவர்களையும் விழுங்கினான். முருகனை அறைகூவி அழைத்தான். முருகப் பெருமான் குரல் கேட்டதும் சிங்கமுகன் மனம், பாறை வெடித்து பனிமலர் தோன்றிய அனுபவம் பெற்றது. அவன் பேசினான்.....
.....






வெற்றிவேல் வீரவேல் 10

கதை: சுகி சிவம்
படம்: விஜு

உயிர்கட்கெல்லாம் தலைவனாகிய முருகன், தேவர்களைச் சிறையில் இருந்து விடுவிக்கக் கேட்டும், சிங்கமுகன் இணங்கவில்லை. கடும் போர் தொடங்கினான்.










தேவர்களையும்
பூதர்களையும் விழுங்கிய
சிங்கமுகன் மீது முருகப்
பெருமான் ஏவிய கணை
மழையாக உரு மாறி
அவன் மார்பைப்
பிளந்து முதுகின்
வழி வெளியேறியது.
மார்பும் முதுகும்
பிளவுபட்டு பலப்பல
வாயில்களாகப்
பிளந்தன.
உள்ளிருந்த பூதர்கள்,
தேவர்கள் பிளவுகள்
வழியாக வெளியேறி
ஓடினர்.
கையால் துவாரங்
களை அடைத்தான்.
பயன் இல்லை.
உடைத்தெறியப்பட்ட
கோட்டை போல
ஆனான் அவன்.
உடனே வேறு யுக்தி
யைக் கையாண்டான்.


சிங்கமுகன் தண்டாயுதத்தை ஏந்திய கரத்தை கணையால் அறுத்தார் முருகன். வேறு கரத்தால் வாங்கி சிங்கமுகன் முருகன் மீது வீச, கணையால் தண்டாயுதத்தை அழித்தார் முருகன்.
ஏமபாசத்தை வீசினான் சிங்கமுகன். பொடியாக்கினார் முருகன். இரண்டாயிரம் கைகளையும் முருகனைப் பிடித்து நெரிக்க ஓடிவந்தான். தேவர்கள் திகைத்தனர்.
இரண்டாயிரம் கரங்கள்... இரண்டாயிரம் கணைகள்.. ம்.. அழிக்கட்டும்...
ஹா! குமாரனே! எத்தனை முறை அறுத்தாலும் இவை அறுபடா.
ஐயோ! அந்த கைகளோ அறுத்த கைகளின் பதிலி முன்னிலும் கடும் சண்டை செய்கின்றன!
முருகப்பெருமான் சிங்கமுகன் தலைகளையும் கைகளையும் பன்முறை அறுத்தார். அவை மீளாத்தன. முன்பு சிவனைக் குறித்து செய்த யாகத்தில் தலைகளை அரிந்து இட, அவை மீட்டும் வளர்ந்தன.
அந்தப் புண்ணிய பலம் இப்போதும் துணை நின்றது.



சிங்கமுகன் கரங்களையும் சிரங்களையும் சிவகுமாரன் கணைகள் அறுத்தன. அவை மீண்டும் முளைக்க ஆரம்பித்தன. அது கண்டு குமாரக் கடவுள் அதட்டினார். அவை வளராமல் நின்றன.





தங்கமணியின் அப்பா சுவாமிநாதன் கொஞ்சம் கவலையுடன் இருந்தார்.

வர வர, எதற்கும் 'நாராயணன் மாதிரி, நாராயணன் மாதிரி' என்று கேட்க ஆரம்பித்து விட்டான் தங்கமணி.

அன்று அப்படித்தான், ''எனக்கு நாராயணன் கட்டியிருக்கிறது போல் கைக்கடிகாரம் வேணும்'' என்று நச்சரித்துக் கொண்டிருந்தான்.

அதற்குமுன், 'நாராயணன் வைத்திருக்கிறது போல எனக்கும் உயர்ந்த ரக செருப்பு வேண்டும்' என்றான்.

அப்பா வாங்கிக் கொடுத்தார்.

பிறகு, நாராயணன் போட்டுக் கொண்டிருக்கிறது போல உயர்ந்த ரக சட்டை வேண்டும் என்றான்.

அதையும் வாங்கிக் கொடுத்தார்.

இப்போது கடிகாரம்!

எதற்கெடுத்தாலும், 'நாராயணன் மாதிரி, நாராயணன் மாதிரி' என்கிறானே, யார் அந்த நாராயணன்?

நாராயணன் அதே தெருவில் இருக்கிறவன். தங்கமணியின் வகுப்பில் தான் அவனும் படிக்கிறான். வசதியான வீட்டுப் பிள்ளை.

தங்கமணியின் அப்பா சுவாமிநாதன் அப்படி ஒன்றும் வசதியானவர் அல்ல. ஓர் அலுவலகத்தில் வேலை பார்க்கிறார். தங்கமணி அவருக்கு ஒரே பிள்ளை. அதனால், கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்தார். இல்லாவிட்டால், முகத்தை 'உம்'மென்று வைத்துக் கொள்ளுவான். கலகலப்பாக இருக்க மாட்டான். அம்மாவும் அவனுக்காகப் பரிந்து கொண்டு பேசுவாள்.

''நமக்கு இருக்கிறது ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணுன்னு ஒரே பிள்ளை. அவன் ஆசையாகக் கேட்கிறதை நாம வாங்கிக் கொடுக்கத் தானே வேணும்? அவனுக்கு நாம வாங்கிக் கொடுக்காமல் வேறே யார் வாங்கிக் கொடுப்பாங்க?...'' என்று அவள் சுவாமிநாதனிடம் சொல்லுவாள்.

சுவாமிநாதன் சிரித்துக்கொண்டே ''அம்மாவும் பிள்ளையும் ஒரே கட்சி. நான் மட்டும் தனி. நான் சொல்லுவது எப்படி எடுபடும்?'' என்பார். பிறகு, தங்கமணி கேட்பதைச் சிரமப்பட்டாவது வாங்கிக் கொடுத்து விடுவார்.

''என் தங்க அம்மா. என் செல்ல அம்மா!'' என்பான் தங்கமணி.

அம்மா பூரித்துப் போவாள்.

ஆனால், தங்கமணி சரியாகப் படிப்பதில்லை. குறைவான மதிப்பெண்களையே பெற்றுவந்தான்.

'கடிகாரம், கடிகாரம்' என்று தொந்தரவு தாங்க முடியாமல் அவனை அழைத்துக் கொண்டு கடைத் தெருவுக்குப் புறப்பட்டார் சுவாமிநாதன்.

வழிநெடுக, ''நாராயணன் கட்டியிருக்கிற மாதிரி அதே கடிகாரம்'' என்று சொல்லிக்கொண்டே வந்தான் தங்கமணி.

ஒரு கடையைப் பார்த்துவிட்டு, ''அப்பா, எனக்கு அந்தப் பிஸ்கட் பாக்கெட்டை , வாங்கிக் கொடுங்க'' என்றான்.

''ஏன், அந்த மாதிரியான பிஸ்கட்டைத்தான் நாராயணன் சாப்பிடுவானா?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டார் சுவாமிநாதன்.

''போங்க அப்பா!'' என்று சிணுங்கினான் தங்கமணி.

அவர்கள் போய்க் கொண்டிருந்த போது, எதிரே தங்கமணியின் வகுப்

பில் படிக்கிற ஆனந்தன் வந்துகொண்டிருந்தான்.

கிழிந்த சட்டை.

செருப்பு இல்லாத கால்கள்.

''என்னடா தங்கமணி, கடைத்தெருவுக்கா?'' என்று விசாரித்தான் ஆனந்தன்.

அவனது வீடும் அவர்கள் இருக்கிற அதே தெருவில் தான் இருக்கிறது. ஆனந்தனைச் சுவாமிநாதனுக்கு நன்றாகத் தெரியும்.

''என்ன ஆனந்தா! எங்கே உன்னை ரொம்ப நாட்களா காணோம்? எங்கள் வீட்டுக்கு முன்போல வருவதில்லையே!'' என்றார் அவர்.

''ஆமாம் சார். படிக்கிறதுக்கே எனக்கு நேரம் போதலை. அதனால் வெளியிலே எங்கேயும் போக முடியலை. மதிப்பெண்கள் குறைஞ்சு போயிட்டதாக எங்க அப்பா திட்டினாங்க'' என்றான் ஆனந்தன்.

''ஓகோ!''

''எங்க வகுப்பிலே படிக்கிறானே நாராயணன், அவனைப் பார்த்துத்தான் எனக்குப் படிப்பிலே அக்கறை வந்திச்சு, சார்!''

''என்ன? நீயும் நாராயணன் மாதிரின்னு ஆரம்பிச்சுட்டியா? அது என்ன விஷயம்?'' என்று ஆர்வத்துடன் கேட்டார் சுவாமிநாதன்.

ஆனந்தன் சொன்னான்: ''நாராயணன்தான் எங்க வகுப்பிலே நல்லா படிக்கிறவன். நாமும் நாராயணன் மாதிரி படிச்சு, நிறைய மதிப்பெண்கள் வாங்கணும்னு தீர்மானம் செய்துக்கிட்டேன். ஒழுங்கா படிக்கிறேன். இப்போ நாராயணன் மாதிரி நானும் அதிக மதிப்பெண்கள் வாங்குகிறேன்.''



சுவாமிநாதன் சிரித்தார். ''ஆனால், நாராயணன் போட்டிருக்கிற உயர்ந்த ரக சட்டை, செருப்பு, கடிகாரம்—இதெல்லாம் உன் கண்ணில் படலையா?'' என்று கேட்டார்.

''அடேயப்பா! அதையெல்லாம் என்னால் வாங்க முடியாது சார். எங்க அப்பா சம்பாதிக்கறது குடும்பத்துக்குப் பத்தலை சார். தெரிஞ்சிருந்தும் நான் அதுக்கெல்லாம் ஆசைப்படலாமா? ஒருத்தரைப் பார்க்கறபோது, அவங்க கிட்டே இருக்கிற நல்ல குணங்களைத்தான் நாம எடுத்துக்கணும்னு எங்க அப்பா அடிக்கடி சொல்லுவாங்க.''

''உண்மைதான்!''

''நான் வீட்டுக்குப் போய்வரேன் சார். நாளைக்கு டெஸ்ட். படிக்கணும்'' என்று விடைபெற்றுக்கொண்டு போனான் ஆனந்தன்.

இதுவரை, தலையைக் குனிந்துகொண்டு, மௌனமாக நின்றுகொண்டிருந்த தங்கமணி, ''அப்பா'' என்று கூப்பிட்டான்.

''ஏன்?'' என்று கேட்டார் சுவாமிநாதன்.

''நாம வீட்டுக்குத் திரும்பிப்போயிடலாம் அப்பா. எனக்குக் கடிகாரம் வேண்டாம்!'' என்றான் தங்கமணி.

சுவாமிநாதன் இதை எதிர்பார்க்கவில்லை. ''ஏண்டா தங்கமணி?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

''நாராயணன் மாதிரி எனக்குக் கடிகாரம் வேண்டாம். எதுவும் வேண்டாம். ஆனால், இனிமேல் நாராயணன் மாதிரி நான் நன்றாகப் படிக்கப் போகிறேன்!'' என்றான் தங்கமணி.

சுவாமிநாதன் மிகுந்த மகிழ்ச்சியுடன் தங்கமணியின் முதுகில் தட்டிக் கொடுத்தார்.

வானத்தில் மிருகங்கள்!

— கொ.மா.கோதண்டம் —

வானத்தில் ஆயிரம் மிருகங்கள்!
வகைவகை யாகவே பறவைகள்!
கானகத் துள்ளவை யாவுமே
வானகம் வந்தது எவ்விதம்?

யானைகள் ஊர்ந்துமே போகுதே!
யாவரும் பாருங்கள்; அதிசயம்!
பூனையும், புலிகளும் மெல்லவே
போகுதே ஊர்வலம்; அற்புதம்!

ஆடுகள், மாடுகள், குதிரைகள்
அனைத்துமே பற்பல கூட்டங்கள்!
கூடுகள் இல்லாமல் குருவிகள்,
கொக்குகள், பருந்துகள் கோடியாம்!

அழிந்ததோ பண்டைய மிருகங்கள்!
ஆகாய மீதிலே பாருங்கள்.
எழிலுடன் கம்பீர யாளிகள்!
இனந்தெரி யாதபல் மிருகங்கள்!

மிருகங்கள் பறவையாய் மாறுது!
மெல்லவே பறந்துமே போகுது!
உருவங்கள் வளருது, குறையுது!
ஒவ்வொன்றும் பலவாக ஆகுது!


ஆகாய உலகமே சென்றுதான்
அவற்றுடன் விளையாட ஆசைதான்!
போகாமல் இருக்கவே மனமில்லை.
போகின்ற பாதையைக் காட்டுங்கள்






விந்தை உலகம்


நாய்களின் இயல்பு குரைப்பது தானே! ஆனால் மெக்ஸிகோ நாட்டில் உள்ள 'பசன்ஜி' என்னும் இன நாய்கள் பிறந்தது முதல் சாகும் வரை குரைப்பதே இல்லை!



எவரெஸ்ட் சிகரத்தில் எவர் வேண்டுமானாலும் ஏறிவிட முடியாது! முதலில் நேபாள அரசிடம் அனுமதி பெற வேண்டும். எந்தச் சிகரத்தில் ஏற விரும்புகிறார்களோ அந்தச் சிகரத்திற்கென்று நிர்ணயிக்கப்பட்ட வரியைச் செலுத்த வேண்டும். மேலே போகப்போக இந்த வரி அதிகமாகும்!



ஆண் சிங்கமும் பெண் சிங்கமும் ஓர் இரையைப் பார்த்து விட்டால் முதலில் பெண் சிங்கம்தான் பாய்ந்து அந்த இரையைக் கொல்லும். ஆனால் கொன்ற இறைச்சியை முதலில் தின்பது ஆண் சிங்கம்தான்! ஆண் சிங்கம் திருப்தியாகத் தின்று விட்டு மிச்சம் வைக்கின்ற வரையில் பெண் சிங்கம் அமைதியாகக் காத்துக் கொண்டிருக்கும்!



'பிளாக்மோலி' என்னும் ஒரு வகை கருப்பு மீன் இருக்கிறது. அது கருப்பு நிறமான இரையைத் தான் தின்னும். இந்த மீனைக் கண்ணாடித் தொட்டியில் வளர்த்தாலும் அதற்கு கருப்பு நிறமான இரையைத்தான் போட வேண்டும்!



— அ. செந்தமிழ்ச் செல்வன் —

வாலிபால் ஆடுவோம்..

வாலிபால் விளையாட்டினை 1895ம் வருஷம் அமெரிக்காவில் உள்ள வில்லியம் ஜி. மார்கன் உருவாக்கித் தந்திருக்கிறார். இவர் அமெரிக்காவில் ஒய்.எம்.ஸி. ஏ. உடல் பயிற்சிப் போதகர். கூடைப் பந்தாட்டம் நடுவயது மனிதர்களுக்குக் கஷ்டமான விளையாட்டாக இருப்பதைக் கண்டு அவர்களுக்கான எளிதான இந்த ஆட்டத்தைக் கண்டு பிடித்தார்.

ஆரம்ப காலத்தில் வாலிபால் ஆட்டத்தில் ஒரு குழுவுக்கு ஒன்பது பேர் ஆடினர். கூடைப் பந்தினைப் போல் இந்த ஆட்டம் அவ்வளவு விரைவாகப் பரவவில்லை. அமெரிக்கப் பாதிரி பள்ளிகளின் வாயிலாக ஆசிய நாட்டில் இந்த விளையாட்டுப் பரவியது. ரஷ்யர்களும் ஜப்பானியர்களும் கைப்பந்து ஆட்டத்தில் அதிக கவனம் செலுத்தினர்.

1947ம் வருஷம் சர்வ தேச கழகம் நிறுவப்பட்டது. முதல் உலகப்போட்டி 1949ம் வருஷம் பிரேக்கில் நடைபெற்றது. 1964ம் வருஷம்தான் கைப்பந்து ஒலிம்பிக் போட்டிகளில் இடம் பெற்றது. மாண்ட்ரீயல் ஒலிம்பிக்கில் போலந்து நாடு வெற்றி பெற்றது அதிசயம்.


வாலிபால் மைதானம் நீண்ட சதுரமாக, 59 அடி நீளம், 29 அடி 6 அங்குலம் அகலம் கொண்டது. மைதானத்தில் ஒவ்வொரு பாதியிலும் மத்திய கோடுவரையப்பட்டிருக்கும். மத்தியகோட்டிலிருந்து ஒரு பகுதி கோடிடப்பட்டு, அதற்கு அட்டாக் லைன் என்று பெயர். இரு கம்பங்களில் 7 அடி 11 அங்குலம் உயரத்தில் வலை கட்டப்பட்டிருக்கும்.

வாலிபால் ஆட்டத்தை ஒரு உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்து ரிபரிநிர்வகிப்பார். அம்பயர் மைதானத்தில் நின்று கொண்டிருப்பார். அம்பயருக்கு உதவ ஸ்கோரர் உண்டு. நான்கு லைன்ஸ்மன்கள் அமர்ந்து அவர்களுக்கு உதவுவார்கள்.

ஒரு குழுவுக்கு ஆறு பேர் ஆடினாலும் குழுவில் பன்னிரண்டு பேர் இடம் பெற்று 'ஸப்ஸ்டிட்யூட்' செய்வதற்கு ஆறு பேர்கள் இருப்பார்கள்.

சர்வ தேசப் போட்டிகளில் ஐந்து செட் ஆட்டங்கள் ஆடி முடிவு எடுப்பர். ஒரு ஆட்டத்துக்குப் பதினைந்து பாயிண்ட். எந்தக் குழு முதலில் எடுக்கிறதோ அந்தக் குழு முதல் ஆட்டத்தினை எடுத்ததாகக் கருதப்படும்.

யார் பந்தை முதலில் தட்டுவது என்பதற்கு 'பூவா-தலையா' சோதனை நடைபெறும். எந்தக் குழு பந்தைத் தட்டுகிறதோ அதுவே பாயிண்ட் எடுக்கும்.




✖ ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வாலிபால் பந்தயக்காட்சிகள்

சர்வீஸ் போடும்போது ஆட்டக்காரர்கள் அவரவர்களது நிலையில் நிற்க வேண்டும். பந்தைத் தட்டி விட்டால் (சர்வீஸ்) ஆட்டக்காரர்கள் நகர்ந்து கொள்ளலாம்.

பந்து சர்வீஸ் மாறும்போது ஆட்டக்காரர்களும் இடம் மாறுவார்கள். எதிர்த்த குழுவுக்குப் பந்தைச் செலுத்துவதற்கு முன்னால் ஒரு குழுவுக்கு மூன்று தடவைகளே பந்தைத் தொடும் வாய்ப்புண்டு. எந்தத் தனிநபர் ஆட்டக்காரரும் பந்தை இருமுறை தொடக் கூடாது!

வாலிபால் ஆட்டக்காரர்கள், பனியன்களும் அரைக் கால் சட்டைகளும் குழுவுக்குள்ள வண்ணத்தில் அணிவர்.



ஆட்டக்காரர்களின் பனியன்களில் முன் பக்கமும் பின்பக்கமும் அவருக்குள்ள எண்கள் தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கும். கால் ஷூக்களில் இரும்பு ஆணிகள் பொருத்தப் பட்டிருக்கக் கூடாது.

ஒரு குழு சர்வீஸோ, பாய்ண்டோ இழப்பது, பந்தை மைதானத்துக்கு வெளியே அடித்தால் நிகழும்: வலையைக் கடந்தோ, எதிரியின் உடலில் பட்டோ, வலையைத் தொட்டோ செய்தால் இழக்க வேண்டி நேரிடும். பந்து தரையைத் தொட்டு விட்டாலும் எதிரிக்கு பாயிண்ட்! தொடர்ந்து ஒரு குழு பந்தை மூன்று தடவைகளுக்கு மேல் தொடும்படி நேர்ந்தால் சர்வீஸையோ, பாயிண்டையோ இழப்பர். பந்தை ஒரு ஆட்டக்காரர் இரு தடவைகள் தொட்டாலும், பாயிண்ட், சர்வீஸ் இழக்க நேரிடும்.

தமிழ் நாட்டில் வாலிபால் ஆட்டத்துக்கு மிகவும் ஊக்கமும் உற்சாகமும் அளித்து வருபவர் சிவந்தி ஆதித்தன். இவர்தான் தமிழ் நாடு வாலிபால் கழகத்தின் தலைவர். ஆசிய விளையாட்டுக் கழகத்திலும் இவர் முக்கிய பங்கு வகிக்கிறார். ஆசிய விளையாட்டுப் போட்டிகளின்போது வாலிபால் ஆட்டங்களை நிர்வகிப்பதற்கு இவர் எடுத்துக் கொண்ட சிரமங்கள் அதிகம். ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் சீனக் குழுக்களே தங்கப் பதக்கம் சூடியது.

தமிழ் நாட்டுப் பெண்கள் வாலிபால் குழுவிலிருந்து ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஸ்ரீமதி இடம் பெற்றிருந்தார். இந்தியக் குழுவின் காப்டன் ஸ்ரீதர் தமிழகத்தைச் சேர்ந்தவர். இவர் மாஸ்கோ ஒலிம்பிக்குக்கும் சென்று வந்திருக்கிறார்.

தமிழகத்தின் கிராமங்களிலும் வாலிபால் ஆட்டத்துக்கு மவுசு பெருகி வருகிறது. தமிழக இளைஞர்கள் பலர் சர்வ தேசப் போட்டிகளிலும் பங்கேற்கும் வல்லமை பெற்றிருக்கிறார்கள்.

—குண்டுமணி






பேசும் கழுதை

அன்று அந்தக் கழுதைக்கு நல்ல ஆகாரம் கிடைத்தது. அதுவும் அதற்கு மிகவும் பிடித்தமான ஆகாரம் — அது தான் காகிதம்! அதுவும் எப்படி? விதம் விதமான நோட்டுப் புத்தகங்கள், டைரிகள், பல வர்ணக் காகிதங்கள்!

இவ்வளவையும் தின்ற பிறகு, அது ஏப்பம் விடுவதற்காக வாயைத் திறந்தது. ஆனால், ஏப்பம் வரவில்லை! அதற்குப் பதிலாகப் பேசும் சக்தி வந்துவிட்டது! ''ஆ! எனக்கும் மனிதரைப் போல் பேசும் சக்தி வந்துவிட்டது!'' என்று கூறித் துள்ளிக் குதித்தது.

கதை: விஜயம் :

சித்திரம்: ஜெயந்தி





''இப்படி வெறும் பேப்பரையே தின்று கொண்டிருப்பதா? பேப்பர்த் தோசை என்கிறார்களே, அதைத் தின்றால்... அதிலும் பேப்பர் மசாலா தோசையைத் தின்றால் ரொம்ப ருசியாக இருக்குமே! சரி, உடனே நாம் ஓர் ஓட்டலுக்குப் போய்ப் பேப்பர் மசாலா தோசையுடன் மற்ற பண்டங்களையும் தின்ன வேண்டும்'' என்று முடிவு செய்தது.


பக்கத்திலிருந்த ஒரு பெரிய ஓட்டலுக்குள் புகுந்தது. ''ஐயோ கழுதை! கழுதை வருகிறது! அடித்து விரட்டுங்கள்!'' என்று பலர் கூச்சலிட்டனர். கழுதை பயப்படவில்லை. அதற்குத் தான் மனிதரைப் போல் பேசத் தெரியுமே! ஆகையால் மனிதரைப் போல் சாப்பிட நினைத்தது.



நேராகப் போய் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தது. முன் கால்கள் இரண்டையும் மேஜை மேல் வைத்துக்கொண்டது. ''யாரங்கே? எனக்கு ஒரு டஜன் பேப்பர் மசாலா தோசை கொண்டு வா'' என்று தன் உரத்த குரலில் உத்தரவிட்டது.




''ஐயோ! இது என்ன, கழுதை பேசுகிறதே!'' என்று அலறிப் புடைத்துக் கொண்டு அருகில் நின்ற சர்வர் ஓட்டலுக்கு வெளியில் ஓடிவிட்டான். மற்ற சர்வர்களும், சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களும், சாப்பிட வந்தவர்களும் ஓட்டலை விட்டு ஓட்டம் பிடித்தார்கள்.




கழுதை நேராகப் பலகாரங்களை வைக்கும் அலமாரியை நோக்கிச் சென்றது. அங்கிருந்த பாதாம் அல்வா, ஜாங்கிரி, லட்டு, இட்டிலி, தோசை, வடை, பூரி, போண்டா எல்லாவற்றையும் தின்று தீர்த்தது! ஒரு பெரிய பாத்திரத்தில் கலந்து வைக்கப்பட்டிருந்த காப்பியையும் குடித்தது.



கழுதை அங்கிருந்து புறப்பட்டுச் சிறிது தூரம் நடந்து சென்றது. எக்கச்சக்கமாகத் தின்றிருந்ததால் வயிற்றைத் தூக்கிக் கொண்டு அதனால் நடக்க முடியவில்லை. ஆகையால் பக்கத்திலிருந்த ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றது. அது சேத்துப்பட்டு ரயில்வே ஸ்டேஷன்.






''ஏய், யாரப்பா உள்ளே? எழும்பூருக்கு ஒரு டிக்கெட் கொடு'' என்று கூறி டிக்கெட் கொடுக்கும் ஜன்னலுக்குள் முன் காலை நீட்டியது கழுதை.

நிமிர்ந்து பார்த்தார் டிக்கெட் கொடுப்பவர். ''ஐயோ! கழுதை பேசுகிறதே!'' என்று அலறியபடி உள்ளே ஓடி ஒளிந்து கொண்டார்.


''டிக்கெட் இல்லாமலே போவேன்'' என்று கூறிவிட்டு நேராகப் பிளாட்பாரத்துக்குச் சென்றது. அங்கு நின்ற கூட்ஸ் வண்டியில் ஏறி 'ஜம்'மென்று உட்கார்ந்து கொண்டது. எழும்பூர் வந்ததும் இறங்கி வெளியே வந்தது. சுற்று முற்றும் பார்த்தது.





அருகிலே ஒரு ஆட்டோ ரிக்ஷா வந்தது. ''ஏ, ஆட்டோ, நில்!'' என்று கழுதை கூறியதும் ஆட்டோக்காரர், ஆட்டோவை நிறுத்திவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டார். அப்போது அங்கே வந்த பஸ்ஸை நிறுத்தி, ''இது எங்கே போகிற பஸ்?'' என்று கேட்டது. உடனே பஸ் கண்டக்டர் 'டபுள் விசில்' கொடுத்து பஸ்ஸை வேகமாக விடச் சொன்னார். இப்படி எல்லாருமே 'பேசும் கழுதை'யைக் கண்டு பீதி அடைந்தார்கள்.

வயிறு புடைக்கத் தின்றதால் கழுதையால் நகர முடியவில்லை. அங்கிருந்த ஒரு மரத்தடியில் படுத்துத் தூங்கியது. அப்போது, தன் கழுதையைக் காணாமல் காலையிலிருந்து தேடி அலைந்த முனியன் அதைக் கண்டு விட்டான். ஆத்திரத்தில் தன் கையிலிருந்த தடியால் ஓங்கி ஓங்கி அதன் முதுகிலும் வயிற்றிலும் அடித்தான்.



கழுதை முனியனிடம் பேசுவதற்கு வாயைத் திறந்தது. ஆனால் பேச்சு வரவில்லை. அதற்குப் பதில் தொண்டையில் அடைத்துக் கொண்டிருந்த ஒரு பொருளை அது சிரமப்பட்டு வெளியே கக்கியது அந்தப் பொருள் ஒரு சின்னப் புத்தகம்! அது கீழேவிழுந்ததும் மறைந்து விட்டது! அதற்குப் பதிலாக அங்கே ஒரு மந்திரவாதி தோன்றினான்!



மந்திரவாதி முனியனைப் பார்த்து, ''ஐயா, மழையில் நனைந்துவிட்ட என் மந்திரப் புத்தகங்களையும் டைரிகளையும் என் வீட்டு வாசலில் காய வைத்திருந்தேன். அவை என் தொழிலுக்கு மிக முக்கியமானதால், நானும் ஒரு புத்தகமாக மாறி, அருகில் இருந்து காவல் காத்துக் கொண்டிருந்தேன்.



''என் போதாத காலம்; எடுத்த எடுப்பிலேயே என்னை இது விழுங்கிவிட்டது! இதன் வயிற்றுக்குள்ளே நான் இருந்ததனால்தான் இதனால் பேச முடிந்திருக்கிறது! வெளியில் வர நான் முயன்று கொண்டிருந்தபோது, நல்ல வேளையாக நீங்கள் வந்து நாலு அடி கொடுத்து என்னைக் கக்க வைத்தீர்கள்!'' என்றான்.




பிறகு, ''என்னைக் காப்பாற்றிய உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டான் மந்திரவாதி.

''எனக்கு எதுவும் வேண்டாம். நீ மறுபடியும் புத்தகமாக மாறி, என் கழுதையின் வயிற்றுக்குள் போகாமல் இருந்தால் அதுவே போதும்!'' என்று கூறி முனியன் சிரித்தான்; மந்திரவாதியும் சிரித்தான்; கழுதையும் 'ஹோ! ஹோ!' என்று சிரித்தது!

ஒரு பிடி சாக்லேட்

செம்பூர் சந்துரு



நந்து மிகமிக சாமர்த்தியசாலி. எந்தக் காரியத்தையும் சமயோசிதமாகவும் பைசா செலவில்லாமலும் செய்வதில் வல்லவர். சுத்தக் கருமி என்று பெயர் வாங்கியவர்.

நந்துவுக்குப் பக்கத்துக் கிராமத்தில் சுந்து என்ற நண்பர் உண்டு. சுந்து சாக்லேட், பிஸ்கட் விற்பனைக்கடை நடத்தி வந்தார்.

ஒருநாள் நந்து, தன் ஆறு வயது மகன் விசுவை அழைத்துக் கொண்டு சுந்துவைப் பார்க்கப் பக்கத்துக் கிராமத்திற்குக் கிளம்பினார். போகும் வழியில் கடையிலேயே சுந்துவைப் பார்த்துவிட்டார். கடையில் நுழைந்து சுந்துவுடன் மணிக் கணக்கில் பேசிக் கொண்டிருந்தார்.

பிறகு விடை பெற்றுக்கொண்டு கிளம்பும்பொழுது, சுந்து ஒரு சாக்லேட் பாட்டிலைத் திறந்து, ''விசு,இதிலிருந்து சாக்கலேட்டை ஒரு கை அள்ளிக் கொள்'' என்று அன்புடன் சொன்னார்.

ஆனால், விசு தயங்கினான். பிறகு, 'வேண்டாம்' என்று தலையசைத்தான். இதைப் பார்த்த நந்து திகைத்தார். ''அட, அவந்தான் எடுத்துக்கச்சொல்றானே எடுத்துக்கோடா விசு'' என்றும் சொல்லிப் பார்த்தார். 'கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போய்விடப் போகிறதே' என்ற கவலை அவருக்கு! என்ன சொல்லியும் விசு சாக்லேட்டை எடுத்துக் கொள்ளவில்லை.

சுந்துவிற்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. தானே தன் கையால் ஒரு பிடி சாக்லேட்டை அள்ளி விசுவிடம் தந்தார். விசு மிகவும் பிகு செய்து கொண்டான். ''சும்மா வாங்கிக் கொள்'' என்று வற்புறுத்தவே இரு கைகளையும் நீட்டி வாங்கிக் கொண்டான்.

நந்துவின் முகம் மலர்ந்தது. 'அப்பாடா! இப்பொழுதாவது பையன் சாக்லேட்டை வாங்கிக் கொண்டானே!' என்று மகிழ்ந்தார். விசுவின் மனம் திரும்ப மாறிவிடப் போகிறதே என்று பயந்து, அவசர அவசரமாகச் சுந்துவிடம் விடை பெற்றுக் கொண்டு நகர்ந்தார் நந்து.

சிறிதுதூரம் சென்றதும், மகனிடம் ''அவர்தான் சாக்லேட்டை எடுத்துக் கோன்னு சொன்னாரே, உடனே ஏன் முட்டாள்தனமாக வேண்டாம் என்று சொன்னாய்?'' என்று கேட்டார்.

இதற்கு விசு அமைதியாகப் பதில் சொன்னான்—

''என் கையால் சாக்லேட்டை அள்ளிக் கொண்டிருந்தால், ஏழெட்டுத்தான் கிடைத்திருக்கும். அவர் கையால் அள்ளிக் கொடுத்ததால், எத்தனை சாக்லேட் வந்திருக்கிறது பாருங்கள்'' என்று இரு கைகளையும் விரித்துக் காட்டினான். அவன் பதிலைக் கேட்டதும் நந்து பூரித்துப் போனார்.

''அட, நமக்குத் தப்பாமல் விசு மகனாகப் பிறந்திருக்கிறான்!'' என்று எண்ணியபடி அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார் கருமி நந்து!

கோகுலம் சிறுவர் சங்கம்

கிண்டி, சென்னை-600 032

இச்சங்கத்தில் யார் சேரலாம்?

தமிழ் தெரிந்த குழந்தைகள் உலகில் எங்கிருந்தாலும், அவர்கள் கோகுலம் குழந்தைகள் சங்கத்தில் சேரவேண்டும் என்பது எங்கள் ஆசை.

15 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே இதில் உறுப்பினர் ஆகலாம்.

உறுப்பினர் ஆனதும்.....

கோகுலத்திற்கு நீங்கள் எதை எழுதினாலும் எப்போது எழுதினாலும் மறக்காமல் உறுப்பினர் எண்ணைக் குறிப்பிடுங்கள்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் கோகுலம் முத்திரையுடன் (பிள்ளையாரும் கண்ணனும்) கூடிய உறுப்பினர் அட்டையை அனுப்புவோம்.

அதில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஓர் எண் கொடுக்கப் பட்டிருக்கும். உறுப்பினர் பெயரும், பிறந்த நாளும் முகவரியும் அதில் இருக்கும்.

பயன் என்ன?

உறுப்பினர் ஆனவர்களின் பெயர்களை முகவரியுடன் கோகுலத்தில் வெளியிடுவோம். உறுப்பினர்கள் இதன் மூலம் பேனா நண்பர்கள் ஆகலாம்.

உறுப்பினர்கள் கோகுலத்துக்குக் கதைகள், கவிதைகள், துணுக்குகள், இன்னும் பயனுள்ள விஷயங்களை அனுப்பலாம். யோசனைகளையும் கருத்துக்களையும் தெரிவிக்கலாம். நன்றாயிருந்தால் வெளியிடுவோம்.

உறுப்பினர்களுக்கான பலவிதப் போட்டிகளை நடத்துவோம். வெற்றி பெறுவோர் பரிசுகள் பெறலாம். அவர்களின் படங்களையும் வெளியிடுவோம்.

'கோகுலம்' கௌரவ ஆசிரியர், ஆசிரியர், அல்லது 'கோகுலத்தின் பிரதிநிதிகள் உங்கள் பகுதிக்கு வந்தால் அறிவிப்போம். சந்தித்து உரையாடலாம்.

ஆண்டுக்கு ஒரு முறை நல்ல முறையில், பயன் தரும் வகையில் விழா நடத்தலாம்.

உறுப்பினராகக் கட்டணம் உண்டா?

இல்லை. கீழேயுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து இப்பக்கத்தை அப்படியே கோகுலம் முகவரிக்கு அனுப்பினால் போதும். தமிழ் நாட்டுக்கு வெளியில் உள்ளவர்கள் முகவரியை ஆங்கிலத்தில் எழுத வேண்டும்.

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர் மனு

பெயர்:

பிறந்த தேதி:

முகவரி:

கையெழுத்து



சரண்யாவுக்கு வயது பத்து. ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறாள். அழகுள்ள அறிவுள்ள சிறுமி. ஆனால், அவள் பெற்றோர் மிகவும் ஏழை. அவள் அப்பா ஓர் ஓட்டலில் சர்வராக இருந்தார். வரும் வருமானத்தில் மிகவும் சிக்கனமாகக் குடும்பத்தை அவள் அம்மா நடத்தினாலும், பாதி நாளைக்கு ஏகாதசிதான்!

அவ்வூரில் உள்ள சுந்தரக் குருக்கள் வீட்டில் சரண்யாவைக் காலை நேரத்தில் காணலாம். அவர் மனைவிக்கு உதவியாக வீடு கூட்டி, பாத்திரங்கள் தேய்த்துக் கொடுத்து வேலை செய்வாள். காலையில் தினமும் அவர் வீட்டில் அவளுக்குச் சாப்பாடு கிடைத்து விடும்.

சரண்யாவுக்கு மிகவும் பிடித்தது மலர்கள்தான். தினமும் தலையில் சூடிக் கொள்ள அவளுக்கு அம்மன் கோவிலிலிருந்து பூ கிடைத்துவிடும்.

அன்று காலை குருக்கள் வீட்டில் வழக்கம்போல வேலை செய்து கொண்டிருந்தாள் அவள். அப்பொழுது குருக்களின் அருமை மகன் மணி, ''அம்மா! இந்த மேஜையின் மீது ஒரு ரூபாய் நோட்டு ஒன்று வைத்திருந்தேன். காணவில்லை. யார் எடுத்தது?'' என்று கத்தினான்.

அவன் கத்தலைக் கேட்டு அவன் அம்மாவும் சரண்யாவும் கூடத்துக்கு வந்தனர். மேஜையின் மேலே, கீழே, தரை எங்கு தேடியும் அந்த ரூபாய் நோட்டைக் காணவில்லை.

யார் எடுத்திருப்பார்கள்?

அந்த அம்மாளுக்குச் சரண்யாவின் மீது சந்தேகம்.

''ஏய் சரண்யா! இந்த வீட்டிலே நம்ப மூன்று பேரைத் தவிர வேறு யாரும் இல்லை. பணம் எப்படி மாயமாய் மறைந்து போகும்?'' என்றாள்.

''சத்தியமா நான் எடுக்கலை?'' என்று கண்கலங்கக் கூறினாள் சரண்யா.

அந்தச் சமயம் மணி அவனுடைய பள்ளிக்கூடப் புத்தகப் பையைக் கீழே கொட்டித் தேடினான்.

அவளுடைய தமிழ்ப் புத்தகத்திற்குள் ஒரு ரூபாய் நோட்டு ஒன்று இருந்தது.

''அம்மா! சரண்யா பொய் சொல்றாள். இதோ ஒரு ரூபாய் நோட்டு'' —மணி காண்பித்தான்.

''பொய் சொன்னா பாவம்னு எங்க டீச்சர் சொல்லியிருக்காங்க. அதனால நான் பொய்யே சொல்லமாட்டேன். இது எங்கம்மா கொடுத்த பணம். பள்ளிக்கூடம் விட்டு வரும்போது மிளகாயும், புளியும் வாங்கிண்டு வரும்படி சொன்னாங்க.''

அவள் வார்த்தையை யாரும் நம்பத் தயாராக இல்லை. அந்தச் சமயம் பார்த்து சுந்தரக் குருக்கள் உள்ளே நுழைந்தார். விஷயத்தைக் கேள்விப்பட்ட அவருக்கு மகாக் கோபம் உண்டாயிற்று.

''மொளச்சு மூணு இலை விடலே. அதுக்குள்ளே பொய்யா?'' — கத்தினார்.

பளாரென்று அவள் கன்னத்தில் ஓர் அறை விட்டார்.

''இனிமேல் இந்த வீட்டு வாசல்படி ஏறு. காலை முறிச்சுடறேன்'' — உறுமினார்.

அழுதபடியே தன் புத்தகப் பையை எடுத்துக் கொண்டு, காலி வயிற்றோடு கனத்த இதயத்தோடு பள்ளிக்குச் சென்றாள் சரண்யா.

ஒரு வாரம் ஓடி மறைந்தது.

அன்று வியாழக்கிழமை. சரண்யா அம்மன் கோவிலுக்குச் சென்றாள். அம்பாள் மலரடியில் அன்பர்கள் அர்ப்பணித்த மலர்கள் குவிந்து கிடந்தன. அங்கு இருந்த சுந்தரக் குருக்கள் தாம்பாளத்தில் மலர்களை எடுத்து அவள் அருகில் நின்று கொண்டிருந்த இரண்டு பெண் குழந்தைகளுக்குக் கொடுத்தார். அவளுக்குக் கொடுக்கவில்லை. வருத்தத்துடன் சரண்யா வீடு திரும்பினாள்.

மறுநாள் வெள்ளிக்கிழமை இரவு சரண்யா கோவிலுக்குச் சென்றாள். தை வெள்ளியாதலால் அகிலத்தை எல்லாம் பரிபாலிக்கும் அன்னை, காதுகளில் வைரத்தோடு, மூக்கில் மூக்குத்தி, தலையில் பொற்கிரீடம், கழுத்து வரை மலர்க்குவியல்களோடு புன்னகையுடன் காட்சி அளித்தாள். சரியான கும்பல். அந்தக் கும்பலில்கூட சுந்தரக் குருக்கள் சரண்யாவைத் தவிர எல்லோருக்கும் பிரசாதம் வழங்கினார்.

மறுநாள் சனிக்கிழமை. காலை மணி ஆறுக்கு மேல் இருக்கும். சரண்யா குளித்துவிட்டு அம்மன் கோவிலுக்குச் சென்றாள். பூ ஆசைதான் அவளை அப்படிப் போகச் செய்தது. அம்பாள் சன்னதிக்கு வெளியே ஒரு மரப்பெட்டியில் நிறைய உதிரிப்பூக்கள் இருந்தன. ஆம், அத்தனையும் அம்பாளுக்கு அர்ச்சனை செய்த மலர்கள்!

காலையில் அம்பாளுக்கு அபிஷேகம் செய்து பூஜை செய்வதற்காக முந்தின இரவு போடப்பட்ட மலர்களை எல்லாம் எடுத்துவந்து அந்த மரப் பெட்டியில் போட்டிருந்தார்கள். இனி, அந்தப் பூக்களைக் கோவில் நந்தவனத்தில் இருக்கும் குழியில்தான் கொட்டுவார்கள்.

அங்கு வந்திருந்த ஒரு சிலர் மரப் பெட்டியிலிருந்து பூக்களை அள்ளிக் கொண்டு சென்றனர். ஆவல் அதி

எங்கே உண்மை மலர்கிறது?

''முள் நிறைந்த செடியில்தான் அழகும் வாசனையும் பொருந்திய ரோஜா மலர்கிறது. அதுபோலவே செய்ய முடியாத துன்பத்திற்கும் எதிர்ப்புக்கும் மத்தியிலேதான் உண்மை மலர்கிறது.''

''மாலை தொடுக்கும் பெண் மலர்களை ஊசியினால் குத்திக் கோக்கிறாள். அப்படிக் குத்தினாலும் மலர்கள் மலர்ந்தே இருப்பதைப் பார்! அதுபோல உன்னை யார் எவ்வளவு துன்புறுத்தினாலும் மலர்ந்த முகத்துடன் இரு!''

''உன்னைப் பற்றி நீ இல்லாதபோது என்ன பேசப்படுகிறதோ— அதுதான் உன்னைப் பற்றிய உண்மையான விமர்சனம்!''

—மகாத்மா காந்தி

தொகுப்பு: செந்தமிழ்ச்செல்வன்



கரிக்க, சரண்யாவும் மகிழ்ச்சியோடு மடிநிறைய மலர்களை எடுத்துக் கொண்டு தன் வீட்டிற்குச் சென்றாள்.

காலை பூஜையை முடித்து சுந்தரக் குருக்கள் வீட்டிற்குக் கிளம்பலானார். அப்பொழுது ஒரு பணியாள் வந்து அவரைக் கோவில் அதிகாரி உடனே வரும்படி கூறியதாகச் சொன்னான்.

தன்னை எதற்குக் கூப்பிடுகிறார் என்று எண்ணியபடியே சுந்தரக்குருக்கள் அதிகாரியைப் பார்த்தார். அவர் கூறிய தகவல் குருக்களைத் திடுக்கிட வைத்தது.

முந்தின இரவு அர்த்த ஜாமப் பூஜைக்குப் பிறகு சுந்தரக் குருக்கள் அம்பாளின் நகைகளை எல்லாம் கழற்றிக் கோவில் அதிகாரியிடம் கொடுத்தார். அவரும் வாங்கிவைத்துக் கொண்டு விட்டார். ஆனால், காலையில் சரி பார்க்கும் பொழுதுதான் தெரிந்ததாம், வைரத் தோட்டில் ஒரு வைரக் கல்லைக் காணவில்லை என்று!'' காணாமற் போன வைரக் கல்லுக்கு நீர்தான் பொறுப்பு. இல்லாவிட்டால் உமது வேலைக்கு ஆபத்து!'' என்று அதிகாரி கூறிவிட்டார்.

அனலில் விழுந்த புழுவைப்போல் சுந்தரக் குருக்கள் துடித்தார். எங்கு தேடியும் காணவில்லை. அவ்வளவு பணம் போட்டு வாங்கித் தர அவரிடம் பணமும் இல்லை — செய்தி எங்கும் பரவலாயிற்று.

சுந்தரக் குருக்களின் உள்ளம் அழுது கொண்டிருந்தது.

அப்பொழுது சரண்யா அங்கே வந்தாள். அவள் கையில் ஒரு சின்னக் காகிதப் பொட்டலம் இருந்தது. ''காலையிலே நான் மலர்களை எடுத்துக் கொண்டு போய் வீட்டிலே கட்டினேன். கட்டி முடித்த பிறகு, தரையில் பார்த்தால் இந்த வைரக்கல் மின்னிக் கொண்டிருந்தது. மத்தவங்க சொத்தை எடுத்தாப் பாவம்னு எங்க டீச்சர் சொல்லியிருக்காங்க. இந்தாங்க.''

பணிவோடு அவள் நீட்டிய பொட்டலத்தை வாங்கிப் பிரித்துப் பார்த்த குருக்களின் முகம் மலர்ந்தது. தோட்டிலிருந்து வைரக்கல் மலர்களில் விழுந்திருக்கிறது. அந்த மலர்களைப் பெட்டியில் அள்ளிப் போட்டாயிற்று. நல்ல காலம், அந்தக் கல் சரண்யாவிடம் கிடைத்திருக்கிறது! அதை எடுத்துக் கொண்டு அதிகாரியிடம் ஓடினார் அவர்.

அன்று மாலை, சரண்யாவின் வீட்டிற்குள் சுந்தரக் குருக்கள் நுழைந்தார். அவர் கைநிறையப் புத்தம்புது மலர்கள்!

''சரண்யா! என் மகன் மணியோட ஒரு ரூபாய் டிராயருக்குள்ளேயே விழுந்திருக்கிறது. அதைக் கவனிக்காமல் உன் மீது பழி சுமத்தி விட்டோம். அதை எல்லாம் மனசிலே வெச்சிக்காதே. கோவில்லே நான் உனக்குப் பிரசாதம்கூடக் கொடுக்கலை. அதைக்கூடப் பொருட்படுத்தாமல் நீ என் மானத்தைக் காப்பாற்றினாய். இந்தா உனக்குப் பிடித்த மலர்கள்!'' என்றார்.

''முதல்லே அம்பாளுக்கு மலர்களைச் சாத்துங்கள். அப்புறம் நான் வெச்சுக்கிறேன்'' என்றாள் சரண்யா.

சுந்தரக் குருக்கள் கோவிலை நோக்கி விரைந்தார். சரண்யாவிற்கு இனி தினமும் தவறாது மலர்கள் கொடுக்க வேண்டும் என்று அவர் தீர்மானித்துக் கொண்டார்.

வேண்டாத விடைகள்!



காக்கைக்கு உடம்பு சரியில்லாதபோது என்ன மாத்திரை சாப்பிடும்?

Crow ஸின்



கழுதைக்குத் தலைவலித்தால் என்ன மாத்திரை சாப்பிடும்?

Ass ப்ரோ

பூனை எந்த நட்சத்திரத்தில் பிறந்தது?

Catடை

முட்டை அதிகமாகக் கிடைக்கக்கூடிய இடம் எது?

Egg மோர்



ஸ்ரீவித்யா





இளையவீரன்

பட்டுக்கோட்டை ராஜா

இன்னும் அரைமணி நேரம் தானிருந்தது. பள்ளிக்கூடத்தில் ஆரம்ப மணி அடித்துவிடுவார்கள். ரயில் தண்டவாளங்களை ஒட்டி ஓடிய அந்த ஒற்றையடிப் பாதையில் ராஜா பாதங்களை எட்டியெட்டி வைத்து வேகமாக நடந்தான். ஒரு கையில் புத்தகப்பை. மறு கையில் டிஃபன் தூக்கு.

ராஜா — கான்ஸ்டபிள் லெட்சுமணனின் ஒரே மகன். திருநெல்லிக்காவல் மேல்நிலைப்பள்ளியில் ஆறாம் வகுப்பு படிக்கிறான். அவனது சொந்த ஊரான மாரங்குடி கிராமத்தில் ஐந்து வகுப்பு வரையுள்ள தொடக்கப் பள்ளிதான் இருந்தது. ஐந்தாம் வகுப்பு இறுதித் தேர்வில் ராஜா பள்ளியிலேயே முதல் மாணவனாகத் தேறினான். மிகவும் மகிழ்ந்த அவன் தந்தை லெட்சுமணன், அவனைப் பெரிய படிப்பு படிக்க வைக்க நினைத்தார். எனவே, தொடர்ச்சியாக அவனுக்குப் படிப்பறிவு கொடுக்க எண்ணித் திருநெல்லிக்காவல் மேல்நிலைப்பள்ளியில் சேர்த்து விட்டிருந்தார்.

மாரங்குடிக்கும் திருநெல்லிக்காவலுக்கும் 3. கி. மீ. தூரமிருக்கும். ரயில் தண்டவாளத்தோடு நடந்து சென்றால் 2 கி. மீ. தூரம்தானிருக்கும்.

தினமும் அதிகாலையிலேயே ராஜா எழுந்து விடுவான். பல் தேய்த்து விட்டு ஒன்றிரண்டு மணி நேரம் ஆழ்ந்து படிப்பான். பின்னர் குளித்து முடித்து

சாப்பிட்டுப் பள்ளிக்குக் கிளம்பிவிடுவான்.

இன்று சலவை செய்யக் கொடுத்திருந்த யூனிஃபாரம் வரத் தாமதமானதால்தான் ராஜா கிளம்புவதிலும் தாமதம் ஏற்பட்டு விட்டது. சின்னச் சின்ன சிவப்புக் கட்டம் போட்ட சட்டையும், ஊதா நிஜாரும் ராஜாவின் பள்ளி யூனிஃபாரம்!

தன் தந்தையின் பழைய 'போலீஸ் விசில்' எப்போதும் ராஜாவின் பைக்குள் கிடக்கும். அதை ஊதி நண்பர்களுடன் சேர்ந்து 'திருடன் – போலீஸ்' விளையாட்டு விளையாடுவான்.

இப்போதும், நடந்து கொண்டிருந்த ராஜா யதார்த்தமாகப் பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். 'போலீஸ் விசில்' கிடந்தது.

பின்னர், தமிழாசிரியர் இன்று ஒப்பிக்கச் சொல்லியிருந்த மனப்பாடச் செய்யுளை மனத்திற்குள் ஒப்பித்துப் பார்த்தபடியே நடக்க ஆரம்பித்தான்.

இப்படியே ஒரு கி. மீ. தூரம் நடந்து முடித்த போதுதான் தூரத்தில் நான்கைந்து குண்டர்கள் தண்டவாளங்களைக் கடப்பாறையால் பெயர்த்தெடுத்துக் கொண்டிருப்பதைக் கவனித்தான்.

இது மாதிரிப் பல சதிகாரர்கள் புகை வண்டியைக் கவிழ்த்துப் பொருட்களைக் கொள்ளையடித்துச் செல்வார்கள் என்று அவன் தந்தை சொல்லியிருந்தது ராஜாவின் நினைவுக்கு வந்தது. 'இதுபோன்ற அசம்பாவிதங்களைப் பார்த்துவிட்டால், எப்படியாவது மக்களை விபத்திலிருந்து காப்பாற்ற நாம் முயற்சி செய்ய வேண்டும்' என்றும் அவர் சொல்லியிருந்தார்.

புகைவண்டி வருவதற்குள் அந்தக் குண்டர்களை விரட்டியடிக்க வேண்டும். எப்படி? ராஜா சிந்தித்தான். அப்போதுதான், அந்தச் சிந்தனை மூளைக்குள் பளிச்சிட்டது.

குண்டர்கள் அறியாத வண்ணம் இன்னும் சிறிது தூரம் அவர்களை நெருங்கி நடந்து ஒரு புதருக்குள் மறைந்து கொண்டான்... பைக்குள் கிடந்த 'போலீஸ் விசிலை' எடுத்து 'பிய்ங்... பிய்ங்' என்று பலங்கொண்ட மட்டும் ஊதினான்.

அந்த விசில் சத்தத்தைக் கேட்ட குண்டர்கள் போலீஸ் வந்துவிட்டதாய் நினைத்துக் கடப்பாறைகளை அப்படியே போட்டுவிட்டு அவசர அவசரமாய் மோட்டார் சைக்கிளில் ஏறிப் பறந்து மறைந்தனர். புதரிலிருந்து ராஜா வெளிப்பட்டான்.

'இந்நேரம் பள்ளியில் ஆரம்ப மணி அடித்திருப்பார்கள்' என்று ராஜா யோசித்துக் கொண்டிருந்த போதே வெகு தூரத்தில் புகைவண்டியின் விசில் சத்தம் கேட்டது!

'புகைவண்டி இந்தப் பாதையில் தொடர்ந்து வந்தால் விபத்துக்கு உள்ளாகுமே...! ஆயிரக்கணக்கான மக்கள் இறக்க நேரிடுமே! – ராஜாவின் புத்திசாலி மூளை துரிதமாய் இயங்க ஆரம்பித்தது – 'பள்ளித் தலைமை ஆசிரியரிடம் நடந்ததை விளக்கினால் நிச்சயம் பொறுத்துக் கொள்வார்!' – புத்தகப் பையையும் டிஃபன் தூக்கையும் அதே இடத்தில் வைத்தான். தூரத்திலிருந்து பார்த்தால் சிவப்பாகவே தெரியும்



தன் மேல் சட்டையினைக் கழற்றி வலக்கையில் பிடித்துக் கொண்டான். புகைவண்டி வரும் திசையில் எதிர்த்து ஓட ஆரம்பித்தான்.

ஓடினான்... ஓடினான்... மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க ஓடினான். ஆயிரக் கணக்கான மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற வெறியைத் தவிர, வேறெதுவும் அப்போது ராஜாவின் மனத்தில் இல்லை!

புகைவண்டி நெருங்கி வந்துவிட்டது. யதேச்சையாக என்ஜினிலிருந்து எட்டிப்பார்த்த டிரைவர், சிவப்புத் துணியோடு ராஜா ஓடிவருவதைக் கவனித்து 'சடன் பிரேக்' போட்டார்.

கொஞ்சம் கொஞ்சமாக வேகம் குறைந்த புகைவண்டி, தண்டவாளம் பெயர்க்கப்பட்ட இடத்திற்குச் சரியாக ஒரு ஃபர்லாங் தூரத்தில் வந்து நின்றது.

''என்னடா தம்பி, ஏன் வண்டியை நிறுத்தினாய்?'' என்ஜினிலிருந்து குதித்த டிரைவர் ராஜாவை வினவினார்.

''அதோ... அந்த இடத்துலே... யாரோ நாலு பேரு தண்டவாளத்தைப் பேர்த்து எடுத்திட்டாங்க... நான் இந்தப் போலீஸ் விசிலை ஊதினதும் ஓடிப் போய்ட்டாங்க!'' — இரைப்போடு ராஜா நடந்தவற்றை விளக்கினான்.

அதற்குள் ரயில்வே கார்டும், மக்களில் சிலரும் புகைவண்டியிலிருந்து இறங்கிவிட எல்லோரும் தண்டவாளம் பெயர்த்தெடுக்கப்பட்ட இடத்துக்கு விரைந்தனர்.

ராஜா சொல்லியது உண்மைதான் என்று தெரிந்ததும் ரயில்வே கார்டு அவனது புத்திசாலித்தனத்தை வியந்து பாராட்டினார். மேலிடத்துக்கு எழுதி அவனுக்குப் பணப்பரிசு கிடைக்க ஆவன செய்வதாயும் சொன்னார்.

அப்புறம் இளம்பி ராஜா பள்ளி வந்தடைவதற்குள் அவன் செய்த தீரச்செயல் பள்ளி முழுவதும் காட்டுத் தீயாய்ப் பரவிவிட, எல்லா ஆசிரியர்களும் மனதாரப் புகழ்ந்தனர். அவனைப் போல் சமயோஜித புத்தியுடன் திகழ வேண்டும் என்று மற்ற மாணவர்களிடம் எடுத்து விளக்கினர்.

ராஜாவின் தந்தை லெட்சுமணனுக்கும் செய்தி அனுப்பப்பட்டது.

அன்று மாலை, ராஜாவுக்குப் பள்ளியிலேயே பாராட்டு விழாக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அதைக் காண ராஜாவின் தாய் பட்டம்மாளும் வந்திருந்தாள். பலரும் தன் மகனைப் பாராட்டிப் பேசுவதைக் கண்ட அந்தத் தாயுள்ளம் உண்மையில் குளிர்ந்து போனது!

''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்.''

சிறகை விட.....

ஓர் அன்பர் காந்தியடிகளுக்குக் கடிதம் எழுதியிருந்தார். அதில் ஒரு சிறு கதை இருந்தது. அக்கதையில், ''பாதிரியார் ஒருவர் மலை உச்சிக்கு ஏறிக் கொண்டிருக்கிறார். அவர் அருகே ஓர் ஆறு வயதுச் சிறுமியும் தன் தோளில் இரண்டு வயதுச் சிறுவனைச் சுமந்தவாறு மலை ஏறிக்கொண்டிருக்கிறாள். பாதிரியார் அவளை நோக்கி, ''இந்தப் பையன் உனக்கு மிகவும் கனம் அல்லவா?'' என்று கேட்கிறார். அதற்கு அந்தப் பெண், ''கனமா? அவன் என் தம்பி அல்லவா?'' என்று பதிலளிக்கிறாள்.

இக்கதையுடன் கூடிய கடிதத்தைப் படித்தவுடன் காந்தியடிகள் மனம் நெகிழ்ந்தது.

பதிலளிக்கும் பொழுது எழுதினார்: ''உங்கள் அன்பான கடிதம் கிடைத்தது. 'கனமா? அவன் என் தம்பி அல்லவா?' — எத்தகைய சிந்தனையைத் தூண்டும் வார்த்தை! எவ்வளவு கனமான சுமையும் அன்பின் மிகுதியோடு தூக்கப்படும்போது—எவ்வளவு கனம் குறைந்து சிறகைவிட லேசாகிவிடுகிறது!''

—மகாத்மாவின் 'செலக்டட் லெட்டர்ஸ்'என்ற புத்தகத்திலிருந்து
தகவல்: செந்தமிழ்ச் செல்வன்





சிங்கப்பூர் சென்று வந்தேன்

ஆர். கார்த்திகேயன்

சிங்கப்பூரின் டிஸ்னிலாண்ட்!

சிங்கப்பூரின் 'டிஸ்னி லாண்ட்', என்று பயணிகளால் கருதப்படும் டைகர் பாம் சோலை (Tiger Balm Gardens) என் நெஞ்சை விட்டு நீங்காத காட்சிகளில் ஒன்று. சீன தேசத்துத் தேவதைக் கதைகளிலும், இதிகாசங்களிலும் வரும் பல கதாபாத்திரங்களையும், காட்சிகளையும், கதை வடிவில் செய்து காட்சிப் பொருள்களாக அங்கு வைத்துள்ளனர். சிலைகள் பெரிய அளவில் உள்ளன. அங்கிருந்த இனிய சொர்க்க லோகக் காட்சிகளும், பயங்கர யமலோகக் காட்சிகளும், என் கவனத்தைக் கவர்ந்தன. பெரியவர்களும், சிறியவர்களும் கூட்டம் கூட்டமாக அந்தச் சோலையில் கூடுகின்றனர். டைகர் பாம் சோலையின் பல காட்சிகளையும், சிங்கப்பூரின் மற்றக் காட்சிகளையும் என் மனத்திரையில் மட்டும் அல்லாமல் காமிரா விலும் பல வண்ணப் படங்களாகப் பிடித்துக் கொண்டேன்.

சிங்கப்பூரில் என் பெரியப்பாவும், அவருடைய குடும்பத்தினரும் இருக்கின்றனர். இன்னும் பல நெருங்கிய உறவினர்களும் இருக்கின்றனர். அவர்களுடைய அன்பான அழைப்பை ஏற்று என் அம்மா, அப்பாவோடு நானும் போனேன். என் அத்தைப் பிள்ளை கனகா என் உயிர்த் தோழன். அவனும் என்னோடு வந்தான். எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருந்தது.

குப்பை போட்டால் அபராதம்


சென்னையில் நாங்கள் ஏறிய சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் விமானம் சுமார் மூன்றே முக்கால் மணி நேரத்தில் சிங்கப்பூரை அடைந்தது. விமான நிலையத்திற்கு உறவினர் பலர் வந்து


டைகர் பாம் தோட்ட வாசலில்



50 அடி புத்தர்!







வரவேற்றனர். 'ஏர்க்கான்' என்ற குளிர்ச்சாதனம் அமைந்த காரில் ஏறி என் பெரியப்பா வீட்டிற்குப் போனோம். அகன்ற தெருக்களும், விரைவாகச் செல்லும் வாகனங்களும், உயர்ந்த பல மாடிக் கட்டிடங்களும் சிங்கப்பூருக்குப் பெருமை சேர்க்கின்றன.

சிங்கப்பூரில் என்னை மிகவும் கவர்ந்தது அதன் சுத்தமான வீதிகள். அங்கே ஒரு மிட்டாயையோ, சாக்லெட்டையோ வாயில் போட்டுக் கொண்டு அதைச் சுற்றியிருக்கும் காகிதத்தை நாம் பொது இடங்களில் எறிந்து விடக்கூடாது. அவ்வாறு செய்தால், சுமார் 500 டாலர் வரை அபராதம் கட்ட வேண்டியிருக்குமாம்! என் பெரியப்பா சொன்னார்!

பூங்கா நகரம்

சிங்கப்பூர் சென்னை நகரைப் போலப் பரப்பளவுள்ள ஒரு தீவு. தீவின் மத்தியில் மூன்று ஏரிகள். ஏரிகளைச் சுற்றிலும் காடுகள்! அரசாங்கம் பெரும் முயற்சி எடுத்து நகரம் முழுவதும் புல்வெளிகளையும், பூங்காக்களையும், நிறுவியுள்ளது. சிங்கப்பூரை 'பூங்கா நகரம்' என்றும் அழைக்கின்றனர். அந்தப் பூங்காக்களில் உலவும்போது தமிழ்நாட்டின் ஊட்டியும், கொடைக்கானலும் என் நினைவுக்கு வந்தன. பூக்களில் தான் எத்தனை வகை! 'ஆர்கிட்' (Orchids) என்ற பூச்செடிகளைப் பெரும் அளவில் பயிர் செய்து பூக்களை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர்.

சிங்கப்பூரில் சீனர்கள் அதிகம். அங்கு மலாய்க்காரர்களும், தமிழர்களும், கணிசமாக இருக்கின்றனர். சீனம், மலாய், தமிழ், ஆங்கிலம் — ஆகிய நான்கும் அங்கு அரசாங்க மொழிகள். கடை வீதிகளில் மலாய் அல்லது ஆங்கில மொழிகளில் பேசலாம்.

சிறு இந்தியா

'செரங்கூன் சாலை'யைச் ''சிங்கப்பூரின் சிறு இந்தியா' என்று அழைக்கலாம். இந்தச் சாலையில்தான் இந்தியாவிலிருந்து வரும் பல்வேறு பண்டங்கள் விற்பனை ஆகின்றன. அரபு தெரு, சேஞ்ச் தெரு முதலிய தெருக்கள் முக்கிய வியாபார ஸ்தலங்கள். பொருட்களைப் பெரும்பாலும் பேரம் பேசியே வாங்குகின்றனர். கறார் விலை அரிதாகக் காணப்படுகிறது. கடைகள் பெரியனவாயும் கவர்ச்சியாயும் காணப்படுகின்றன. எதை வாங்குவது, எதை விடுவது என்று தெரியவில்லை. நானும் கனகாவும் ஆளுக்கொரு எலக்ட்ரானிக் கைக்கெடிகாரம் வாங்கினோம். சீன நாகம் (Dragon) போட்ட சில சட்டைகளைச் சிநேகிதர்களுக்கு அன்பளிப்பாக வாங்கினோம்.

வாழை இலைச் சாப்பாடு!

சிங்கப்பூரில் பல புகழ்பெற்ற ஓட்டல்கள் இருக்கின்றன. அவற்றில்

மேலைநாட்டு உணவு வகைகள் மட்டும் அல்லாது இந்தியா, சீனா, மலேசியா முதலிய பல நாட்டு உணவு வகைகளும் பரிமாறப்படுகின்றன. சிங்கப்பூர் போகிறவர்களுக்கு நன்றாகச் சாப்பிடத் தெரிந்திருக்க வேண்டும். 'கோமளா விலாஸ்', 'சண்முக விலாஸ்' என்ற இரு ஓட்டல்களிலும் தமிழகத்தின் அருமையான சைவச் சாப்பாட்டை ருசி பார்த்தேன். ''வாழை இலைச் சாப்பாடு'' என்ற வினோத அனுபவத்திற்காகவே மேல்நாட்டார் பலர் அங்கு வருகின்றனராம். ஐஸ் கிரீம், கேக்கு, பிஸ்கட்டு, போன்ற ருசியான பொருள்களுக்குக் கணக்கே இல்லை. ஆசைதீர நாங்கள் பலவகை ஐஸ்கிரீம்கள் சாப்பிட்டோம்.

குரங்குடன் குலவினோம்


வனவிலங்குச் சாலை (Zoo) வனப்பு மிக்க இடம். ஏரிக்கரையில் இயற்கைச் சூழ்நிலையில் சுமார் 30 ஹெக்டேர் பரப்பில் அது நிறுவப்பட்டுள்ளது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட மிருகங்களைக் கண்டேன். அங்கு ஆனை மீது ஊர் வலம் போகலாம்! பாம்பை வைத்துக் கொண்டு போட்டோ படம் எடுக்கலாம்! மனிதக் குரங்கோடு விளையாடலாம்! 'ஆமெங்' (Ahmeng) என்ற பெயருள்ள குரங்கை நன்றாகப் பழக்கியிருக்கின்றனர். அது பயணிகளுடன் தமாஷாகப் பழகுகிறது. அவர்களைக் கட்டிக் கொண்டு போட்டோவுக்குப் 'போஸ்' கொடுக்கிறது! அதைப் பார்ப்பதற்காகவே ஆயிரக் கணக்கான மக்கள் அங்கு வருகின்றனர். நானும், கனகாவும் ஆமெங் குரங்கோடு சேர்ந்து ஒரு போட்டோ எடுத்துக் கொண்டோம். 'குழந்தைகள் உலகம்' என்று ஒரு தனிப் பகுதி இருக்கிறது. மான், முயல், கரடிக் குட்டி முதலிய பிராணிகளுடன் குழந்தைகள் அங்கு ஓடிப் பிடித்து விளையாடுகின்றனர்.

பேசும் மைனா; பாடும் பறவை

ஜூரோங் பகுதியில் உள்ள பறவைகள் பார்க் (Jurong Bird Park) என்னைக் கவர்ந்த இன்னொரு இடம். அதை உலக அதிசயமாகச் சொல்லுகின்றனர். சுமார் 20 ஹெக்டேர் பரப்பளவில் 300 இனங்களுக்கும் மேற்பட்ட மூவாயிரம் பறவைகள் ஆனந்தமாக வாழ்கின்றன. அதன் மையத்தில் சுமார் 30 மீட்டர் உயரத்திலிருந்து ஒரு செயற்கை நீர் வீழ்ச்சி இடி முழக்கத்தோடு பாய்கிறது. அது கண்கொள்ளாக்காட்சி! அந்தப் பார்க்கில் வலைகளைக் கொண்டு நூறு அடி உயரத்திற்குப் பெரிய கூண்டு செய்திருக்கின்றனர். நாம் கூண்டுக்குள்ளே போய் வேடிக்கை பார்க்கிறோம். பறவைகள் வெளியே சுதந்திரமாகத் திரிகின்றன. அது நான் கண்ட புதுமை. ஆங்காங்கே சிறுசிறு கூண்டுகளும் இருக்கின்றன!



பத்துமலை முருகன்







அவற்றில் பஞ்ச வர்ணக் கிளிகள், பேசும் மைனா, பாடும் பறவை — முதலியவற்றை வளர்க்கின்றனர்.

ஜுரோங் பகுதியில் இன்னொரு சிறப்பு. அங்குள்ள சீன, ஜப்பான் தோட்டங்கள். அவற்றைக் கண்டு மகிழ்ந்தோம்.

சைனா டவுனில் மாரியம்மன் கோவில்!

சைனா டவுன் என்ற பகுதியில் உள்ள மாரியம்மன் கோவிலுக்கு ஒருநாள் போனோம். அது 1827—ல் கட்டப்பட்ட ஒரு பழைமையான ஆலயம் என்று சொன்னார்கள். அதன் கோபுரம் புதிதாக வர்ணங்கள் தீட்டப் பட்டுப் பளிச்சென விளங்குகிறது. பயணிகள் அந்தக் கோபுரத்தைப் போட்டோ பிடிக்கத் தவறுவதில்லை. மாரியம்மன் தவிர பிள்ளையார், முனீஸ்வரர் ஆகிய சன்னதிகளும் அங்கு இருக்கின்றன. எனது பயணம் இனிது நிறைவேற அங்குள்ள தெய்வங்களை வேண்டிக் கொண்டேன். சிங்கப்பூர்த் தமிழர்கள் திரளாக அங்கு வந்து வழிபடுவதைக் கண்டேன்.

சிங்கப்பூரின் இன்னொரு பழைய கோவில் 'செட்டியார் கோவில்'. அந்தத் தண்டாயுதபாணி சுவாமியை வழிபட்டோம். அங்கு வழக்கமாகத் திருமணங்கள் நடப்பதாகச் சொன்னார்கள். அந்தக் கோவிலைப் புதுப்பிக்கும் திருப்பணி இப்போது நடக்கிறது.

ஆயிரம் விளக்கு ஆலயம்

சென்னை நகரத்தில் ஆயிரம் விளக்கு என்று ஒரு பகுதி உண்டு. சிங்கப்பூரில் 'ஆயிரம் விளக்கு ஆலயம்' என்று ஒரு புத்தர் கோவில் இருக்கிறது. அங்குள்ள புத்தர் சிலை பெரியது. சுமார் ஐம்பது அடி உயரம். அமைதியான முகம்! சிலையைச் சுற்றி ஏராளமான சிறுசிறு விளக்குகளை ஏற்றி வைக்கின்றனர்! ஊதுபத்தியும், மெழுகுவர்த்தியும் ஏற்றி வைத்து வழிபடுகின்றனர்.

நீச்சல் குளத்தில் சறுக்கு மரம்

எனக்கும் கனகாவுக்கும் நீச்சல் என்றால் உயிர். ஒருநாள் நீச்சல் குளத்திற்குப் போனோம். அந்த இடத்தில் மூன்று வகைக் குளங்கள் இருந்தன. முதல் குளத்தில் செயற்கை அலைகள் மோதின. இரண்டாவது குளம் ஆறுபோல் வளைந்து வளைந்து அமைக்கப்பட்டிருந்தது. மூன்றாவது குளத்தில் சுமார் அறுபது அடி உயரக்

தில் ஒரு சறுக்கு மரம் இருக்கிறது. உச்சியில் ஏறி நாம் உட்கார்ந்து கொண்டால், கீழ்நோக்கிப் பாயும் நீர்ப் பிரவாகத்தோடு நாமும் வேகமாக நீச்சல் குளத்தில் விழுகிறோம். அந்த மாதிரி நாங்கள் அநேக தடவை சறுக்கி விளையாடினோம்.

ஒற்றைத் தண்டவாள ரயில்

சென்டோசா என்பது சிங்கப்பூருக்கு அருகிலுள்ள ஓர் அழகியதீவு. ஒரு பெரிய லாஞ்சில் ஏறி அந்தத் தீவை அடைந்தோம். லாஞ்சில் சுமார் 200 ஆட்கள் வரை பிரயாணம் செய்கின்றனர். அங்கு மனத்தைக் கவரும் பல இடங்கள் உள்ளன. அந்த இடங்களுக்குச் செல்ல ஒற்றைத் தண்டவாளத்தில் ஓடும் 'மோனோ ரயில்' இருக்கிறது. பவளங்களை வளர்க்கும் இடம், இசை நீர்வீழ்ச்சி, திறந்தவெளிக் கலை அரங்கம், மெழுகுப் பொம்மைக் காட்சிகள் முதலியவற்றைக் கண்டுகளித்தோம்.

'சிங்கப்பூர் அனுபவம்' என்ற அபூர்வத் திரைப்பட நிகழ்ச்சியைப் பதினொரு திரைகளில் போட்டுக் காண்பிக்கின்றனர். சிங்கப்பூர்க் கலை அரங்கில் விசேஷ அலங்காரத்துடன் இதிகாசக் காட்சிகளை ஆடிக் காட்டுகின்றனர்.

சைக்கிள் ஓட்டும் கிளி

ஜோகூர் என்பது சிங்கப்பூருக்கு அருகில் உள்ள மலேசிய நகரம். அங்குள்ள சபாரி பார்க்கில் சிங்கம், புலி முதலிய வனவிலங்குகள் சுதந்திரமாகத் திரிகின்றன. நாங்கள் காரில் ஏறி அவற்றின் அருகில் சென்று கவனித்தோம். இன்னொரு இடத்தில் கிளிகள் விளையாட்டு சிறப்பாக இருந்தது. ஒரு வெள்ளைக் கிளி ஒரு சின்ன சைக்கிளை ஓட்டிக் காட்டியது!

பத்துமலை முருகன்

மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் இரண்டு நாட்கள் தங்கினோம். முத்தமிழ்க் கடவுளான முருகன் அங்கு பத்துமலை என்னும் நேர்த்தியான இடத்தில் கோயில் கொண்டிருக்கிறான். மலையின் உச்சியில் சுண்ணாம்புப் பாறையால் ஆன குகை உள்ளது. தண்ணீரின் அரிப்பால் இயற்கையாகவே பல தூண்கள் ஏற்பட்டுக் குகை அழகாக இருக்கிறது.

முருகனின் ஆசியையும், உறவினர்களின் வாழ்த்தையும் பெற்றுக் கொண்டு சிங்கப்பூரை விட்டு, பிரிய மனமில்லாமல் சென்னைக்கு விமானம் ஏறினோம்.

ஒற்றைத் தண்டவாள ரயில்







கிணற்றில் இறங்கிய கருப்பன்



கருப்பன் என்ற முரட்டுப் பையன்
ஊரைச் சுற்றுவான் — அவன்
கண்ணில் காணும் குருவி பறவை
தம்மைக் கொல்லுவான்!

வறுத்த பறவை இறைச்சி தின்று
துள்ளிக் குதிப்பான்! — வீணில்
வம்பு வழக்குச் சண்டை போட்டுக்
கல்லால் அடிப்பான்!

கிணற்றுக்குள்ளே கூடு கட்டிப்
புரு இருந்தது — கருப்பன்
கேள்வி யுற்றான் அதைப் பிடிக்க
ஆசை வந்தது!

கயிற்றைக் கட்டிக் கிணற்றுக் குள்ளே
மெல்ல இறங்கினான்! — ஆனால்,
கயிறு அறுந்து பிடியும் நழுவக்
கிணற்றில் விழுந்தான்!

மண்டை பிளந்து மூளை சிதறிக்
கருப்பன் செத்தானே — உயிரை
வதைக்க நினைக்கும் கொடியவர்க்கு
முடிவு இதானே!

சக்திக்கனல்

முழு நீளக் கதை

இப்படியும் ஒரு பிள்ளை



எஸ்.விஜயா சீனிவாசன்

"அம்மா!" என்று கூப்பிட்டபடி உள்ளே நுழைந்தான் கோபி. ஆழாக்கு அரிசியை முறத்தில் போட்டுக் கல் பொறுக்கிக் கொண்டிருந்த அவன் தாய் நிமிர்ந்தாள்.

"என்னப்பா கோபி! பள்ளிக்கூடத்துக்கு நேரமாச்சே! எங்கே சுத்திட்டு வர்றே?" என்றாள்.

"அதெல்லாம் சொல்ல முடியாது. சீக்கிரம் சோத்தைப் போடு. பள்ளிக்கூடத்துக்குப் போகணும்" என்று கூறியபடி ஓரமாக வைத்திருந்த அலுமினியத் தட்டை எடுத்து வைத்துக் கொண்டு அமர்ந்தான்.

அவன் தாயார் முறத்திலிருந்த அரிசியை ஒரு பாத்திரத்தில் கொட்டி வைத்து விட்டு எழுந்தாள். அடுப்பு மேல் மூடி வைத்திருந்த பழைய சோற்றைப் பிழிந்து கோபியின் தட்டில் வைத்தாள். மறுகணம் அவனுடைய தட்டு, பறக்கும் தட்டாக மாறியது!

"என்ன இது! எப்பப் பார்த்தாலும் பழஞ்சோறுதானா? நாக்குச் செத்துப் போச்சு. இதுமாதிரியே தின்னா ஒரு நாளைக்கு நானும் சாக வேண்டியது தான்" என்று கத்தியபடி எழுந்தான். அவன் தாய் பதறினாள்.

"அட, என்ன வேலையடா செய்தாய்? உனக்கு மட்டும்தாண்டா இந்தச் சோறு. நானும் உங்க அப்பாவும் நீச்சத் தண்ணியைத்தான் உப்புப் போட்டுக் குடிச்சோம். இதோ உனக்கு மதிய சாப்பாட்டுக்காகக் கூலி வேலை செய்து கிடைத்த பணத்திலே, அரிசி வாங்கிச் சுடுசோறு ஆக்கிப் போடலாம்னு இருக்கிறேன். அதுக்குள்ளே என்னடா கோபம்?" என்று வருத்தத்துடன் கேட்டாள்.

"ஆமாம். சுடு சோறு, பெரிய சுடு சோறு! எங்கூடப் படிக்கிற பிள்ளைங்க எல்லாம் எப்படி வகை வகையாத் தின்னுட்டு, தின் பண்டங்கள் வாங்கக்

காசும் கொண்டு வராங்க தெரியுமா? இந்த வீட்டுலே என்னதான் இருக்கு? எப்பவும் பழைய சோறு. ஊறுகாய். அட! பொறந்தா பெரிய பணக்கார வீட்டிலே பொறக்கணும். ஒரு நல்ல சட்டை உண்டா? எப்பவும் தரித்திரம் தான்'' என்று தன்னுடன் படிக்கும் பணக்கார மாணவர்களை விமர்சித்தான். அவன் தாயார் கண்ணீருடன் ''ராஜா! நம்ப தலையெழுத்து அப்படி இருக்கு. நீ நல்லாப் படிச்சு முன்னுக்கு வந்து சம்பாதிக்க ஆரம்பிச்சுட்டா நம்ம கஷ்டம் தீரும். நாங்க மட்டும் வடை பாயசம் திங்கறோமா? பாவம், உங்க அப்பா தமக்குனு ஒரு நல்ல சட்டை வாங்கிக்கிட்டாரா? நாங்களும் அரைவயிறு தின்னுட்டுத்தானே உழைக்கறோம்? கொஞ்சம் கூடப் பொறுமையே இல்லையாடா உனக்கு?''

''அடபோம்மா. நான் படிச்சுச் சம்பாதிச்சுக் கொடுத்தால் நீங்க நல்லா தின்னலாம்னு எண்ணமா? நான் ஸ்கூலுக்குப் போறேன். எனக்குச் சோறு வேண்டாம்'' என்று கூறிவிட்டு வேகமாகப் பையை எடுத்துக் கொண்டு ஓடினான். அவன் தாய் கண்ணீருடன் அவன் போவதையே கவனித்தாள்.

வகுப்பில் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அந்தச் சமயம் வகுப்பறையில் நுழைந்தான். ஆசிரியர் எங்கேயோ பார்க்கும் நேரத்தில் 'சட்'டென்று உள்ளே நுழைந்தான். ஆசிரியர் இதைக் கவனித்து விட்டார்.

''டேய், கோபி இங்கே வா'' என்று அதட்டினார் கோபி பேசாமல் இருந்தான்.

''டேய், உன்னைத் தான் காதில் விழவில்லை?''

கோபி எழுந்தான். ''காதில் விழவில்லை சார்!'' என்றான்.

சின்னச் சிரிப்பொலி கேட்டது. மாணவர்களிடமிருந்து தான்!

''ஏண்டா இவ்வளவு லேட்டா வரே?''

''அது, அப்படித்தான் சார்'' என்றான் கிண்டலாக.

''என்னடா உளறுகிறாய்? கேட்ட கேள்விக்குப் பதில் சொல். ஏன் இவ்வளவு நேரம்?''

கோபி விரைப்புடன் ஆசிரியரை நோக்கினான்.

''நான் சொல்லியே ஆக வேண்டுமா?'' என்றான்.

''கட்டாயம். சொன்னால்தான் வகுப்பிலே உட்காரலாம். இல்லாவிட்டால்...?''

''இல்லாவிட்டால் என்ன செய்வீங்க?''

''தலைமை ஆசிரியரிடம் இழுத்துச் சென்று உதை வாங்கித் தருவேன். எதிர்த்தா பேசுகிறாய்?'' என்று கோபம் மேலிடக் கூறினார்.

''ரொம்ப மிரட்டாதீங்க சார். தலைமை ஆசிரியரிடம் 'இவங்க சொல்லிக் கொடுக்கிற பாடம் ஒண்ணுமே புரியலே. இந்த ஆசிரியரை மாத்துங்க முதல்லிலே'ன்னு சொல்லுவேன்'' என்றதும் 'கொல்'லென்று சிரித்தனர் மாணவர்கள். ஆசிரியர் முறைத்தார். பயந்த பிள்ளைகள் அடங்கினர். ஆசிரியர் கோபத்துடன் கோபியை நோக்கினார். அவனும் சிரித்தபடி நின்றான். 'பளார்' என்று அவன் கன்னத்தில் அறைந்தார். ''நீயெல்லாம் எதற்குப் படிக்க வர வேண்டும்? அம்மா அப்பாவுக்கும் ஆசிரியர்களுக்கும் பாரம் தான்!''

கோபி தாங்க முடியாத வலியுடன் கன்னத்தைத் தடவியபடி, ''உம், என்னை அடித்ததற்கு உம்மைச் சும்மா விடமாட்டேன். வெளியே வரும்போது பார்த்துக் கொள்கிறேன்''



''அப்பா, கால் சுளுக்கியிருக்கு. நான் பள்ளிக் கூடம் போகமாட்டேன்!''

''சைக்கிளிலே கொண்டு விடச் சொல்றேன்.''

''ஆனால், வாத்தியார் பெஞ்சு மேலே நிற்கச் சொன்னா, சுளுக்கின காலோடே எப்படியப்பா நிற்பேன்?''

–ஆர். பி. ராஜ்

என்று ஆத்திரத்துடன் கூறிவிட்டு வேகமாக வெளியேறினான்.

ஊரை எல்லாம் சுற்றிவிட்டு இரவு ஏழு மணிக்கு வீடு திரும்பினான். அங்கே அவனுக்காகவே காத்திருந்த அவன் தந்தை, கோபி உள்ளே நுழைந்ததும் ''டேய், இங்கே வாடா'' என்று அதட்டினார். அவரது கண்கள் கோவைப் பழம் போல் சிவந்திருந்தன.

''என்ன அப்பா?'' என்று தலை நிமிர்ந்து தந்தையை வினவினான். தந்தை அவனை மேலும் கீழுமாக நோக்கினார். ''காலையில் சாப்பிட்டாயா?''

''ஆஹா, வடை பாயசத்துடன் சாப்பிட்டேன்'' என்று கேலியுடன் பதில் கூறினான். 'என்ன நடக்குமோ?' என அஞ்சிய தாய் தயங்கியபடி அங்கே வந்து நின்றாள்.

''இன்று பள்ளிக்குப் போனாயா?''

''ஓ, போய்ட்டு வந்தேன்.''

''இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தாய்?''

''சும்மா ஊரைச் சுற்றினேன்.'' பயமின்றிக் கூறினான்.

''பள்ளியில் என்ன நடந்தது?''

''பாடம் நடந்தது.''


''அதைக் கேட்கவில்லை. உனக்கும் ஆசிரியருக்கும் என்ன தகராறு?'' குரலை உயர்த்தி வினவினார்.

''ஓ! அது உங்களுக்குத் தெரியுமா?''

''தெரிந்து, விஷயமறிந்துதான் கேட்கிறேன், சொல்லுடா!''

''அதுதான் உங்களுக்குத் தெரிந்து விட்டதே! என்னை எதற்குத் திரும்பவும் கேட்கிறீர்கள்? அந்த ஆந்தை வாத்தியார்தான் உங்ககிட்டே வத்தி வச்சுட்டாரே!'' முரட்டுத்தனமாகப் பதில் அளித்தான் கோபி.

''டேய், இவ்வளவு திமிர் எங்கிருந்து வந்தது? வீட்டின் நிலைமை தெரிந்திருந்தும், பழைய சோறு தின்றும் இவ்வளவு ஆணவமா?'' கோபத்துடன் தம் இடுப்புப் பெல்ட்டை உருவினார். ஒரே விநாடிதான்; கண் மண் தெரியாமல் கோபியை விளாசினார். ''ஐயோ! ஐயோ!'' என்று கூக்குரலிட்டுத் துடித்தான் கோபி. தாய் ஓடி வந்து தடுத்தாள். அவளது முதுகிலும் இரண்டு விழுந்தது. அவள் கண்ணீருடன் விலகிக் கொண்டாள். கோபியின் உடலில் ஓர் இடம் பாக்கி இல்லாமல் அடித்து ஓய்ந்தார். பிறகு வெறுப்புடன் பெல்ட்டை வீசிவிட்டுப் பின்புறம் சென்றார்.



உங்க பையனுக்குக் கையிலே சுளுக்குன்னு டாக்டரிடம் போனீங்களே, அப்படி உங்க பையன் என்னதான் பண்ணினான்?"

"நேற்று அவனுக்குப் பிறந்த நாள். பர்த் டே கேக்கைக் கொஞ்சம் சிரமப்பட்டு வெட்டியிருக்கிறான்"

-டி. எல். ரெட்டி

மறுநிமிடமே அங்கிருந்து புயலாக வெளியேறி மறைந்தான் கோபி. தாயின் கூக்குரல் அவன் செவியில் விழுவதற்கும் இடம் தராமல் ஓடிவிட்டான். தாய் புலம்பினாள். பாசத்தினால் துடிதுடித்தாள். ஆனால் கோபி தன் தாயின் கண்ணீருக்காகவோ, பாசத்திற்காகவோ கவலைப்படவில்லை. ஆம்! வீட்டை விட்டு ஓடியவன் ஓடியவன்தான்!

எங்கு செல்கிறோம் என்கிற நினைவே இன்றித் தன் போக்கில் சென்று விட்டான் கோபி.

டிக்கெட் இல்லாமல் கோபி மதுரை வந்து இரண்டு தினங்களாகி விட்டன. கோபத்தில் ஓடிவந்து விட்டானே தவிர, 'எங்கே போவது? என்ன செய்வது?' என்று புரியாமல் ரயில் நிலையத்தையே சுற்றி வந்தான். பசி வயிற்றைக் கிள்ளியது. சோறு எப்படிக் கிடைக்கும். அங்கே வரும் பிரயாணிகளின் மூட்டையைத் தூக்கிக் கிடைக்கும் சில பைசாக்களில் 'டீ'யும் 'பன்'னும் வாங்கிச் சாப்பிட்டான்.

'இப்படியே எத்தனை நாளைக்கு? என்ன செய்வது?' கோபியின் கண்கள் அழுது அழுது சிவந்தன! 'இனி என்ன செய்வது?' எனப் புரியாமல் தவித்தான். தாய் போடும் பழைய சோற்றைத் தின்றே மொழுமொழுவென்று தங்கம் போலிருந்த உடம்பு

எப்படி இளைத்து உருமாறி விட்டது! இரண்டு நாட்களிலேயே இந்தக் கதி என்றால் போகப் போக என்ன கதி ஆவது? கண்களில் சோகம் ததும்ப யோசித்தபடி அமர்ந்திருந்தான் கோபி.

தந்தை ஒரு பெரியவர் வீட்டில் டிரைவராக இருக்கிறார். பெரிய பெண்ணுக்குப் போன வருடம் திருமணம் நடந்தது. பெண்ணின் திருமணக் கடனை அடைக்கவே அவர் வருமானம் போதவில்லை. கோபிக்கு வீட்டின் நிலைமை புரியவில்லை. பணக்காரக் குழந்தைகளைப் பார்த்து ஏங்கினான். படித்து முன்னுக்கு வரவேண்டிய வயதில், அந்த எண்ணம் சிறிதுமின்றிப் பகட்டாக இருக்கவும் ஹோட்டல், சினிமா என்று சுற்றவும் ஆசைப்பட்டான். ஏழையின் ஆசை நிறைவேற வழியில்லை. அதனால் கோபமும், முரட்டுத்தனமுமே விஞ்சியன கோபியிடம்.

கோபியின் யோசனை முடிவில்லாமல் ஓடியது. அடுத்தவேளை சாப்பாட்டுக்கு என்ன செய்வது? பிளாட்பாரத்தில் எத்தனை நாளைக்கு இருக்க முடியும்? யாராவது சந்தேகப்பட்டு உதைத்தால் என்ன செய்வது? ஊருக்குப் போகப் பணமுமில்லை. மனமுமில்லை.

திடீரென்று ஒரு கரம் அவனை அணைத்தது. கோபி நிமிர்ந்து நோக்கினான்.

அழுக்குப் பேண்ட்டும் கிழிசல் சட்டையுமாகக் காட்சி அளித்தான் ஒருவன். அவன் கையில் ஒரு கிளாசில் டீ இருந்தது.

''தம்பீ, இந்தா, இந்த டீயைக் குடி'' என்று கோப்பையைக் கோபியிடம் கொடுத்தான்.

கோபி ஆவலுடன் டீயைக் குடித்தான். ''தம்பி, இங்கேயே இரு. உனக்கு 'பன்' வாங்கியாறேன்'' என்று கூறிவிட்டு அகன்றான். சிறிது நேரத்தில் 'பன்' வாங்கி வந்து கோபியிடம் கொடுத்தான். பசியும், மயக்கமும் தீர்ந்து புத்துணர்வு பெற்ற கோபி, மகிழ்ச்சியுடன் ''ஐயா, மிக்க நன்றி'' என்றான் தழுதழுத்த குரலில்.

''தம்பி நீ யார்?'' என்று அந்த மனிதன் வினவினான்.


''நான் ஒரு அனாதை. வேலை தேடியலைகிறேன். ஒரு வேலையும் கிடைக்கவில்லை.'' என்றான்.

''ஓ! தம்பி, நீ எதுக்கும் கவலைப் படாதே! நீ என்னுடன் வந்துவிடு. உனக்கு நான் ஒரு தொழில் கற்றுத் தருகிறேன். நீ சந்தோஷமாக ராஜா மாதிரி என் கூட இருக்கலாம்'' என்றான் அவன்.

கோபி சற்று யோசித்தான். அவனுக்குத் தற்போது வேண்டியதெல்லாம் பசிக்குச் சோறு. அதற்குத் தேவையான காசு. அது ஒரு தொழில் மூலம் அவனுக்குக் கிடைத்தால் அதைவிட மகிழ்ச்சி ஏது? பிறர் கையை எதிர்பாராமல் தன் பசியைத் தானே போக்கிக் கொள்ளலாமே!

''சரி'' என்று மகிழ்ச்சியுடன் தலை அசைத்தான் கோபி. அந்த மனிதன் கோபியைத் தட்டிக் கொடுத்து, ''நல்லது. நாம் இப்போ வீட்டுக்குப் போகலாம் வா'' என்று அழைத்தான். கோபி அவனுடன் கிளம்பினான். பல குடிசைகளைக் கடந்து மட்டமான தெரு வழியே நடந்த இருவரும் ஓர் ஓட்டு வீட்டை அடைந்தனர். அந்த மனிதன் கதவைத் தட்டினான். கதவைத் திறந்தாள் ஒரு பெண்மணி. நடுத்தர வயதுடைய அவள், ''வாப்பா ஆறுமுகம், உன்னைப் பெரியவர் வரச் சொன்னாராம். ரெண்டு தடவை ஆள் வந்து தேடிச்சி'' என்றாள். பின் கோபியை வியப்புடன் நோக்கினாள்.

''அப்படியா! சரி, இந்தத் தம்பி இங்கே இருக்கட்டும். நான் போய்ப் பெரியவரைப் பார்த்துட்டு வரேன். நான் வர நேரமானாலும் தம்பியை நல்லாக் கவனிச்சுக்க'' என்று கூறி விட்டு வேகமாக வெளியேறினான்.



தகப்பன் கழுதை: என்னடா இது! இன்னிக்கி வயித்தைக் குலுக்கிக்கிட்டே இருக்கிறாய்?

குட்டிக் கழுதை: நேத்து ஒரு லாட்டரிச் சீட்டை முழுங்கிட்டேன். இன்னிக்குக் குலுக்கலாம்.

—ரெ. முத்துவீர ராஜன்

(3485)

கோபியை உள்ளே அழைத்துச் சென்ற அப்பெண், ''தம்பி, கை கால் சுத்தம் செய்து கொண்டு சாப்பிட வா'' என்று அன்புடன் கூறினாள். கோபி அவள் சொற்படி கேட்டான். நல்ல சுவையான சாப்பாடு. அவர்களிருக்கும் நிலைக்கு இப்படிச் சுவைமிக்க உணவை எப்படிச் செய்கிறார்கள்! கோபிக்கு மிக வியப்பாக இருந்தது.

ஒரு பாயையும், தலையணையையும் கொண்டு வந்து கொடுத்துப் படுக்கச் சொன்னாள். கோபி ஏதும் பேசாமல் படுத்தவன்தான். அலுப்பு மிகுதியால் கண்ணை மூடியவன் இவ்வுலகையே மறந்து தூங்கிவிட்டான்.

விடியும்போதுதான் ஆறுமுகம் வந்தான். கோபி கண்களைத் திறக்க மனமின்றித் தூங்குவது போல் படுத்திருந்தான்.

''அக்கா, தம்பி ராத்திரி சாப்பிட்டுதா?'' என வினவினான். ''ஆமாம் தம்பி, பாவம் ரொம்பப் பசி போல இருக்கு. மூக்குப் பிடிக்கச் சாப்பிட்டுப் படுத்ததுதான். இன்னும் எழுந்திருக்கவில்லை.'' என்றாள். பிறகு ''யார் இவன்? எங்கே பிடிச்சே?'' என்று வினவினாள்.

''யாரோ' அனாதையாம். நம்ம வேலைக்கெல்லாம் இது மாதிரி பையன் தான் வேண்டும்'' என்று கூறிவிட்டுச் சிரித்தான்.

''சரி போய்க் காப்பி பலகாரம் கொண்டா'' என்று கூறிவிட்டுக் கோபியின் அருகில் வந்தான். ''தம்பி எழுந்திருப்பா'' என்று எழுப்பியபடி கோபியைத் தட்டினான்.

கோபி எழுந்து பல் துலக்கி முகம் கழுவிக் கொண்டு ஆறுமுகத்துடன் அமர்ந்து காலைப் பலகாரங்கள் சாப்பிட்டான். நல்ல சூடான காப்பியையும் அருந்தினான்.

''தம்பி, இன்று மாலை நான் உன்னை ஓர் இடத்துக்கு அழைத்துப் போகிறேன். அதற்கு முன் இந்த ஊரைச் சுற்றிக் காட்டுகிறேன். அது தான் முதல் வேலை'' என்றான். கோபி தலை அசைத்தான்.

பகல் சாப்பாடு முடிந்ததும் கோபியும் ஆறுமுகமும் ஊரைச் சுற்றக் கிளம்பினார்கள். ஆறுமுகம் சில இடங்களைக் குறிப்பாகக் காட்டி விளக்கினான்.

''இதோ பார் தம்பி, இதுதான் 'ஒஹோ' ஊதுபத்தி செய்யும் இடம். இதுநாம் அடிக்கடி வரவேண்டியஇடம். அதோ பார்'' என்று மாதா கோயிலுக்குப் பக்கத்திலிருந்த ஒரு பாழுங் குடிசையைக் காட்டினான் ஆறுமுகம். கோபி கவனித்தான். அவனுக்கு வியப்பு மேலிட்டது. 'இந்தக் குடிசையில் என்ன இருக்கிறது பார்க்க?' என்று நினைத்தான். கேள்விக் குறியுடன் ஆறுமுகத்தை நோக்கினான்.

''இந்தக் குடிசையைப் பற்றிப் பிறகு சொல்கிறேன். நீ நன்றாகப் பார்த்து வைத்துக் கொள்'' என்றான். மாலை மணி ஆறு ஆகும்வரை கோபிக்கு இன்னும் சில முக்கிய இடங்களைக் காட்டினான் ஆறுமுகம். விளக்கு வைக்கும் நேரத்தில் இருவரும் வீடு வந்து சேர்ந்தனர்.

மாலைப் பலகாரம் சாப்பிட்ட பின் கோபியை அழைத்துக் கொண்டு வெளி



"டாக்டர், இந்தக் கண்ணாடியைப் போட்டுக்கிட்டா நல்லா படிக்க முடியுமா?"


"ஓ, தாராளமாப் படிக்கலாம்."

"அப்போ என் தம்பிக்கு ஒண்ணு போட்டுவிடுங்கோ. அவனுக்குத்தான் படிக்கத் தெரியாது!"

-நீடை. அ. கதிர்வேல்

யில் கிளம்பினான் ஆறுமுகம். போகு முன், ''இரவு நேரச் சாப்பாடு வேண்டாம். நாங்கள் ஐயா வீட்டிலேயே சாப்பிட்டு விடுவோம்'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

கோபி ஏதும் பேசாமல் ஆறுமுகத்துடன் அந்தப் பங்களாவில் நுழைந்தான். அங்கிருந்த கூர்க்கா ஆறுமுகத்தைக் கண்டதும், சிரித்துத் தலை அசைத்து வழி விட்டான். அங்கு நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு புலி மாதிரி பயங்கரமாக வீற்றிருந்த நாயும் ஆறுமுகத்தைக்கண்டதும்வாலைக்



குழைத்துக் கொண்டு செல்லக் குரைப்புடன் ஓடிவந்தது. கோபியைக் கண்டதும் அது ஏதும் செய்யாமல் ஆறுமுகத்துடன் வந்ததால் அவன் தோழனென்று புரிந்து கொண்டு பேசாமல் இருந்தது.

வாசல் வராந்தாவில் ஒரு பெரியவர் அமர்ந்திருந்தார். அவர் புன்னகையுடன் ஆறுமுகத்தை வரவேற்றார். கோபிக்கு வியப்புக்கு மேல் வியப்பு.

'இந்த ஆளுக்கு, இத்தனை மதிப்பா? இதென்ன அதிசயம்! ஆறுமுகத்திடம் அப்படி என்னதான் காந்த சக்தி இருக்கிறதோ, தெரியவில்லையே! எல்லாம் ஒரே மர்மமாக இருக்கிறதே!' என வியந்தான்.

''என்னப்பா ஆறுமுகம், நீ சொன்னது இந்தப் பையன்தானா?'' என்று கேட்டபடி கோபியை மேலும் கீழும் நோக்கினார்.

''ஆமாம் எஜமான்'' என்றான் பணிவுடன்.

''சரி, உள்ளே வா'' என்று இருவரையும் அழைத்துக் கொண்டு மாடிக்குச் சென்றார். ஓர் அறைக்குள் அவர்களுடன் நுழைந்தவர், கதவை மூடி இறுக்கித் தாளிட்டார். பின் ஆறுமுகத்தை நோக்கி, ''ஏம்பா, பையன் கிட்டே எல்லா விவரமும் சொல்லிவிட்டாயா?'' என்றார்.

''இல்லை எஜமான்; இனிமேல்தான் சொல்ல வேண்டும்'' என்றான் ஆறுமுகம். கோபி விவரம் புரியாமல் ஆறுமுகத்தையும் பெரியவரையும் மாறி மாறிப் பார்த்தான்.

''சரி, நானே விவரமாகச் சொல்லி விடுகிறேன்'' என்றவர் கோபியை நோக்கி, ''உன் பெயர் என்ன தம்பி?'' என்றார். ''கோபி'' என்றான்.

''நல்லது கோபி! நீ நல்லபடி இங்கிருந்து நாங்கள் சொல்லும் வேலைகளைச் செய்ய வேண்டும். உனக்கு வேண்டியவற்றை நாங்கள் வாங்கித் தருவோம். சரிதானே?'' என்றார் அன்புடன்.

''சரி சார். எந்த வேலையானாலும் செய்கிறேன். ''தோட்ட வேலை, வீட்டு வேலை, தண்ணீர் எடுப்பது, துவைப்பது —இப்படி எந்த வேலையானாலும் செய்கிறேன்'' என்று பணிவுடன் கூறினான் கோபி.

பெரியவர் பெரிதாகச் சிரித்துவிட்டார். ஆறுமுகமும் சிரித்தபடி வாயைப் பொத்திக் கொண்டான்.

''தம்பி! உனக்கு அது மாதிரி கஷ்ட மான வேலை யெல்லாம் தரமாட்டோம். சுலபமான வேலைதான் தருவோம்.'' என்றார். பிறகு ஆறுமுகத்தை நோக்கி, ''ஆறுமுகம், இவனை அழைத்துப் போய் ஊரை எல்லாம் சுற்றிக் காட்டினாயா?'' என்று வினவினார்.

''காட்டினேன் எஜமான்'' என்றான் ஆறுமுகம்.

''சரி கோபி, நீ இரவு ஒன்பது மணிக்கு ரெடியா இரு. போய் முத லில் சாப்பிடு. பிறகு இங்கே வா'' என்று கூறிவிட்டு ஆறுமுகத்தை நோக்கி, ''ஆறுமுகம், நீயும் கோபியும் சாப்பிட்டுவிட்டு வாருங்கள். பிறகு, கோபியை இங்கேயே விட்டு விட்டு நீ போய்த் தேவநாதனைப்பார்த்துச் சரக்கு வந்துவிட்டதா என்று விசாரித்து விட்டு வா. சீக்கிரம் வந்துவிடு'' என்றார். ஆறுமுகமும் தலையாட்டிவிட்டுக் கோபி யுடன் அகன்றான்.

கோபிக்கு எதுவுமே விளங்கவில்லை. 'என்ன வேலை தரப் போகிறார்கள்?' என்று எண்ணமிட்டவாறு சாப்பிட் டான். சாப்பாடா அது? பெரிய விருந்து என்றே சொல்லலாம். ஆறு முகமும் விருந்தை மிகவும் ருசித்துச் சாப்பிட்டான். கோபியிடம் பெரிய வரைப் பற்றியோ, என்ன வேலை என் பதைப் பற்றியோ ஏதும் கூறவில்லை.

சாப்பிட்ட பின் கோபியைப் பெரிய வர் அறையில் விட்டு விட்டு ஆறுமுகம் வெளியே சென்று விட்டான்.

கோபி பெரியவர் முன் நின்றான்.

''சாப்பிட்டாயா கோபி?'' என்று பெரியவர் வினவினார்.

''சாப்பிட்டேன்'' என்றான்.

''சாப்பாடு எப்படி இருந்தது?''

''என் வாழ்நாளிலேயே இது மாதிரி ஒரு நல்ல சாப்பாட்டை நான் சாப் பிட்டதே இல்லை'' என்று உற்சாகத் துடன் கூறினான் கோபி.

''சரி, இதுமாதிரி உணவு உனக்குத் தொடர்ந்து கிடைக்க வேண்டுமானால் நான் சொல்வதைக் கேட்க வேண்டும். எந்தக் காரணத்துக்காகவும் மறுக்கக் கூடாது. தெரிந்ததா?'' என்று கண் டிப்புடனும் கூறினார்.

கோபி தலையை அசைத்துத் தன் சம் மதத்தைத் தெரிவித்தான்.

''நல்லது, இங்கே வா'' என்று அழைத்துக் கொண்டு ஒருபெரிய அறைக் குச் சென்றார். அங்கிருந்த ஒரு பெட்டி யைத் திறந்தார். அதிலிருந்து ஓர் ஓவியத்தை எடுத்தார். பிரேம் போட்ட அந்த ஓவியத்தை நோக்கினான் கோபி. அந்த ஓவியத்தில் ஒரு பெண் சிரித்துக் கொண்டிருந்தாள். பெரியவர் ஓவி யத்தை நன்றாகத் துடைத்தார். பிறகு ஒரு காகிதத்தில் சுற்றி, நூல் போட்டுக் கட்டினார். அதைக் கோபியிடம் தந்து ''இந்தா கோபி, இதை நீ ஒருவரிடம் சேர்க்க வேண்டும்'' என்றார். கோபி அதை வாங்கியபடி, ''யாரிடம் சேர்க்க வேண்டும்?'' என்று வினவினான். 'இந்த இரவு நேரத்தில் இந்த ஓவியத்தைஒரு வரிடம் சேர்க்க அப்படி என்ன அவ சரம்' என்று வியந்தான்.


''இதோ பார், மாதா கோயில் பக் கத்திலிருந்த ஒரு பாழுங் குடிசையை ஆறுமுகம் காட்டினானல்லவா?'' என்று பெரியவர் வினவியதும்,

''ஆமாம்'' என்றான் கோபி.

''நன்றாகக் கேட்டுக் கொள். அந்தக் குடிசைக் கிட்டே ஒரு ஆள் நிற்பான். சிவப்பு லுங்கியும், பச்சைப் பனியனும் போட்டிருப்பான். அவனிடம் இதைக் கொடுத்தால் உடனே ஒரு சீட்டுத் தரு வான். அதை வாங்கிக் கொண்டு வர வேண்டும்'' என்றார்.

கோபி விழித்தான். 'இது ஏதோ மர்மமாக இருக்கிறதே' என்று பயந் தான்.

''என்னடா விழிக்கிறே? நான் சொன்னது புரிந்ததா? நடுவில் யாரா வது பிடித்துக் கேட்டால், நீ எதுவும்



பையனின் தந்தை: என் மகனை முதல் வகுப்பில் சேர்த்து ஒரு மாதங் கூட ஆகலே. மிகவும் இளைச்சுட் டான்.

நண்பர்: இரவும் பகலும் விழுந்து விழுந்து படிக்கிறானே!

பையனின் தந்தை: அது இல்லீங்க. புத்தகச் சுமை தாங்காம இளைச்சுட் டான்.

-தேனி முருகேசன்

பதில் பேசக் கூடாது. ஏதாவது தகராறு வந்தால், நீ ஆறுமுகத்திடம் கூற வேண்டும். தெரியுமா? என்னைப் பற்றியோ, இந்தப் பங்களாவைப்பற்றியோ மூச்சு விடக் கூடாது'' என்று அதட்டும் குரலில் கூறினார். கோபிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பேசாமல் பெரியவரை நோக்கினான். 'ஏதோ மர்மமான இடத்தில் வந்து அகப்பட்டுக் கொண்டோம்' என்று வருந்தினான்.

''என்னடா, சொன்னது காதில் விழுந்ததா?'' என்று உரத்தகுரலில் வினவினார் பெரியவர். 'நல்லவர் போல் நடித்த இவர் இப்போது துஷ்ட மிருகம் போல் மாறிவிட்டாரே! ஒரே நொடியில் அவரது அழகான முகம், அசிங்கமாகி விட்டதே!' என எண்ணினான். இந்தப் பங்களா சிங்கக் குகைதான். 'சரி வந்தாகி விட்டது. நல்ல முறையில் நடித்துத் தப்ப வேண்டும்' என நினைத்தவன்,

''சரிங்க சார். முதலில் பயமாக இருந்தது. இப்ப நான் துணிந்துவிட்டேன். நீங்க சொன்னபடியே செய்கிறேன். கொடுங்க அந்தப் பார்சலை'' என்று மன உறுதியுடன் அவரது கையிலிருந்த ஓவியத்தைப் பெற்றுக் கொண்டான். 'ஓவியம் ஏன் இப்படிக் கனக்கிறது!' என்று யோசித்தபடி ''போய் வருகிறேன் சார்'' என்றான்.

''சொன்னதெல்லாம் நினைவிருக்கட்டும்'' என்று மறுமுறை நினைவுறுத்தினார். கோபி ஊரைச் சுற்றி அந்தக் குடிசையைக் கண்டு பிடித்தான். பெரியவர் சொன்னபடியே சிவப்பு லுங்கி, பச்சைப் பனியன் அணிந்த மீசைக்காரன் நின்றுகொண்டிருந்தான். அவன் கோபியைக் கேள்விக் குறியுடன் நோக்கினான். அவனிடம் ஓவியத்தைக் கொடுத்தான் கோபி. லுங்கிக்காரன் ஓவியத்தைப் பெற்றுக் கொண்டு ஒரு சீட்டைக் கோபியிடம் கொடுத்துவிட்டு வேகமாகச் சென்று விட்டான். கோபி சீட்டைச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு யோசனையுடன் நடந்தான்.

'இப்படியே ஓடிவிட்டால் என்ன? இந்தப் பெரியவர் நல்லவர் போல் தெரியவில்லையே! என்ன நடக்கிறது என்பதும் புரியவில்லை. திருட்டா? கள்ளக் கடத்தலா? புரியவில்லையே! என்ன மர்மமோ? கடவுளே! போலீஸ், அது, இது என்றால் யார் பதில் சொல்வது? பெரியவரைப் பற்றிப் போலீஸில் சொல்லி விடலாமா? சேச்சே, ஆதாரம் இல்லாமல் எதுவும் சொல்ல முடியாதே! சரி, எப்படியும் இன்னும் இரண்டு தினங்கள் பொறுத்திருந்து பார்க்கலாம். பிறகு ஏதாவது விஷயம் தெரியாமலா போய் விடும்?' இப்படி யோசனை செய்தபடி பங்களாவை அடைந்தான் கோபி.

அங்கே பெரியவர் நின்று கொண்டிருந்தார். கோபியைக் கண்டதும் புன்னகையுடன், ''வா, தம்பி, வா'' என வரவேற்றார். கோபி சீட்டைப் பெரியவரிடம் கொடுத்தான். பெரியவர் கோபியின் முதுகில் தட்டியபடி, ''பலே, நீ கெட்டிக்காரன். உள்ளே வா'' என அழைத்துச் சென்றார்.


''தம்பி! முதல் தேர்விலேயே நீ பாஸாகி விட்டாய். நான் சொன்ன வேலையை நீ ஒழுங்காகச் செய்கிறாயா அல்லது ஏதாவது சூழ்ச்சி செய்கிறாயா, ஏமாற்றி விட்டு ஓடிவிடுகிறாயா என்று உன் பின்னால் ஆள் அனுப்பிச் சோதனை செய்து பார்த்தேன். கெட்டிக்காரத்தனமாய் நடந்து நீ வென்றுவிட்டாய். இனிமேல்தான் உனக்கு உண்மையான பெரிய வேலை தரப் போகிறேன். போய்க் கீழ் அறையில் படுத்துத் தூங்கு. நாளை இரவு உனக்கு என்ன வேலை என்று சொல்கிறேன். சரிதானே'' என்றார்.


கோபி தலையசைத்து விட்டுப் படுக்கச் சென்றான். மறுநாள் அவனுக்கு ராஜ உபசாரம் நடந்தது! அந்தப் பெரிய பங்களாவில் பெரியவரைத் தவிர வேறு யாருமில்லை. எல்லோரும் வேலையாட்கள்தான். சமையல்காரர் கோபியை நன்றாகக் கவனித்து உணவு படைத்தார். அன்று காலை பெரியவர் எங்கேயோ அவசரம் அவசரமாக வெளியேறினார். கோபி பொழுது போகா

''நம்ப மணி வம்பை விலைக்கு வாங்கவே மாட்டான்.''

''ஓ! அதுவும் ஓசிதானா?''

-ஏ. வி. தேவன்





"இவதான் என் தங்கை. இவளுக்கு டிராயிங் என்றால் ரொம்ப இஷ்டம்."
-குமார்

மல் பங்களாவைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினான். வேலையாட்கள் பகல் உணவு உண்டு பின் கண்ணயர்ந்தனர். 'பெரியவர் இரவு ஏழு மணிக்குத்தான் வீடு திரும்புவார்' என்று வேலையாட்கள் பேசிக் கொண்டதைக் கவனித்தான் கோபி. அதனால் அவன் பயமின்றிப் பெரியவர் அறைக்குச் சென்றான். ''பட்! பட்!'' என்று அடித்துக்கொள்ளும் மார்பை நீவிவிட்டபடி சுற்று முற்றும் நோக்கினான். யாருமில்லை.

அறைக்குள் நுழைந்த கோபி மெள்ளக் கதவைச் சாத்திக் கொண்டான். பெரியவர் ஓவியம் எடுத்துக் கொடுத்த பெட்டி அங்கே இருப்பதைக் கண்டு அதைத் திறந்தான். அதற்குள் ஓர் ஓவியம் இருந்தது. அதுவும் ஒரு பெண்ணின் ஓவியம்தான்! கோபி ஓவியத்தை இப்படியும் அப்படியுமாகத் திருப்பிப் பார்த்தான். ஓவியத்தின் பின் ஒரு சிறு வளையம் காணப்பட்டது. கோபி வியப்புடன் அந்த வளையத்தைத் திருப்பினான். ஓவியத்தின் பிரேம் கழன்றது. கோபி பயம் மேலிட அங்குள்ள ஸ்டூலின் மேல் ஓவியத்தை வைத்துவிட்டுத் தனித் தனியாகப் பிரித்துக் கழற்றினான்.

என்ன அதிசயம்! ஓவியத்தின் பின்புறத்தில் மின்னின இரு வைரங்கள்! ஆம்! வைரமேதான்! கோபி பழையபடி ஓவியத்தைப் பிரேமில் இணைத்துப் பெட்டியிலேயே வைத்துவிட்டு கதவைத் திறந்து கொண்டு, வேகமாகக் கீழே இறங்கித் தன் அறைக்குச் சென்றான்.

உடல் பயத்தால் வெட வெடத்தது. தன் கோபமும், பிடிவாதமும் எவ்வளவு தூரம் கொண்டு வந்து விட்டது என நினைக்கும்போது கண்ணீர் பெருகியது. 'எவ்வளவு பெரிய கடத்தல்காரர்களிடம் சிக்கிவிட்டோம்' என நினைத்து வருந்தினான். பேசாமல் அம்மா போடும் பழைய சோற்றைத் தின்றுவிட்டுப் பள்ளிக்குச் சென்று படித்து, நிம்மதியாக இருந்திருக்கலாமே! நம் பெற்றோர்களின் அன்புக்கு ஈடாக எதுவுமே இல்லை. எதுவும் நேர் வழியில் கிடைத்தால்தான் இனிக்கும். அநியாய வழியில் பாசம் கிடைத்தாலும் அது வேம்பாகக் கசக்கத்தானே செய்கிறது? நம் நிலைமைக்குத் தக்கபடிதான் ஆசைப்படவேண்டும். நிலைமைக்கு மீறி ஆசைப்பட்டால், அது நேர் வழியில் கிடைக்காது. ஆசை ஆபத்தை வரவேற்கும் காந்தம். 'அதிக ஆசை அதிக கஷ்டம்'. என்றுமே கஷ்டப்பட்டு உண்மையாக உழைத்தால்தான் பெருமை. அதுதான் நிலைக்கும். நிம்மதி தரும்' இப்படி நினைத்து நினைத்துக் கண்ணீர் வடித்தான் கோபி.

அவனுக்கு அங்கு இருக்கவே பிடிக்கவில்லை. 'எப்படியாவது இங்கிருந்து தப்பிவிட வேண்டும். எப்படித் தப்புவது? பெரியவர் ஆள் வைத்துக் கவனிப்பாரே' எனப் பயந்தான்.

ஏதோ ஒரு தைரியத்தில் ஓடிவந்து விட்டாலும் கோபிக்கு இதெல்லாம் புது அனுபவமாகவும் பயமாகவும் இருந்தன. மீண்டும் தாய் தந்தையரைக் காண்போமா என ஏங்கினான். பழைய நினைவுகள் வந்து அவனை வாட்டின. அப்பா அம்மா தன்னைக் காணாமல் எப்படிக் கண்ணீருடன் பட்டினி கிடக்கிறார்களோ என்று எண்ணியபடி கண்ணீர் வடித்தான்.

கோபிக்கு நேரம் சென்றதே தெரியவில்லை. மணி நான்கு. காப்பி நேரம்.

கோபியின் அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான் சமையல்கார அப்பு. ''கோபி, இந்தாப்பா பலகாரமும், காப்பியும்'' என்று கூறியபடி அவன் முன் பலகாரத் தட்டையும் காப்பியையும் வைத்தான்.

''எனக்கு ஒன்றும் வேண்டாம். பசி இல்லை'' என்று மறுத்தான் கோபி.

''இந்தக் காப்பியையாவது குடி தம்பி'' என்றான் அப்பு.

கோபி வேண்டா வெறுப்பாக அப்பு ஆற்றிக் கொடுத்த காப்பியை வாங்கிப் பருகினான். அப்பு டிபன் தட்டுடன் வெளியேறினான். கோபி அவனையே நோக்கினான்.

நல்ல சாப்பாடின்றிச் சதா பழைய சோறும் அரைப் பட்டினியுமாகக் கிடந்ததால்தானே வீட்டையும் பெற்றோரையும் வெறுத்து ஓடி வந்தான்? இப்

போது அவன் விரும்பிய அறுசுவை உணவு அவனைத் தேடி வரும்போது, அதை வெறுத்து ஓட விரும்புகிறான். நல்ல வேடிக்கை!

இரவு எட்டு மணிக்குப் பெரியவர் வந்தார். அவர் இரவு ஆகாரத்தை முடித்துக் கொண்டு கோபியைத் தம் அறைக்கு அழைத்தார்.

''கோபி, இந்தா, இதில் உனக்கு மூன்று செட் உடை இருக்கிறது. வாங்கிக்கொள். டாப் டிரஸ் மாடல்! இங்கு உனக்கு வேண்டியது எல்லாமே கிடைக்கும்'' என்றபடி ஒரு பார்சலை அவனிடம் கொடுத்தார். கோபி தயங்கினான். ''வேண்டாம் சார்'' என்றான்.

''அடேடே! இதென்ன, இப்படிக் கூச்சப்படுகிறாய்? பரவாயில்லை, வாங்கிக்கொள்'' என்று அவன்கையில் வலுக்கட்டாயமாகப் பார்சலைத் திணித்தார். பிறகு ''போய், இந்த டிரஸ் உனக்குப் பிடித்திருக்கிறதா என்று பார்த்துச் சொல்'' என்றார்.

கோபி வேண்டா வெறுப்பாகப் பார்சலை வாங்கிக் கொண்டு தன் அறைக்குச் சென்று உடையை மாற்றிக்கொண்டான். நினைவாகத் தன் உடைகளை ஒரு பையில் திணித்து வைத்துக்கொண்டான். பிறகு கண்ணாடியில் தன் உருவத்தை நோக்கினான். அவன் உருவமே மாறி விட்டது போலத் தோன்றியது. ஆனால், கந்தல் உடையில் இருந்த முகக் களை, அழகு, இப்போது இல்லை. ஏதோ ஒரு பயமும் ஏக்கமும் அவன் முகத்தில் நிழலாடின.

''கோபி'' என்ற அழைப்புக் குரலைக் கேட்டதும் தன் நினைவுக்கு வந்தவனாக மாடிக்கு விரைந்தான்.

''அட பயலே! ரொம்ப ரொம்பப் பொருத்தமாக இருக்கிறதே உனக்கு இந்த உடை!'' என்று புகழ்ந்த பெரியவர், ''சரி, இன்று இரவு நீ ஒரு இடத்துக்குப் போக வேண்டும். ரெடியா இரு... ஆமாம், நீ சாப்பிட்டாயா?'' என்று கேட்டார்.

''இல்லை'' என்றான் கோபி.

''ஏன் சாப்பிடவில்லை?'' என்றார்.

''வயிறு சரியில்லை'' என்று பொய் சொன்னான்.

''மாத்திரை தருகிறேன். சாப்பிடுகிறாயா?''

''இல்லை. பட்டினி இருந்தால் சரியாகிவிடும்.''

''டேய் அப்பு'' என்று குரல் கொடுத்தார் பெரியவர். அப்பு ஓடிவந்தான். ''போய் சோடா வாங்கி வந்து கோபிக்குக் கொடு'' என்றார்.

அப்பு ஓடிச் சென்று சோடா வாங்கி வந்து கோபியிடம் கொடுத்தான். கோபி தயங்கியபடி சோடாவைக் குடித்தான். அப்பு கீழே சென்றதும் கதவைத் தாளிட்ட பெரியவர் பிறகு கோபியை நோக்கி ''என்னுடன் வா'' என்றபடி அங்கே மறைவாக இருந்த ஒரு சிறு அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கே கிடந்த அழகிய தரை விரிப்பை அகற்றினார். கீழே மறைவாக இருந்த ஒரு குமிழைத் திருகினார். என்ன ஆச்சரியம்! குமிழைத் திருகியதும் கீழே ஒரு கதவு திறந்தது. அதன் உள்ளே படிக்கட்டுகள் தெரிந்தன. கோபிக்கு வியப்பினால் கண்கள் விரிந்தன. 'இது மாதிரி காட்சியெல்லாம் சினிமாவில் தானே வரும்? இந்தப் பெரியவர் படே ஆளாக இருப்பார் போலிருக்கே' திறந்த வாயை மூடவும் மறந்தவனாக நின்றான் கோபி.


''என்னடா அப்படிப் பார்க்கிறாய்? இங்கே என்னுடன் வா'' என்று கூறியபடி படிக்கட்டுக்களில் இறங்கினார். கோபி அவரைப் பின்தொடர்ந்தான். பத்துப் படிக்கட்டுகள் இறங்கியதும் ஒரு கதவு தெரிந்தது.

அதே சமயம் பளிச்சென்று பிரகாசமான விளக்குகள் எரிந்தன. கோபி கண்களைக் கூச வைத்த விளக்குகளைப் பாராமல், முகத்தைத் திருப்பிக் கொண்டு சமாளித்தபடி பெரியவரைப் பின்தொடர்ந்தான். அவர் அங்குள்ள ஓர் அறைக்குள் சென்றார். கோபி

தந்தை: ஏண்டா எறும்பு வரிசையைப் பார்த்துக்கொண்டு எங்கேடா போகிறாய்?

மகன்: அம்மா காலையில் செய்த தின்பண்டங்களை எங்கே வைத்திருக்கிறாள் என்று கண்டுபிடிக்கிறேன்.

-வி. ஏ. சண்முகானந்தம்





தொடர்ந்தான். அந்த அறையில் சிறிதும் பெரிதுமாக பல பெட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. வியப்புடன் அப்பெட்டிகளை நோக்கினான் கோபி. பெரியவர் கோபியிடம், ''கோபி, இதோ பார், இந்தப் பெட்டியில் என்ன இருக்கிறது, தெரியுமா?'' என்று கேட்டார். கோபிக்குச் சிரிப்பு வந்தது. அந்தப் பெட்டியில் என்ன இருக்கிறது என்று அவனுக்கு எப்படித் தெரியும்? அவன் இப்போதுதானே அந்தப் பெட்டிகளைப் பார்க்கிறான்? ''தெரியாதே'' என்று கூறியபடி பெரியவரை ஆவலுடன் நோக்கினான்.

''நல்லது. முக்கியமான சில பொருள்கள் அடங்கிய பெட்டி. அதாவது நம் வாழ்க்கைக்கு மிகத் தேவையான பொருள்கள் அடங்கியுள்ளன. எல்லாமே மிக விலை உயர்ந்த பொருள்கள், பேனா, கடிகாரம், உயர் வகைத் துணிகள், ரேடியோ, டேப், டி.வி. இப்படிப் பல பொருள்கள் உள்ளன. இவைகளையெல்லாம் வெளிநாட்டிலிருந்து கடத்தி வந்து அதிக விலைக்கு விற்றால் நல்ல லாபம். இங்கு அந்த வியாபாரம் தான் நடக்கிறது. ஆனால், இது யாருக்கும் தெரியக் கூடாது. ஒரு சிலர்தான் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள். இப்போது அவர்களில் நீயும் ஒருவனாகி விட்டாய். உன்னை நான் நம்புகிறேன். நீயும் என்னிடம் உண்மையாக நடந்து கொண்டு இந்தப் பொருள்களைக் கொஞ்சம் கொஞ்சமாக நான் குறிப்பிடும் இடங்களில் கொடுத்து விட்டு வர வேண்டும். வாரத்தில் மூன்று, நான்கு நாட்கள் மட்டும்தான் நீ இந்த வேலையைச் செய்ய வேண்டும்'' என்றவர் தொண்டையைக் கனைத்தபடி,

''நீ தவறி யாரிடமாவது இதைப் பற்றி மூச்சு விட்டாயோ, உன்

மூச்சு நின்றுவிடும்! தெரியுமா?'' என்று பயமுறுத்தியபடி கூறிவிட்டுக் கோபியை உற்றுக் கவனித்தார்.

கோபி பயத்தை மறைத்துக் கொண்டு சமாளித்தபடி முகத்தை மலர வைத்துக் கொண்டு, ''சரி சார், நான் ஜாக்கிரதையாக நடந்து கொள்வேன்'' என்றான்.

''நீ ஓடிப் போனாலோ அல்லது யாரிடமாவது இந்த ரகசியங்களைச் சொன்னாலோ உன்னைக் கவனித்து வரும் என் ஆள் உன்னைத் தீர்த்துக் கட்டி விடுவான்! ஆதலால், நீ நல்ல பிள்ளையாக நான் சொல்வதைக் கேட்டுக் கொண்டு உனக்கு வேண்டிய வசதிகளைப் பெற்றுக் கொள்'' என்று கண்டிப்புடன் கூறினார்.

''சரி, சார். அப்படியே செய்கிறேன்'' என்றான்.

பெரியவர் புன்னகையுடன் தலை அசைத்து விட்டு ஒரு பெட்டியை உடைத்தார். பெட்டியிலிருந்து ஒரு தோல் பையை எடுத்தார். அதிலிருந்த ஒரு வெண்கலச் சிலையை எடுத்தார். அதை ஒரு துணியால் துடைத்து விட்டுச் சில காகிதங்களை எடுத்து அந்தச் சிலையைச் சுற்றி, ஒரு நாடாவால் கட்டினார். ஓர் அழகிய தோல் பைக்குள் அந்தச் சிலையை வைத்து மூடினார். அதைக் கோபியிடம் கொடுத்தார்.

''இதோ பார், இந்த ஊர் ரயில் நிலையத்திற்குப் பக்கத்திலே 'சிவா நிலையம்' என்ற போர்டுடன் ஒரு கட்டடம் இருக்கும். அங்கு நீ நேராகச் செல்ல வேண்டும். வாசலில் இருக்கும் 'காலிங் பெல்லை' ஆறுமுறை 'பிரஸ்' செய்ய வேண்டும். நிறுத்தி நிறுத்தி ஆறுமுறை! இப்போது ஒரு கண்ணாடிக்கார அம்மாள் வருவாள். ''சௌக்கியமா?'' என்பாள். நீ தலை அசைத்துவிட்டு, இந்தத் தோல் பையை அவளிடம் கொடுத்துவிட்டு, அந்த அம்மாள் கொடுக்கும் சீட்டை வாங்கிக் கொண்டு வரவேண்டும். நினைவிருக்கட்டும் ஜாக்கிரதை!'' என்றார்.

''சரி, சார். இப்போதே கிளம்புகிறேன்'' என்றான்.

இருவரும் பழையபடி பெரியவரின் அறைக்கு வந்தனர். பழையபடி தரை விரிப்பைச் சீராக்கினார்.

''நீ போய் வா கோபி. சொன்னது நினைவிருக்கட்டும்'' என்றார், எச்சரிக்கும் குரலில். கோபி தலை அசைத்தபடி ஏதோ ஒரு தீர்மானத்துடன் கிளம்பினான். வெளியே செல்லும் முன் யாருக்கும் தெரியாமல் தன் பழைய உடைகள் வைத்திருந்த பையையும் எடுத்துக் கொண்டு வேகமாக நடந்தான். அவன் பெரியவர் கூறியபடி ரயில் நிலையம் நோக்கிச் செல்லவில்லை. வேறு திசையாகக் கால் போன போக்கில் நடந்தான். ஒரு பெரிய மரத்துப் பக்கம் நின்றான். தன் புது ஆடைகளைக் களைந்து விட்டுப் பையிலிருந்த பழைய ஆடைகளை அணிந்து கொண்டான். கையிலுள்ள தோல் பையை ஒரு புதரில் வீசி எறிந்தான். புது ஆடைகளைச் சுருட்டி ''ஏ ஆடைகளே, நீங்கள் திருட்டுவழியில் வந்தவை. ஆதலால் நீங்கள் எனக்குத் தேவையில்லை'' என முணுமுணுத்தபடி வீசி எறிந்தான்.


அதேசமயம், ''டேய்'' என்ற அதட்டல் ஒலி எங்கிருந்தோ வந்தது. கோபி தாமதிக்காமல் வேகமாக ஓட ஆரம்பித்தான். தொடர்ந்து அவனை யாரோ விரட்டிக் கொண்டு ஓடிவருவதை உணர்ந்து இன்னும் வேகமாக ஓடினான். நல்ல வேளையாகக் கோபி ஓடும் பாதையில் விளக்கு வெளிச்சம் இல்லை. ஓடினான், ஓடினான், ஓடிக் கொண்டே இருந்தான்.

ஒரு முரடன் விடாமல் கோபியைத் துரத்தினான். எங்கிருந்தோ திடீரென்று ஹாரன் ஒலியும் அதைத் தொடர்ந்து போலீஸ் விசில் சப்தமும் கேட்டது. முரடன் நின்றான். 'போலீஸ்' என்று நினைத்துப் பயந்தபடி கோபியை விட்டு விட்டுத் திரும்பி, வந்த வழியே ஓடினான்.

''தம்பி, நீ படிக்கிற பள்ளியின் பெயர் என்ன?

''இதெல்லாம் பரீட்சைக்கு வராது. அதனாலே எனக்குத் தெரியாது''

-எஸ். தர்மலிங்கம்



முரடன் ஓடிவிட்டதை அறியாத கோபி கண்மண் தெரியாமல் ஓடிக் கொண்டிருந்தான். அவன் மட்டும் அவர்கள் கையில் சிக்கினால், அவ்வளவுதான்! கோழிக் குஞ்சை நசுக்குவது போல் கொன்று விடுவார்கள். கோபிக்கு மூச்சு இரைத்தது. வியர்வை ஆறாகப் பெருகியது. கால்கள் துவண்டன. உடல் சோர்ந்தது.

ஓடவும் முடியவில்லை. நிற்கவும் பயம். கோபி நிற்கவில்லை. கல், முள் என்று பாராமல் ஓடினான்!

'சே! எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டேன்! வீட்டோடு கிடக்காமல் ஓடிவந்து இந்தப் பாடுபட வேண்டுமா! கடவுளே! வீட்டையும், பெற்றவர்களையும் துறந்து ஓடும் சிறுவர்களுக்கு என் அனுபவம் ஒரு நல்ல பாடமாக அமையும். எதுவாக இருந்தாலும் மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு அமைதியாக இல்லாமல் ஆத்திரத்தில் வீட்டை விட்டு ஓடி வந்ததற்குக்கடவுள்நல்லதண்டனையைக் கொடுத்து விட்டார். இனியாவது நல்லபடியாக இருப்பேனா, அல்லது துன்பங்கள் தொடருமா? துன்பம் தொடருகிறதோ இல்லையோ, இந்த முரடன் என்னைத் தொடர்கிறானே!' என்று எண்ணியபடி ஓடினான்.

மிக அருகில் ஒரு மாடு வரும் சத்தம் கேட்டது. முரடன்தான் வந்து விட்டதாக எண்ணிய கோபி மேலும் வேகமாகக் காற்றாகப் பறந்தான். அவன் கண்கள் இருண்டன. ஒரு கல் தடுக்கிக் கீழே விழுந்தான்! பயந்தபடி பின்னால் நோக்கினான். ஒரு மாடுதான் வருகிறது, முரடன் இல்லை என்பதைப் புரிந்து கொண்டான். பயம் கொஞ்சம் தெளிந்தவனாக மெதுவாக எழுந்து நிதானமாக நடந்தான். இருள் சூழ்ந்த அந்த இடத்தில் பாதை தெரியவில்லை. எங்கேயோ கார் 'ஹார்ன்' சப்தமும், தொலைவில் கார் போகும் ஒலிகளும் கேட்டன.

மெதுவாக மரங்களிடையே மறைந்து மறைந்து ஒலி வரும் திசையை நோக்கி நடந்தான். ஒரு வழியாகச் சாலையை அடைந்து விட்டான். எந்த வழியாக எங்கே செல்வது எனப் புரியாமல் விழித்து நின்றான் கோபி. பின்பு கடவுள் விட்ட வழியெனக் கால் போன திசையில் நடக்க ஆரம்பித்தான். நடந்து நடந்து கால்கள் கனத்தன. 'இந்தப் பாதைக்கு முடிவே கிடையாதா?' என எண்ணிய



தாத்தா: டேய் சோமு, ராமு அழுறானே, நீ அவனை அடிச்சியா?

சோமு: அவன்தான் தாத்தா என்னை முதலிலே திருப்பி அடிச்சான்.

-எஸ். தேவாதிராஜன்

படி நடந்தான். கால்கள் கெஞ்சின. களைப்பால் முகம் வாடியது. துக்கத்தால் நெஞ்சு அடைத்தது. பயத்தால் மார்பு படபடத்தது. 'உயிரோடு பெற்றவர்களை அடைவோமா?' என்று வருந்தியபடி கீழே ஓரமாக உட்கார்ந்தவன் மயக்கத்துடன் படுத்துவிட்டான்.

கோபி கண்விழித்த போது ஒரு குடிசையில் படுத்திருப்பதை உணர்ந்தான்.

மெள்ள எழுந்து சுற்றுமுற்றும் பார்த்தான். அங்கே அவன் எதிரில் அவனைப் போலவே ஒரு சிறுவன் நின்று கொண்டிருந்தான். அவனருகே ஓர் அம்மாளும் நின்றாள். இருவரும் கோபியைக் கவனித்தனர். கோபி கண் விழித்ததும் முக மலர்ச்சியுடன் ''தம்பி எழுந்து விட்டாயா? உன் பெயர் என்னப்பா?'' என்று அன்புடன் வினவினாள் அந்த அம்மாள்.

கோபி திருதிருவென விழித்தபடி, ''நான் எங்கே இருக்கிறேன்? எப்படி இங்கே வந்தேன்?'' என்று புரியாமல் வினவினான். அப்போது அச்சிறுவன் கோபியின் அருகில் வந்து, ''தம்பி, நீ நேற்றிரவு பாதை ஓரத்தில் விழுந்து கிடந்தாய். என் அப்பா விறகு வெட்டிக் கொண்டு வரும் வழியில் உன்னைப் பார்த்தார். உன்னை விறகு வண்டியில் தூக்கிப் போட்டுகொண்டு இங்கே வந்து விட்டார்!'' என்று விளக்கினான்,

''அப்படியா? உன் பெயர் என்ன?'' என்றான் கோபி.

''என் பெயர் ராஜன். உன் பெயர் என்ன?'' என்று திருப்பிக் கேட்டான் அச்சிறுவன்.

''கோபி'' என்றான்.

அந்தம்மாள் உள்ளே சென்று 'காப்பி' எடுத்து வந்து கோபிக்கும் ராஜனுக்கும் கொடுத்தாள். பிறகு ''ராஜா, அந்தத் தம்பிக்கு வெந்நீர் போட்டு வச்சிருக்கேன். போய்க் குளிக்கச் சொல்லு. நான் உங்களுக்குச் சாப்பாடு எடுத்து வைக்கிறேன்'' என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள்.

''கோபி, நீ எந்த ஊர்? நீ எப்படி மயக்கமாகி ரோட்டில் விழுந்து கிடந்தாய்?''' எனப் பிரியமாக வினவினான் ராஜன்.

கோபி உண்மையைக் கூற முதலில் தயங்கினான். பின் ராஜனை நோக்கினான். அவனைக் காணும் போது, தன் உடன் பிறந்த சகோதரனைப் பார்ப்பது போன்ற உணர்வே ஏற்பட்டது. தயக்கத்தை விட்டுத் தன் கதையை, தன் நிலையை வெட்கத்துடனும், துக்கத்துடனும் கண்ணீர் பெருகக் கூறிவிட்டு விக்கி விக்கி அழுதான். ராஜன் ஆதரவாகக் கோபியைத் தழுவினான். ''கோபி, உன்னைப் பற்றிய விஷயங்களை நீ ஒளிவு மறைவில்லாமல் கூறியது உன் நல்ல குணத்தையே காட்டுகிறது. சந்தர்ப்பம் உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கி விட்டது. நாம் பிறகு விவரமாகப் பேசிக் கொள்ளலாம். குளித்து விட்டுவா. சாப்பிடலாம்'' என்று வாஞ்சையுடன் கூறினான்.

கோபி ராஜனின் குடிசைக்கு வந்து ஒரு வாரம் ஆகிவிட்டது. ராஜன் ஏழைச் சிறுவன். காட்டில் விறகு வெட்டி விற்கும் முத்தையனின் ஒரே மகன். தந்தையின் வரும்படி போதாததால் தானும் கூலி வேலை செய்து வந்தான். அவனுக்குப் படிக்கவேண்டுமென்ற ஆசை இருந்தும், வசதி இல்லை. அவ்வூர்ப் பெரியவர் ஒருவர் ஏழைக் குழந்தைகளின் வசதிக்காக இரவுப் பள்ளி ஒன்றை நடத்தினார். ராஜன் பகலில் கூலி வேலை செய்துவிட்டு இரவில் அப்பள்ளியில் பயின்று வந்தான். ராஜனின் குணம், பணிவு, எல்லாமே கோபிக்குப் பிடித்துவிட்டன. தாய் தந்தையரின் மேல் உயிரையே வைத்திருந்தான் ராஜன். அவன் பெற்றோர்களிடம் பயபக்தியுடன் இருப்பதைக் கண்டு வெட்கித் தலைகுனிந்தான் கோபி. தன் தாய், தந்தையரையும், ஆசிரியரையும் எவ்வளவு கேவலமாகப் பேசியிருக்கிறான்! நினைக்க நினைக்கக் கோபிக்குத் தன் மீதே வெறுப்பு ஏற்பட்டது. தனக்கு நல்ல சோறும், துணியும் இல்லையே என்று கவலைப்பட்டானே தவிர தனக்காகத் தியாகம் செய்யும் பெற்றோர்களைப் பற்றி ஒருநாளும் சிந்தித்துப் பார்த்ததில்லை.

இருக்கும் சோற்றைத் தனக்குப் போட்டுவிட்டு, எத்தனை நாட்கள் தன் தாயும், தந்தையும் பட்டினி கிடந்திருக்கிறார்கள். ஒரு காப்பி கூட அப்பா வெளியில் வாங்கிக் குடிப்பதில்லையே! அவர்களுக்காக ஒரு தினமாவது கவலைப்பட்டதுண்டா? 'தீபாவளி' என்றால் எப்படியோ கஷ்டப்பட்டுக் கடன் வாங்கித் தனக்கு ஒன்றும் வாங்கிக் கொள்ளாமல் மகனுக்கு ஆசையுடன் நிஜார், ஷர்ட் வாங்கித் தந்த தந்தையை நினைத்துப் பார்த்தான்.

வாடி வதங்கிய முகத்துடன் பழைய ஒட்டுப் போட்ட புடவை, ரவிக்கையில் இருக்கும் தாயை நினைத்தான்.


'எந்தக் கஷ்டம் வந்தாலும் சமாளித்து மகனைப் படிக்க வைக்கவேண்டும்' என்று ஒரே லட்சியத்துடன் பாடுபட்ட அப்பா, அம்மாவை நினைத்து நினைத்துக் கண்ணீர் வடித்தான்.

"அந்தக் கார்க்காரன் நிச்சயம் அடிபட்டுத்தான் சாகப்போறான்."

"ஏண்டா...?

"நம்மை மாதிரி ஓரமாப் போகாம நடு ரோட்டிலே போறான் பாரு."

-ஆர். எஸ். சுப்பிரமணியன்



ராஜன் அவன் கண்ணீரைத் துடைத்தபடி ''கோபி வருந்தாதே, எல்லாம் நல்லதாகவே முடியும்'' என்றான்.

''ராஜன், நாளையிலிருந்து நானும் உன்னுடன் கூலி வேலை செய்ய வரட்டுமா?''

''கோபி! நீ உன் தாய் தந்தையரைப் பார்க்கப் போகவில்லையா?''

''நான் எந்த முகத்துடன் அவர்களிடம் போவேன்? குடும்பக் கஷ்டம் தெரியாத முரடனாக என் பெற்றோரை வதைத்து விட்டேன். இனி அவர்களுக்குப் பாரமாக நான் இருக்க மாட்டேன். நானும் கூலி வேலை செய்வேன். கூடுமான வரை பணம் சேர்த்து என் தாய்க்கு அனுப்புவேன்'' என்றான் உறுதியான குரலில்.

ராஜன் சிரித்தான். ''கோபி நீ தங்கமானவன். நல்ல மனசு உனக்கு. கோபமும் இல்லாமையும் தான் உன்னைக் கெடுத்து விட்டன என்று நினைக்கிறேன். சரி, இன்று செய்தித்தாளில் ஒரு பெரிய விஷயம் வந்துள்ளது பார்க்கிறாயா?'' என்றபடி அன்றைய செய்தித்தாளைக் கொடுத்தான். கோபி பேப்பரை வாங்கி அதில் உள்ள தலைப்புச் செய்தியைக் கண்டு திடுக்கிட்டான்.

''பத்து லட்சம் பெறுமானமுள்ள வைரங்கள் கடத்தல். கடத்தல்காரத் தலைவன்பொன்னப்பன் பிடிபட்டான்'' என்ற தலைப்புடன் பெரிய அளவில் பொன்னப்பன் என்ற அந்தப் பெரியவரின் புகைப்படமும் வெளிவந்துள்ளதைக் கவனித்தான் கோபி. ''இதில் சம்பந்தப்பட்ட ஆறுமுகம் என்பவரும் மற்றும் சிலரும் பிடிபட்டனர். இருந்தும், இன்னும் சில கடத்தல் பொருட்கள்இவர்களிடம் இருப்பதாகத் தெரிகிறது. எங்கு மறைத்து வைத்துள்ளனர் என அறியப் பெரிய அதிகாரிகள் முயன்று வருகிறார்கள். மேலும் இதுபற்றித் தகவல் தெரிந்தவர்கள் போலீசில் தெரிவித்தால் சன்மானம் தரப்படும்'' என்று அறிவிப்பும் காணப்பட்டது.

கோபி நடுநடுங்கி விட்டான். நல்ல வேளை! அவன் இந்நேரம் அங்கிருந் திருந்தால், அவனும் அல்லவா ஜெயிலுக்குப் போயிருக்க வேண்டும்? கோபிக்கு ஒரு நல்ல யோசனை தோன்றியது. 'இதுவரை நாம் யாருக்கும் நன்மை செய்ததில்லை. இனியாவது நம் அரசாங்கத்திற்கு ஒரு உதவி செய்யவேண்டும்'' எனத் தீர்மானித்தவனாக ராஜனை நோக்கி, ''ராஜன், நாம் உடனே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போக வேண்டும். எனக்குத் தெரிந்த சில ரகசியங்களைப் பெரிய அதிகாரிகளிடம் கூறப் போகிறேன். நான் செய்த தவறுக்கெல்லாம் பரிகாரமாக நல்ல காரியத்தைச் செய்யப் போகிறேன்'' என்று படபடப்புடன் உறுதியான குரலில் கூறினான்.

ராஜனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. கோபி ராஜனிடம் தன் கதையைச் சொன்னபோது யாரோ ஒரு கடத்தல்காரரிடம் சிக்கிக் கொண்டு, பிறகு தப்பி ஓடிவந்து, வழியில் மயங்கி விழுந்ததை மிகவும் சுருக்கமாகக் கூறியிருந்தான். விவரமாகக்

★★★★★★★★★★★★★★★★★★



"குழந்தை ஏன் அழறான்?"

"பூச்சாண்டி வரப்போறான்னு பயங் காட்டினேன். பூச்சாண்டியைக் காட்டுன்னு அழுது அடம் பிடிக்கிறான்"

-அ. கிருஷ்ணசங்கர்

★★★★★★★★★★★★★★★★★

கூறவில்லை. ''உனக்கு இந்தக் கும்பலைப் பற்றித் தெரியுமா கோபி?'' என்று வியப்புடன் வினவினான் ராஜன்.

''தெரியும் ராஜன். நான் அதைப் பற்றி உன்னிடம் விவரமாகக் கூறவில்லை. இப்போது நீ சீக்கிரம் கிளம்பு. நாம் உடனே கிளம்பினால் தான் நல்லது'' என்று விரைந்தான் கோபி.

கோபியும், ராஜனும் போலீஸ் நிலையத்தை அடைந்ததும் ''கமிஷனரைப் பார்க்க வேண்டும்'' என்றனர். எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. இந்தப் பொடிப் பயல்கள் எதற்குப் பெரிய அதிகாரியைப் பார்க்க விரும்பு



கிறார்களெனப் புரியாமல் திகைத்தனர். ஒரு போலீஸ்காரர் கோபியை அதட்டினார். ''போ தம்பி, இப்போ ஐயாவைப் பார்க்க முடியாது'' என்று விரட்டினார்.

''நான் முக்கியமான விஷயம் ஒன்று அவரிடம் சொல்லவேண்டும். வைரக் கடத்தல் விஷயம்'' என்று தெரிவித்தது தான் தாமதம், எல்லோரும் அவர்களைப் பலமான உபசாரத்துடன் கமிஷனர் அறைக்கு அழைத்துச் சென்று பெரிய அதிகாரியின் முன்னால் நிறுத்தினர்.

கோபி பெரிய அதிகாரிக்குத் தன் வணக்கத்தைத் தெரிவித்து விட்டுத் தான் வந்த விஷயத்தை ஒன்றுவிடாமல் கூறினான். அதிகாரி மிகக் கவனமாக அவன் கூறுவதைக் கேட்டார். நடுவில் அவனைத் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தி விஷயத்தை நன்றாகத் தெரிந்து கொண்டார். பிறகு, ''தம்பி! உனக்கு அந்தக் கடத்தல் பொருட்கள் எங்கே இருக்கின்றன என்று தெரியுமா?'' என வினவினார்.

''ஓ! தெரியுமே! அந்தப் பெரியவர் பொன்னன் பங்களாவின் மாடியிலுள்ள ரகசிய அறையில் உள்ளன'' என்றான்.

''நீ என்னுடன் வந்து அந்த ரகசிய அறையைக் காட்டுகிறாயா?'' என்றார்.

''ஓ! இப்போதே போகலாம், வாருங்கள்'' என்று சுறுசுறுப்பாகக் கூறினான். கமிஷனர் இரண்டு கான்ஸ்டபிள்களை அழைத்துக் கொண்டு கோபு, ராஜனுடன் ஜீப்பில் கிளம்பி விட்டார். பங்களாவில் நுழைந்தவுடனே கோபி எல்லோரையும் மாடிக்கு அழைத்துச் சென்றான். பெரியவர் அறையை அடைந்தான். பின் அங்கு இருந்த சிறிய அறையை அடைந்து தரை விரிப்பை அகற்றினான். மறைவுக் குமிழைத் திருகினான். கதவு திறந்தது. கோபி கமிஷனரையும் மற்றவர்களையும் அழைத்துக் கொண்டு படியில் இறங்கினான். அங்கிருந்த 'ஸ்விட்ச்'சைப் போட்டான். விளக்குகள் பிரகாசமாக எரிந்தன. கோபி பெட்டிகளைச் சுட்டிக்காட்டினான். அதிகாரி பெட்டிகளைச் சோதித்துப் பார்த்தார். எல்லாம் அயல் நாட்டுச் சரக்குகள். அவரது முகம் மகிழ்ச்சியில் பூரித்தது. அவர் கோபியைத் தட்டிக் கொடுத்தார்.

''சபாஷ் தம்பி. நீ பெரிய சாதனை புரிந்திருக்கிறாய். கெட்டிக்காரன். நீ. உனக்கு அரசாங்கம் பரிசளித்துக் கௌரவிக்கும்'' எனப் பாராட்டினார்.

கோபிக்கு மிக்க மகிழ்ச்சி. ''அப்பாடா'' ஒரு பெரிய பாரம் விட்ட மாதிரி நிமிர்ந்தான். அவன் ஆனந்தத்திற்கு அளவே இல்லை. அவனும் நல்லதொரு உதவி செய்துவிட்டான் அரசாங்கத்திற்கு. 'இனி இம்மாதிரியே தொடர்ந்து நல்லவனாக வாழவேண்டும்'' என்று முடிவு செய்துகொண்டான்.

மறுதினம் செய்தித்தாளில் கோபியின் சாதனையைப் பற்றி வரிக்கு வரி புகழ்ந்து எழுதி இருந்தார்கள். அவனது தைரியத்தை, துணிச்சலை எல்லோரும் பாராட்டினார்கள். கோபி அப்போது தன் பெற்றோர்களையும், ஆசிரியரையும் நினைத்துக் கொண்டான். 'இந்தப் புகழ்ச்சியை அவர்கள் கேட்

டால், எப்படி மகிழ்வார்கள்?' என எண்ணி ஏங்கினான்!

மறுநாள், போலீஸ் கமிஷனர் கடத்தல் பொருட்களைக் கண்டுபிடிக்க உதவியதற்காகக் கோபிக்கு ஐந்நூறு ரூபாய் பரிசாகக் கொடுத்தார். ஆனந்தக் கண்ணீர் பெருகப் பணத்தைப் பெற்றுக் கொண்டான்.

அன்று இரவு கோபி சோகமாக அமர்ந்திருந்தான்.

''கோபி என்ன வருத்தம்'' ராஜன் வினவினான்.

''ராஜன், நானும் கூலி வேலை செய்யப் போகிறேன். அப்போதுதான் என் மனம் நிம்மதி அடையும்'' என்றான் கோபி.


''நீ கூலி வேலை செய்ய வேண்டாம் கோபி. இப்போது கிடைத்த பணத்துடன் நீ ஊர் திரும்பி உன் அப்பா, அம்மாவைப் பார். அவர்கள் பாவம், எந்த நிலையில் இருக்கிறார்களோ! எனக்கு நல்ல வசதி கிடையாது. ஆதலால், பகலில் கூலி வேலை செய்து, இரவில் பள்ளிப் படிப்புப் படிக்கிறேன். ஆனால், உன் நிலை அப்படி அல்ல. நீ உன் தந்தையின் முயற்சியால் பெரிய படிப்பாளியாகலாம். அவர்கள் உள்ளம் குளிர நீ நடந்து கொள். அதுதான் உன் வருங்கால வாழ்க்கைக்கு நல்லது'' என்று அன்பொழுகக் கூறினான் ராஜன்.

கோபிக்கு ராஜன் சொல்வதும் சரியாகப் பட்டது. 'என் வயதே உள்ள ஒரு சிறுவன் எத்தனை அறிவுடனும் பெற்றோரிடம் பாசத்துடனும் இருக்கிறான். என் புத்தி மட்டும் ஏன் அப்படி இல்லை?'' என நினைத்தான்.

''ராஜன். நீ சொல்வதும் சரிதான். இருந்தாலும் உன்னை விட்டுப் பிரிய மனமில்லையே!'' என்று தழுதழுத்த குரலில் கூறினான். கண்கள் பனித்தன.

''கோபி, நீ சொன்ன சொல்லை நினைத்துப் பார். ஒரு வாரம் பழகிய என்னை விட்டே உன்னால் பிரிய முடியவில்லை. ஆனால், பதினான்கு வருடம் உன்னைப் பாசத்துடன் பெற்று வளர்த்தவர்களை ஒரே நொடியில் உதறிவிட்டு வந்தாயே! அந்த அன்பு உள்ளங்கள் என்ன பாடுபடும்? யோசித்தாயா? நினைத்துப் பார் கோபி.''

கோபி கண்ணீருடன் ராஜனின் கைகளைப் பற்றினான். ''உண்மைதான் ராஜன். இன்றே நான் ஊருக்குப் போய், தாய், தந்தையரிடம் மன்னிப்புக் கேட்கிறேன், ராஜன், உன்னால்தான் நான் நல்லவனாக மாறினேன். உன்னை எப்போதும் மறக்கவே மாட்டேன்!'' என்று உணர்ச்சியுடன் கூறினான்.



நம்நாட்டில் இல்லையே!

வியன்னாவில் டெலிபோன் இலாகா குழந்தைகளுக்காக ஓர் அன்புப்பணி செய்கிறது. சிறுவர்கள் ஓர் எண்ணைச் சுழற்றித் தங்களுக்கு உள்ள சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளலாம், பள்ளிப் பாடம் உள்பட. இளைஞர் கழகம் ஒன்று இப்பணியைச் செய்கிறது. லீவு நாளிலோ சாயங்காலமாகவோ டெலிபோன் செய்தால் டேப் ரிகார்டரில் பதிவு ஆகிறது. பிறகு பதில் சொல்கிறார்கள். —ஜெயா வி. ராமன்

கோபியை அன்புடன் தழுவிக் கொண்டான் ராஜன். ''கோபி! நீ ஊருக்குப் போவதைக் குறித்து எனக்கும் வருத்தம்தான். நாம் எப்போதாவது சந்திக்காமலா போய் விடுவோம்? கட்டாயம் நீயே உயர்ந்த பதவிக்கு வந்து பெரிய ஆபீஸராகவோ, போலீஸ் அதிகாரியாகவோ இந்த ஊருக்கே வந்து விடுவாய். அப்போது உன்னை வந்து நான் பார்ப்பேன்'' என்று நம்பிக்கையுடன் கூறினான். கோபி சிரித்தபடி, ''அடேயப்பா, அவ்வளவு நாளாகுமா நாம் திரும்பவும் சந்திக்க?'' என்றான்.

''ஆமாம். நீ என்னை மறந்து விடாதே!'' என்றான் ராஜன். ''உன்னை மறக்கவே முடியாது ராஜன்'' என்ற கோபி தனக்குப் பரிசு கிடைத்த பணத்தில் நூறு ரூபாயை எடுத்து ராஜனிடம் கொடுத்தான். ராஜன் வாங்க மறுத்தான். கோபி விடவில்லை. பிறகு, அரை மனத்துடன் பணத்தைப் பெற்றுக் கொண்டான்.

மறுதினம் கோபி, ராஜனின் பெற்றோரிடம் விடைபெற்றுக் கொண்டு மகிழ்ச்சியுடன் ஊருக்குக் கிளம்பினான். ராஜன் கோபியுடன் ரயில் நிலையத்திற்குச் சென்றான். ரயிலில் ஏறிய

கோபிக்குப் பிரியாவிடை கொடுத்தான் ராஜன்.

சோகமே உருவாகக் கட்டிலில் கிடந்தாள் கோபியின் தாய். அவள் வாய் 'கோபி, கோபி' என்று புலம்பியது.

''அம்மா!'' என்ற குரல். கன்றின் குரல் கேட்ட தாய்ப் பசுவைப்போல் துள்ளி எழுந்தாள்.

''யார், கோபியா? கோபியின் குரலேதான்! கோபி! கோபி!'' பாசத்துடன் கூவினாள் தாய்.

''உனக்கு என்னவாகி விட்டது? போன பயலுக்குப் பாசம் கிடையாது. உன் நினைவெல்லாம் கோபி மீதுதான். எந்த சப்தம் கேட்டாலும்

அஹிம்சை என்றால் என்ன?

பலாத்காரம், ஹிம்சை, கொடுமை, என்றால் நாம் எப்பொழுதும் கத்தியையோ, துப்பாக்கியையோதான் நினைத்துக் கொள்கிறோம். ஆனால், உண்மையில் நாம் நம் நாக்கினாலும், நம் நடத்தையினாலுமே அதிகக் கொடுமைகளைச் செய்கிறோம். நாம் ஒருவருடன் ஒருவர் பழகும் விதத்திலேயே, அன்பினாலேயே, ஒரு புன்சிரிப்பினாலேயே ஹிம்சை செய்வதைத் தவிர்த்துச் சமாதானத்திற்கு அடிக்கல் நாட்ட வேண்டும்.

—மதர் தெரசா.

அனுப்பியவர்: ஜெயா வி. ராமன்

'கோபி கோபி' என்கிறாயே?'' என்று கூறி அவளைப் படுக்க வைத்தார் கோபியின் தந்தை. பின்பு ''உன் உடம்பு தேற வேண்டுமானால் அவனை நினைக்காதே!'' என்றார்.

''ஐயோ, அவனை நினைக்காமல் எப்படி இருப்பேன்? என் குழந்தை எப்படி எங்கே கஷ்டப்படுகிறானோ? கோபி, என் ராஜா!'' என்று துடித்தாள்.

கதவு தட்டும்ஓசையைத்தொடர்ந்து, ''அம்மா'' என்ற குரல். ''ஐயோ! கோபியின் குரலேதான்! என் கோபிதான் வந்து விட்டான்!'' என்று திரும்பவும் எழுந்து உட்கார்ந்தாள். அதற்குள் கோபியின் தந்தை வாசற் கதவைத் திறந்தார். அங்கே கோபிதான் நின்று கொண்டிருந்தான். ''அப்பா!'' என்று அலறியபடி தந்தையின் கால்களில் விழுந்தான். ''என்னை மன்னித்து விடுங்களப்பா. இனி நான் நல்லவனாக நடந்து கொள்வேன்'' என்றவன் எழுந்து ஒரே பாய்ச்சலாகத் தாயை அடைந்தான்.

''அம்மா!'' என்றபடி தாயை அணைத்துக் கொண்டான்.

''கோபி, கண்ணே கோபி'' என்று பூரிப்புடன் பல முறை கூறினாள் அம்மா. பிரிந்தவர் கூடினால் பேசவும் வார்த்தை உண்டோ?

''அம்மா''...

''கோபி''

''அம்மா நான் பழைய கோபி இல்லை. புதியவனாகத் திரும்பி இருக்கிறேன். உன் பழைய கோபி செத்து விட்டான். இதோ உன் முன்னால் இருப்பவன் படித்து வாழ்க்கையில் முன்னேறப்போகும் புதிய கோபி! அற்பத்தனமாக, அதிக ஆசைகளுக்கு இடம் தரமாட்டேன். நம்மை விட உயர்ந்தவர்களைப் பார்த்து 'அந்த வசதிகள் நமக்கு இல்லையே!' என ஏங்காமல், அதுபோல் நாமும் உயர வேண்டுமென்ற நோக்கத்துடன் நன்றாகப் படித்து அதிக மதிப்பெண் வாங்குவேன். பழைய சோறு இல்லாவிட்டாலும் பட்டினி கிடந்தாவது படித்து முன்னேறுவேன். இது சத்தியம்'' என்று உணர்ச்சியுடன் கண்ணீர் மல்கக் கூறிவிட்டு, ''அப்பா, அம்மா, என்னை மன்னிப்பீர்களா?'' என்றான்.

''கட்டாயம் உன்னை மன்னிப்போம். மேலும் நீயே எப்போது திருந்தினாயோ அப்போதே உனது லட்சியம் கட்டாயம் நிறைவேறும். பழையவற்றை மறந்து புதியவனாக, நல்லவனாக வாழ வேண்டும்'' என்று அன்புடன் கூறினார் தந்தை.

மறுதினம் ஆசிரியரைப் பார்த்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டான் கோபி. தன் அனுபவங்களைச் சுருக்கமாகக் கூறினான். ஆசிரியர் அவனைத் தட்டிக் கொடுத்தபடி, ''கோபி, உன் அனுபவம் மற்றக் குழந்தைகளுக்கும் ஒரு நல்ல பாடமாக இருக்கும். மாணவர்கள் உன் கதையைக் கேட்டாவது திருந்தி உத்தமராய், உலகம் போற்றும் வண்ணம் புகழுடன் வாழ வேண்டும். நீ நன்றாகப் படித்து முன்னுக்கு வர ஆசி கூறுகிறேன். நாளை முதல் பள்ளிக்கு வந்துவிடு'' என்று பிரியமாகக் கூறினார். கோபியும் ஆசிரியரின் கால்களைத் தொட்டு வணங்கி விடைபெற்றான்.





நேரு மாமாவும் 28ம்

நேரு மாமா பிறந்தபோது அவருடைய தந்தையாரின் வயது 28.

இந்திரா காந்தி பிறந்தபோது நேருஜியின் வயது 28.

நம் தேசத்திற்குச் சுதந்திரம் வேண்டி சுபாஷ் சந்திர போஸுடன் நேருஜி கூட்டறிக்கை வெளியிட்ட ஆண்டு 1928.

நேருஜியின் மனைவி கமலா நேரு காலமான தேதி: 1936ம் ஆண்டு பிப்ரவரி 28.

மனைவியை இழந்து தனிமையாக நேருஜி வாழ்ந்த ஆண்டுகள் 28.

1964 மே 27ம் தேதி காலமானாலும் அவரது பூதவுடல் எரியூட்டப்பட்டது மறுநாள் — அதாவது 1964 மே 28.

—த. அருள் சிவபாலன் (47)
செங்கற்பட்டு-2


படகு கவிழுமா?

குட்டி போடும் நிலையில் இருந்த ஒரு யானையைப் படகிலே ஏற்றிக்கொண்டு அக்கரை நோக்கிச் சென்றார்கள். அந்தப் படகிலே அதற்கு மேல் எதை ஏற்றினாலும் படகு தாங்காது கவிழ்ந்துவிடும்!

ஆனால் அக்கரையைப் போய்ச் சேருவதற்குள் அந்த யானை குட்டி போட்டுவிட்டது. படகு கவிழுமா, கவிழாதா?

விடை: கவிழாது. தாயின் வயிற்றுக்குள்ளிருந்த குட்டிதானே வெளியில் வந்திருக்கிறது? எடை எப்படிக் கூடும்?

பி. சதீஷ்குமார் (760)
செங்கற்பட்டு




எது? எது? எது?

1. அசைக்க முடியாத கை எது?
2. கண்கலங்க வைக்கும் காயம் எது?
3. பயணம் செய்யமுடியாத பஸ் எது?
4. பசியை நினைவூட்டும் மாதம் எது?
5. ஈக்கள் நடமாடும் ரோடு எது?

விடை: (1) நம்பிக்கை (2) வெங்காயம் (3) காம்பஸ் (4) ஐப்பசி (5) ஈரோடு.

—மு. வெங்கடாசலமூர்த்தி (472)
கணியூர்





எழுத்தாளரின் மகன்

பரீட்சை விடைத்தாளின் கடைசியில் எழுத்தாளருடைய மகன் இப்படி எழுதினான்:

''இந்த விடைகள் அனைத்தும் நான் சொந்தமாக எழுதியவையே; பக்கத்துப் பையனைப் பார்த்து எழுதியவை அல்ல''

—ஜி. நடராஜன் (126)
மதுரை-1




நாற்சொல் அலங்காரம்

அடுப்புச் சாதம் கொதிப்பதேன்?
அரிசி அன்னம் ஆவதேன்?
இலங்கை முன்பு அழிந்ததேன்?
இரும்புகூட உருகுவதேன்?

விடை: நெருப்பால்

—ப. தேவேந்திரகுமார் (1418)
சென்னை-7



கோல், கோல்!

அளப்பதற்கு அளவுகோல்.
அரசருக்குச் செங்கோல்.
கிழவர்க்கு ஊன்றுகோல்.
மந்திரவாதிக்கு மந்திரக்கோல்
மாணவருக்கு எக்கோல்?
மகிமை மிக்க எழுதுகோல்!


—வீ. ரமேஷ் (2586) சென்னை-18

உயிருக்கு ஆபத்து!

டாக்டர்: இத்தனை நாட்கள் எங்கிட்டே வைத்தியம் பார்த்துக் கொண்டதில் உங்க உடம்பு நன்றாகத் தேறிவிட்டது. ஆனாலும், ஒரு விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும். சிறு அதிர்ச்சி ஏற்பட்டால்கூட உங்கள் உயிருக்கு ஆபத்து!

நோயாளி: அப்படியானால் என் உயிர் உங்கள் கையிலேதான் இருக்கு. 'பில்' அதிகம் போட்டுடாதீங்க டாக்டர்!

எஸ். மாதவன் (204)
திருச்சி-14



வாசமுள்ள மலர்கள்

என் டைரியின் முதல் பக்கத்தை அலங்கரிக்கும் வாசமுள்ள மலர்கள்:

மலர்ந்த முகம், சாதாரண உணவையே விருந்தாக்கிவிடும்.

—இங்கிலாந்து

அடுப்புப் புகையும் இடத்தில் பிச்சைக்காரனுக்கு உரிய ஒரு பங்கு இருக்கிறது.

—எஸ்தோனியா

அன்பு என்பது என்ன?
மனித சமூகத்தை நேசித்தல்.
அறிவு என்பது என்ன?
மனித சமூகத்தை அறிதல்.

—கன்பூஷியஸ்

—டி. சுமதி (1125) மதுரை—3



ஓடும் காரணம்?

தெருவிலே ஒரு சிறுவனைத் துரத்திக் கொண்டு ஒரு நாய் ஓடியது. வழியிலே இதைப் பார்த்த பெரியவர் சிறுவனிடம் கூறினார்:

''தம்பி, உன் கையில் உள்ள ரொட்டியைப் பிடுங்கத்தான் நாய் துரத்துகிறது. தூக்கி எறி அந்த ரொட்டியை.''

பையன் ஓடிக் கொண்டே சொன்னான்:

''இது என்னுடைய ரொட்டி அல்ல: அந்த நாயினுடையதுதான்!''

—இரா. கார்த்திகைச் செல்வி (3132)
மதுரை-9



10 முறை 5=100

ராஜியிடம் அவன் நண்பன் சீனிவாசன் ஒரு கணக்குக் கொடுத்தான்:

''5 என்ற எண்ணைப் பத்து முறை தான் பயன்படுத்தலாம். வேறு எந்த எண்ணையும் பயன்படுத்தக் கூடாது. 5 என்ற எண்ணைப் பெருக்கலாம்; கூட்டலாம்; கழிக்கலாம்; வகுக்கலாம். ஆனால் விடை 100 வரவேண்டும்.''

ராஜிக்கு விடை தெரியவில்லை. சீனிவாசன் கணக்கைப் பிறகு போட்டுக் காட்டினான். எப்படி?

விடை:

$5 \times 5 = 25$
$5 \times 5 = 25$
$5 \times 5 = 25$
$5 \times 5 = 25$

$100 + 5 - 5 = 100$

—ச. நிரஞ்சன் (3057)
சென்னை-19



புதிய புத்தகம்

புத்தம் புதிய புத்தகம்
புதுமைக் கருத்துப் புத்தகம்
நித்தம் நித்தம் படித்துஎன்
நெஞ்சம் போற்றும் புத்தகம்

கவனமாகப் படித்துநான்
கல்வி அறிவில் தேறுவேன்
எவரும் எனக்கு நிகரில்லை
என்றே பெயரும் வாங்குவேன்!

—மு. செந்தில்வேலன் (141)
தேனி



எது? யார்?

1. வாயும் பற்களும் இல்லாமல் கடிப்பது எது?

2. பகல் முழுதும் வேலை செய்யாதவன்; ஆயினும் மாதா மாதம் சம்பளம் வாங்குவான். அவன் யார்?

விடை: (1) செருப்பு. (2) இரவுக் காவலாளி.

—எஸ். எஸ். முரளி (2606)
செங்கற்பட்டு-1

ஜவாஹர் மாம்பழம்!

ராஜ்கோட் நகரிலுள்ள பால பவனத்தில் 1960ஆம் ஆண்டு நேரு மாமா ஒரு மாஞ்செடியை நட்டு வைத்தார். அது இப்போது நன்றாக வளர்ந்து பூத்துக் காய்த்துப் பழங்கள் தந்துகொண்டிருக்கிறது.

அந்த மரத்துப் பழங்களுக்குக் குழந்தைகள் வைத்த பெயர் என்ன, தெரியுமா?

ஜவாஹர் மாம்பழம்!

—ஏ. பிரபு (641)
பரோடா.



Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543)

Editor: K. Rajendran


இந்திரா காந்தி
பிறந்தநாள்
நவம்பர்-19.


REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka

ஜீவனும் அனுவும்

எதிர் காலத் தொடர்புறவுத் துறைச் சாதனை பற்றி சிந்திக்கிறார்கள்

1988-க்குப்பின், லேஸர் கதிர்களை கண்ணாடி இழைகள் வழியே செலுத்து வதன் மூலம் அட்லாண்டிக் கடல் கடந்து போன் பேசுவது சாத்தியமாகும்.

லேஸர் (அதி தீவிர ஒளி), மின்னலை, ரேடியோ அலைகளை விட அதிகச் செய்தியை ஒளிபரப்பும். இந்த கண்ணாடி இழைகள், நொடிக்கு 560,000,000 ''துண்டு''ச் செய்திகளை எடுத்துச் செல்ல முடியும்: அதாவது ஒரே சமயம் 40,000 போன் உரையாடல்கள் !




ரேடியோ அலைகளுக்குப் பதில், ஒளியை உபயோகித்து, ஒரே சமயம் 1000 லட்சம் டிவி சானல்களில் தொலைக்காட்சியை ஒளிபரப்பலாம். கீழ்க் கண்ட வகையில்




லேஸர் கதிர்களை டிவி ரிஸிவருக்குள் உபயோகித்து பிம்பங்களை வெளியிட லாம். லேஸர் துப்பாக்கி ஒன்று, தீவிர வெள்ளொளிக் கதிரை ஒரு ப்ரிஸத்தினுள் செலுத்தும். இக் கதிர், சிவப்பு, நீலம், பச்சை என மூவண்ணமாகப் பிரியும். மற்றொரு ப்ரிஸம், இவ் வண்ணங்களை குறிப்பிட்ட வண்ணக் கலவையில் ஒரு குறுகிய கதிராகச் சேர்க்கும். இது ஒரு நொடியில், பல்லாயிரக் கணக்கான முறை மாறும்!

இக்குறுகிய கதிர், திரை மீது, நம்ப முடியாத வேகத்தில் இயங்குவதால் முழு பிம்பமும் 'தீட்டப்படும்.' அந்த உச்ச வேகத்தில் திரை முழுவதும் தொடர்ந்து ஒளியூட்டப் படுவதுபோல் தோன்றும். விளைவு : பளிங்கு போன்ற அழகிய பிம்பம், நுண்ணிய கண் அறுவை சிகிச்சை, ராணுவத்தில் சக்தி வாய்ந்த குறி தவறாத ஆயுதம், கனரக தொழிற் துறையில் உலோகங்களை உருக்க என லேஸர் பல வகைகளில் பயன்படும். வெண்ணெயில் பாயும் கத்திபோல் லேஸர் ஸ்டீலைக்கூட வெட்டும்.

ஒரு போர்ட்டபிள் டிரான்ஸீவர் உபயோகித்து, எதிர் காலத்தில், உலகில், எங்கும், யாருடனும் பேசலாம். விண்வெளியில் வலம்வரும் நூற்றுக் கணக்கான செயற்கைக் கோள் களில் உள்ள எந்த டிரான்ஸீவருடனும் அது இணைப்புக் கொள்ளும். ஒவ்வொரு நாட்டுக்கும் நபருக்கும் ஓர் அடையாள எண் இருக்கும். லட்சக் கணக்கான இந்த எண்கள், கைகக அளவு கம்ப்யூட்டர்களுக்குள் அடங்கிவிடும். இவையே டைரக்டரிகளாகப் பயன்படும் !





உங்கள் எதிர்காலத்தை பாதுகாக்க மிக பத்திரமானதும் நிச்சயமானதுமானவழி ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் ஒன்றே. அதைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

1983 WORLD COMMUNICATIONS YEAR

daCunha/LIC/144/83 TM